# முன்னுரை

"மின்னுவதெல்லாம் பொன்னல்ல; வெளுத்தது எல்லாம் பால் அல்ல" என்று சொன்னால் அதை உடனடியாக ஆமோதிக்கிறோம். ஆனால், ஏறெடுக்கப்படும் ஆராதனைகள் எல்லாம் ஆராதனையல்ல என்று சொன்னால் முகம் சுளிக்கிறோம்.

பொன்னுக்கும், பாலுக்கும் விசேஷித்த குணங்கள் உண்டு என்று நம்பும் நாம், ஆராதனைக்கென்று ஒழுங்குகளும், கட்டளைகளும் உண்டென்பதை நம்புவதில்லையே, ஏன்? பரிசுத்த வேதாகமம் தேவன் விரும்பும் ஆராதனை எப்படியிருக்க வேண்டுமென்று எதுவுமே சொல்லவில்லையா? எதுவும் சொல்லாமலே, அவர் தன்னை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறாரா? இல்லை. இல்லவே இல்லை.

கிறிஸ்துவின் காலத்தில், வாழ்ந்து கொண்டிருக்கும் நாம், அவரை எப்படி ஆராதிக்க வேண்டுமென்று, திட்டமும் தெளிவுமாக, தேவன் புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தியுள்ளார். ஒரு ஆராதனை தேவனால், சுகந்த வாசனையாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்றால், புதிய ஏற்பாட்டு உபதேசத்தி லிருந்து இம்மியும் பிசகாமல் அது இருக்க வேண்டும்.

ஆகவே, தேவனை நேசிக்கும் ஒவ்வொரு பிள்ளையும், புதிய ஏற்பாட்டு உபதேசங்களின்படியாக அவரை ஆராதித்து, அவரால் வாக்களிக்கப்பட்டிருக்கும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற பெருநோக்கோடும், முடிவிலே நித்திய ஜீவனுக்குப் பங்காளிகளாக மாற வேண்டுமென்ற முழு வாஞ்சையோடும் இந்நூல் வெளிவருகிறது.

இப்புத்தகம் வெளி வருவதற்கு, எல்லா வகையிலும் எனக்கு நேசக்கரம் நீட்டி, அடியேனின் இலக்கியப் பணியில் என்னை வெகுவாக ஊக்குவித்து, ஏற்றுக் கொண்ட பணியினை

நேர்த்தியாகச் செய்வதற்கு பெருமளவு உதவி வரும் அன்பிற்குரிய சகோ. J.C. சோட் அவர்களுக்கு, நான் மிகவும் கடமைப் பட்டுள்ளேன். இந்திய மக்களின் ஆன்மீகத் தேவைகள், முறையாகச் சந்திக்கப்பட வேண்டுமென்று திட்டமிட்டு, அவை நிறைவேற, பல வகையிலும் அரும்பாடுபட்டு வரும் இச்சகோதரனை, தேவன் தாமே மென்மேலும் பெலப்படுத்து வாராக!

மேலும், நமது தாய்மொழியில் இந்நூல் வந்து சேர, தமிழாக்கப் பணியில் பெரும் பங்காற்றியவர் சகோ. S.S. ராஜன் அவர்கள். புதிய ஏற்பாட்டு உபதேசங்களடங்கிய ஆங்கில நூல்களை தமிழாக்கம் செய்வதில் இவரின் பணி குறிப்பிடத்தக்கது. இப்பணியை இவர், இன்னும் சிறப்பாகச் செய்யும்படியாய், கர்த்தர் தாமே இவரை ஆசீர்வதிப்பாராக!

வேறொன்றையும், இங்கு என்னால் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. "திருமறை ஆசானின்" முன்னாள் ஆசிரியரும் காலஞ்சென்ற எனது தந்தையுமான E.Z. செல்வநாயகம் அவர்கள், ஆங்கிலத்தில் மட்டுமே உள்ள புதிய ஏற்பாட்டு உபதேசங் களடங்கிய பலநூல்கள் தமிழ் மொழியில் வெளியாக வேண்டுமென்று பெரிதும் விரும்பிப் பாடுபட்டார். ஒருவேளை, அவருடைய நாட்களில் அவை நிறைவேறாவிட்டாலும், அவர் எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாகவே இப்பொழுது இந்நூல் வெளிவருகிறது. தமிழ் உலக மக்கள் பயன்பெற வேண்டுமென்ற அவரின் இந்த நியாயமான ஆசை, இன்னும் அதிக அளவில் நிறைவேற பரலோகத்தின் தேவன் இரக்கங் கட்டளையிடுவாராக!

ஆகஸ்ட், 15, 1997
காங்கேயம் - 638 701

கிறிஸ்துவின்
இராஜ்ஜியத்தின் விரிவாக்கப் பணியில்
**S. ராஜநாயகம்**

# ஆசிரியர் உரை

ஒவ்வொரு கிறிஸ்தவனும் தேவனை ஆராதிக்க வேண்டும். இதைக், கண்டிப்பாக எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். இப்பொழுது இங்கே ஒரு பெரும் கேள்வி எழுகிறது. எப்படி ஒருவன் ஆராதிக்க வேண்டும்? இந்தக் கேள்விக்கு நாம் சரியான விடை காண புதிய ஏற்பாட்டுக்குப் போக வேண்டுவது அவசியம். அதைத் தான் நாம் வரும் பாடங்களில் முயற்சிக்க உள்ளோம். நீங்கள், எங்களோடு சேர்ந்து கற்றுக் கொண்டால், நம் ஒவ்வொருவரிடமிருந்தும், தேவன் எந்தவிதமான ஆராதனையை எதிர்பார்க்கிறார் என்பதைத் தீர்மானிக்க முடியும்.

தேவன் தமது வசனத்தைக் கொடுத்து, அவைகளில் தனது திருச்சித்தத்தை வெளிப்படுத்தியுள்ளார். இரட்சிப்பின் திட்டம், சபை, கிறிஸ்தவ வாழ்க்கை அல்லது ஆராதனை இப்படி எதைப் பற்றி தேவன் பேசினாலும், அவை எல்லாமே வேத வசனங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. நம்மெல்லாருக்கும் ஒரே மாதிரியான வசனத்தை அவர் கொடுத்துள்ளதாலும், அவ்வசனங்கள் அவருடைய சித்தத்தை எல்லோருக்கும் ஒரே மாதிரியாக வெளிப்படுத்துவதாலும் அவைகள் பாவம் என்ற ஒரே மாதிரியான பிரச்சினையைக் குறித்துச் சொல்வதாலும் அந்தப் பாவ பிரச்சினைக்கு ஒரே பரிகாரமாக, கிறிஸ்துவின் நற்செய்தி இருப்பதாலும், அந்த சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிகிற எல்லோரையும் இரட்சித்துத் தமது சபையில் சேர்ப்பதாலும், அப்படி சேர்க்கப்பட்ட ஒவ்வொரு கிறிஸ்தவனும், அவரை ஆராதிக்க வேண்டுமென்று சொல்லப்படுவதாலும், அவரை ஆராதிப்பவர்கள் அனைவரும் ஒரே மாதிரியாகவே ஆராதிக்க வேண்டும் என்பதே தர்க்க ரீதியாக சரியானதாக இருக்க முடியும் - தமது வசனங்களில் அப்படித்தான் அவர் சொல்லியும் உள்ளார்.

அப்படியானால், இவ்வுலகில் ஒரே மாதிரியான ஆராதனை முறைதான் இருக்க வேண்டும். அது கர்த்தர் தமது வசனத்தில் வெளிப்படுத்தினபடி இருக்க வேண்டும். ஒருவேளை ஆராதிப்பதற்கு, இடங்கள் பல இருக்கலாம். ஆனால், எங்கு கூடி ஆராதித்தாலும், ஒரே மாதிரியாகவே ஆராதிக்க வேண்டும். அதாவது, ஒருவன் ஆராதனை நடக்கும் ஓரிடத்திற்குச் சென்றால், அவர்கள் குறிப்பிட்ட மாதிரியின் படியாக ஆராதிப்பதை, அவன் அங்கே காண வேண்டும். அவன் வேறொரு இடத்திற்குச் சென்றாலும், அங்கும் அதே மாதிரியாகவே ஆராதிப்பதைக் காணவேண்டும். அதைப்போலவே, உலகம் முழுவதிலும், ஆராதனை நடக்கும் எல்லா இடங்களிலும் இருக்க வேண்டும்.

ஆனால், நம்முடைய நாட்களில் அது உண்மையாக இருப்பதில்லை. ஒரு கூட்டம் ஒரு மாதிரியாகவும், வேறொரு கூட்டம் வேறு மாதிரியாகவும், இன்னும் பலவிதமாகவும் நிலைமை உள்ளது. இதிலே யார் செய்வது சரி, யார் செய்வது தவறு? இன்னும் ஒரு முறையாக இங்கே தான் வேத வசனம் குறுக்கிடுகிறது. தேவன் எந்த வகையான ஆராதனையைக் கேட்கிறார் என்பதை வேத வசனங்களுக்குள் சென்றால், நாம் துல்லியமாக அறிந்து கொள்ளலாம். தேவன் என்ன எதிர்பார்க்கிறார் என்று நாம் ஒரு முறை தெரிந்து கொண்டால், அதற்கு நம்மை கட்டாயம் கீழ்ப்படுத்த வேண்டும். மேலுமாக, ஒருவரோ அல்லது பலரோ அவருடைய சித்தத்திற்கு மாறாக ஆராதிப்பதை நாம் கண்டால், அவர்கள் தவறாக ஆராதிப்பவர்கள் என அடையாளம் காணவேண்டும். உதாரணமாக, அப்போஸ்தலர் 17-ம் அதிகாரத்தில், அத்தேனே பட்டணத்தார் ஆராதித்து வந்தார்கள். ஆனால், அதை அறியாமையால் செய்து வந்தார்கள். இன்னும், மனிதருடைய கொள்கைகளையும், கட்டளைகளையும் பின்பற்றுவதன் மூலம், வீணாய் தேவனை ஆராதிக்க முடியும் என்று கர்த்தர் சொல்லியுள்ளார். இது உண்மையானால், ஆராதிப்பதில் சரியான வழிமுறையும், தவறான வழிமுறையும் உள்ளது என மீண்டும்

சொல்கிறோம். ஆராதனையில், சரியான உண்மையான வழிமுறையை தெரிந்துகொண்டு, அந்த மாதிரியின் அடிப்படையில் அதை அமைத்துக் கொள்வது தான் இந்தப் பாடங்களின் நோக்கம். அப்பொழுது தான் நாம் தேவனை உண்மையோடும், ஆவியோடும் ஆராதிக்கிறோம் என்ற நம்பிக்கையை நமக்குள்ளாக பெற்றுக் கொள்ள முடியும்.


**J.C. சோட**

கிறிஸ்துவின் சபை

விநோனா, மிஸிஸிப்பி

அமெரிக்கா.


21-1-1982.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| பாடம் ஒன்று | ஆராதனையின் அர்த்தம் | 1 |
| பாடம் இரண்டு | ஆராதிப்பவன் | 7 |
| பாடம் மூன்று | நாம் யாரை ஆராதிக்க வேண்டும்? | 15 |
| பாடம் நான்கு | ஆராதனை வகைகள் | 21 |
| பாடம் ஐந்து | ஆதிக்கிறிஸ்தவர்களின் ஆராதனை | 28 |
| பாடம் ஆறு | ஆராதனையின் நாள் | 36 |
| பாடம் ஏழு | ஆராதனையின் மாதிரி | 43 |
| பாடம் எட்டு | வேதாகமக் கல்வி | 51 |
| பாடம் ஒன்பது | ஜெபம் | 58 |
| பாடம் பத்து | பாட்டு | 66 |
| பாடம் பதினொன்று | கர்த்தரின் பந்தி | 74 |
| பாடம் பனிரெண்டு | கொடுத்தல் | 81 |
| பாடம் பதிமூன்று | சபை கூடி வருதல் | 90 |

பாடம் - ஒன்று

# ஆராதனையின் அர்த்தம்

ஆராதிப்பது அல்லது தொழுதல் என்றால், வேதாகமத்தின்படி, ஊழியஞ்செய்தல், துதித்தல், கனம் செய்தல், மகிமைப்படுத்துதல், பக்தி செலுத்துதல் எனப் பொருள். அது அர்த்தமுள்ள ஆராதனையாக இருக்க வேண்டுமென்றால், ஆராதனையை ஏற்றுக் கொள்ளுகிறவர் நிர்ணயித்தபடியே ஒரு புத்தியுள்ள ஜீவன் அதைச் செய்ய வேண்டும்.

## 1. ஊழியத்தின் மூலம் நாம் ஆராதிக்கிறோம்

ஊழியம் என்றால் இங்கு உதவி செய்தல், கீழ்படிதல், பணிசெய்தல், தொழுதல் எனப்படும். தேவனுடைய பிள்ளையை ஊழியக்காரனாகவும், கர்த்தரை அவனுடைய எஜமானாகவும் வேதாகமம் சித்தரிக்கிறது. பவுல் தன்னைத்தானே ஒரு ஊழியக்காரனாக மீண்டும் மீண்டுமாக சித்தரித்துள்ளார். "இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரனும், அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனும், தேவனுடைய சுவிசேஷத்திற்காகப் பிரித்தெடுக்கப்பட்ட வனுமாகிய பவுல் (ரோமர் 1:1) என அவர் கூறினார். பேதுருவும், யாக்கோபும் இவ்வாறு கூறினர். (2 பேதுரு 1:1; யாக்கோபு 1 : 1) இவர்கள் எல்லோரும் இப்படிக் கூற காரணம் என்ன? தங்களுடைய சகலவற்றையும் கர்த்தருக்கு அர்ப்பணித்து, அவருக்கு இப்போது ஊழியஞ் செய்வதை இவ்வாறு குறிப்பிட்டனர். நாமும் அவ்வாறே செய்ய வேண்டும். "இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்திய ஜீவன்" (ரோமர் 6:22) என பவுல் கூறினார்.

எவ்வாறான ஊழியத்தை கர்த்தர் விரும்புகிறார் எனப் பார்க்க, கீழ்க் கண்ட வேத வசனங்களை நாம் கவனிக்க வேண்டும். "வெகு மனத்தாழ்மையோடும், மிகுந்த கண்ணீரோடும் யூதருடைய தீமையான யோசனைகளால் எனக்கு நேரிட்ட சோதனைகளோடும், நான் கர்த்தரை சேவித்தேன்". (அப். 20:19) "உங்கள் நன்மை தூஷிக்கப்பட இடங்கொடாதிருங்கள். தேவனுடைய இராஜ்யம் புசிப்பும், குடிப்புமல்ல, அது நீதியும், சமாதானமும், பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது. இவைகளிலே கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்கிறவன் தேவனுக்குப் பிரியனும் மனுஷரால் அங்கீகரிக்கப் பட்டவனுமாயிருக்கிறான். ஆனபடியால் சமாதானத்துக் கடுத்தவைகளையும், அந்நியோந்நிய பக்தி விருத்தி உண்டாக்கத் தக்கவைகளையும் நாடக் கடவோம்." (ரோமர் 14 : 16 - 19) அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ் செய்யுங்கள்". (ரோமர் 12 : 11).

நாம் செய்ய வேண்டிய ஊழியத்தைப் பற்றி பவுல் எழுதுகிறார். "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை". (ரோமர் 12:1) "மனுஷருக்கென்று ஊழியஞ்செய்யாமல், கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ் செய்யுங்கள். (எபே. 6:8) தியத்தீரா சபைக்குக் கர்த்தர் கூறும்போது, "உன் கிரியைகளையும், உன் அன்பையும், உன் ஊழியத்தையும், உன் விசுவாசத்தையும், உன் பொறுமையையும், நீ முன் செய்த கிரியைகளிலும் பின்பு செய்த கிரியைகள் அதிகமாயிருக்கிறதையும் அறிந்திருக்கிறேன்" (வெளி. 2 : 19) என்றார்.

ஆராதனை ஊழியத்தைப் பற்றி நாம் அடிக்கடி பேசுகிறோம். ஆம், கர்த்தருக்கு நாம் ஊழியஞ் செய்கிறோம் என்ற

வகையில் இது சரியே. வேறு கருத்தில் கூறும்போது, நமது வாழ்க்கை முழுவதும் தேவனுக்கு ஊழியஞ் செய்வதில் கழிகிறது. இவ்விதமாக நமது வாழ்வை அவரை ஆராதிப்பதில் நாம் செலவழிக்கிறோம். ஆனால், நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படியவும், அவருடைய வசனத்தின்படி செய்யவும் தவறுவோமானால், எப்படி நாம் ஞாயிற்றுக் கிழமைகளிலும், நம்முடைய வாழ்நாளிலும் அவரை ஆராதிப்போம் என நம்பமுடியும்?

## 2. கர்த்தரைத் துதித்து நாம் அவரை ஆராதிக்கிறோம்.

பவுலும், சீலாவும் சிறையில் அடைபட்டிருந்த வேளையில், "நடுராத்திரியிலே பவுலும், சீலாவும் ஜெபம் பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள். காவலில் வைக்கப்பட்டிருந்தவர்கள் அதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்", (அப் 16 : 25) என வேதாகமம் அறிவிக்கிறது. கர்த்தர் நம்மை எவ்வாறு ஆசீர்வதித்துள்ளார் என்பது பற்றியும், நாம் அவருக்கு செய்ய வேண்டிய கடமைகள் பற்றியும் பவுல் பேசும்போது, "மேலும் கிறிஸ்துவின் மேல் முன்னே நம்பிக்கையாயிருந்த நாங்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாயிருக்கும்படிக்கு" தெரிந்து கொள்ளப்பட்டோம் என்று எழுதுகிறார். (எபே. 1:11) மீண்டுமாக நாம் படிக்கிறோம். ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரப் பலியை அவர் மூலமாக எப்போதும் தேவனுக்குச் செலுத்தக் கடவோம்." (எபி. 13:15) பேதுரு கூறுகிறார்; "அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும், அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுக்கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப் படும்". (1 பேதுரு 1:7) "ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்; ஒருவன் உதவி செய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக் கடவன்; எல்லா வற்றிலேயும் இயேசுக் கிறிஸ்து மூலமாய்த் தேவன் மகிமைப்

படும்படியே செய்வீர்களாக; அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயி ருப்பதாக" (1 பேதுரு 4 : 11).

நமது சகல செயல்களிலும் வார்த்தைகளிலும் தினமும் கர்த்தரைத் துதிக்க வேண்டும். முக்கியமாக, நாம் கர்த்தருடைய நாளிலே ஆராதிக்கக் கூடிவரும்போது, குறிப்பாக அவரைத் துதிக்க வேண்டியே நாம் கூடிவருகிறோம். கூடுவதின் மூலமாகவும், இறுதியாக நாம் கூடியிருக்கையில் செய்யும் காரியங்களின் வழியாகவும் அவரை நாம் ஆராதிக்கிறோம். நமது இருதயங்களைத் தாழ்த்தி, நமது வேதவாசிப்பு, ஜெபம், பாடல், கொடுத்தல், கர்த்தரின் பந்தியில் கலந்து கொள்ளுதல் மூலமாக நாம் அவரை ஆராதிக்க வேண்டும். இவற்றை நாம் செய்ய மறுத்தால், நாம் எப்படி அவரை ஆராதிக்க இயலும்?

### 3. கர்த்தரை கனப்படுத்தி நாம் அவரை ஆராதிக்கிறோம்

"குமாரனைக் கனம் பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம் பண்ணாதவ னாயிருக்கிறான்" (யோவான் 5 : 23) என இயேசு கூறினார். "நித்தியமும் அழிவில்லாமையும், அதரிசனமுள்ள ராஜனுமாய், தாம் ஒருவரே ஞானமுள்ள தேவனு மாயிருக்கிறவருக்கு, கனமும் மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக ஆமென்" (1 தீமோ. 1:17) என்று பவுல் எழுதினார்.

நம்மை இரட்சித்திருப்பவரும், ஆசீர்வதிப்பவரும், ஒரு நல்வாழ்க்கையின் நம்பிக்கையை நமக்கு அளிப்பவருமாகிய கர்த்தரை, நாம் கனம் செய்யக் கடமைப்பட்டுள்ளோம்.

### 4. கர்த்தரை மகிமைப்படுத்தி நாம் அவரை ஆராதிக்கிறோம்.

மகிமைப்படுத்துவது என்றால் புகழ்தல், கனப்படுத்துதல், துதித்தல் எனப் பொருள். ஆராதனையின் அர்த்தத்திற்கு இவை ஒத்துப் போகின்றன. இக்கருத்தை வலுப்படுத்தும் சில வசனப்பகுதிகளை நாம் மீண்டுமாகக் கவனிப்போம்: "நீங்கள்

ஒரு மனப்பட்டு நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனை ஒரே வாயினால் மகிமைப்படுத்தும்படிக்கு, பொறுமையையும், ஆறுதலையும் அளிக்கும் தேவன், கிறிஸ்து இயேசுவினுடைய மாதிரியின்படியே,, நீங்கள் ஏக சிந்தையுள்ளவர்களாயிருக்கும்படி உங்களுக்கு அநுக்கிரகம் செய்வாராக". (ரோமர் 15 ; 5 : 6).

"கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்" (I கொரி 6:20)" ஒருவன் கிறிஸ்தவனாக இருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக் கடவன்" (1 பேதுரு 4:16) சகலவற்றிற்கும் நாமே காரணம் என பெருமை பாராட்டுவதை விடுத்து சகல காரியங்களிலும் தேவனை முன்னிலைப்படுத்தி, அவரைப் புகழ்ந்து, கனப்படுத்தி, அவர் நாமத்தை மகிமைப்படுத்துவதே நமது வாழ்வின் லட்சியமாக இருக்க வேண்டும். அவரோடு நம்மை ஒப்பிடும்போது நாம் ஒன்றுமில்லை. கர்த்தரின் நாளில் நாம் கூடி வருவதின் நோக்கம், நமது சிந்தனை முழுவதையும், அவரை நோக்கிச் செலுத்தவும், இவ்வாறாக அவரை ஆராதிக்கவும் தான்.

# கேள்விகள்

1. இப்பாடத்தின் பொருளை எழுதுக?
2. ஆராதனை என்ற வார்த்தையை விளக்குக?
3. ஆராதனை அர்த்தம் உள்ளதாக இருக்க வேண்டுமானால் எவ்வாறு இருக்கவேண்டும்?
4. ஊழியம் என்ற வார்த்தையின் பொருள் என்ன?
5. தேவனுடைய பிள்ளை எப்படி ஊழியக்காரனாக முடியும்?
6. பவுல், பேதுரு, மற்றும் யாக்கோபு ஊழியக்காரர்களா?
7. எந்த வகையான ஆராதனையை கர்த்தர் விரும்புகிறார்?
8. இதற்கு ஆதாரமாக சில வசனங்களைப் பட்டியலிடுக?
9. ஆராதனையை நாம் ஏன் அநேக சமயங்களில் ஆராதனை ஊழியம் என்று சொல்கிறோம்?
10. நாம் கீழ்ப்படிதலில்லாமல் கர்த்தர் ஏற்றுக்கொள்ளும் படியாக அவரை ஆராதிக்க முடியுமா?
11. கர்த்தரை துதிக்க வேண்டும் என்று போதிக்கும் சில வசனங்களை விவாதியுங்கள்?
12. எப்படி நாம் அவரைத் துதிக்க முடியும்?
13. பிதாவை கனப்படுத்தாமல், அவர் குமாரனை கனப்படுத்த இயலுமா?
14. ஏன் கர்த்தரை கனப்படுத்த வேண்டும்?
15. மகிமைப்படுதல் என்ற வார்த்தையின் பொருள் என்ன?
16. நம்முடைய வாழ்க்கையின் வாஞ்சை எதுவாக இருக்க வேண்டும்?
17. கர்த்தருடைய நாளில் நாம் ஆராதிக்கக் கூடிவரும் நோக்கத்தை விளக்குக?
18. நம்முடைய சிருஷ்டிகர் யார்? நம்முடைய இரட்சகர் யார்?
19. எவ்வாறு நாம் அவர்களுக்கு பதில் கூறவேண்டும்?
20. யாருடைய நாமத்திற்கு நாம் பயப்படுதல் வேண்டும்?
21. கொலோ 3:17 வசனத்தை எழுது
22. பெரும்பாலான மனிதர்கள் எப்படி ஆராதிக்கிறார்கள்?
23. எந்த வகையாய் நாம் ஆராதனையை அணுக வேண்டும்?

பாடம் - இரண்டு

# ஆராதிப்பவன்

தேவனுடைய அனைத்துப் படைப்புகளிலும், அவரைத் தொழுது கொள்ளக்கூடிய ஒன்று உண்டென்றால் அது மனிதன் மாத்திரமே. மனிதனை வெறும் சரீரத்தோடு மட்டும் படைக்காமல், அவனுக்கு ஒரு ஆத்துமாவையும், அறிவையும் தேவன் அளித்தார். நுண்ணறிவு படைத்த மனிதன் தன்னிச்சையாக முடிவெடுக்கும் திறனைப் பெற்றுள்ளான். எனவே, தன்னைப் படைத்தவரை அவன் தொழுதுகொள்ளவோ, அல்லது அவரைத் தொழாமல் இருக்கவோ அவன் முடிவு செய்யக் கூடும். தேவனைத் தொழ வேண்டுமென்ற முடிவை அவன் எடுக்கும்போது, அவர் உண்மையிலேயே புகழப்படுகிறார், கனப்படுத்தப்படுகிறார்.

அடிப்படையிலேயே, மனிதன் ஆராதிக்கக்கூடிய ஒரு ஜீவராசியாக இருக்கிறான். எவரையோ அல்லது எதையோ அவன் தொழுது கொள்ளப் போகிறான். எப்போதுமே அவன் இதைச் செய்து வந்திருக்கிறான்; இனியும் காலா காலத்திற்கும் அவ்வாறு செய்யத்தான் போகிறான். கடந்த காலத்திலும் சரி, இப்போதும் சரி, கற்பனையில் காணும் எந்தப் பொருளையும் வணங்கும் குணம் படைத்தவனாக மனிதன் இருந்து வந்திருக்கிறான். சூரிய, சந்திர, நட்சத்திரங்களையோ, கல், மரம், மட்டையென இயற்கையின் எல்லா படைப்புகளையுமோ அவன் வணங்கத் தவறியதில்லை. அத்தோடு, கற்களிலும், மரங்களிலும், உலோகங்களிலும் மனிதன் உண்டாக்கிய சகலவித உருவங்களையும் அவன் வணங்கி வந்துள்ளான். ஆனால், மனிதன் தொழுது கொள்ள வேண்டுமென்றால் அவனை உண்டாக்கிய தேவனை அவனுக்குச் சுட்டிக் காட்டி அவரைத் தொழுது கொள்ள உற்சாகப்படுத்த வேண்டும். உண்மையில், நம்மைத் தொழுதுகொள்ள இப்படிப்பட்டவர்களை தேவன் தேடுகிறார்.

"உண்மையாய்த் தொழுது கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ளுங்காலம் வரும் அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர் களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார் அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும் ..... ' என இயேசு கூறினார். (யோவான் 4 : 23-24) எனவே ஒருவனுக்கு தொழுவது மட்டும் போதுமானதல்ல; மாறாக அவனுடைய தொழுகை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமானால் யாரைத் தொழ வேண்டுமோ அவரை, உண்மையோடும் ஆவியோடும் தொழுது கொள்ள வேண்டும். இது எதை உணர்த்தி எதைச் செய்ய அவசியமாக்குகிறது என நாம் எண்ணிப் பார்ப்போம்.

1. **உண்மையும் ஜீவனுமுள்ள தேவனை சகலரும் அறியலாம்.**

சகல படைப்புகளும் ஒரு படைத்தவரைச் சுட்டிக் காட்டுகின்றன. இது தவிர்க்க முடியாதது. புத்தியுள்ள மனித ஜீவன்கள் அனைத்தும், இவ்வுண்மைகளை ஏற்றுக் கொள்ளும் போது இந்த முடிவுக்கே கட்டாயமாக வருவார்கள். ஒரு உண்மையும், ஜீவனுமுள்ள அந்த தேவன்தான் இந்த சிருஷ்டிகர் என்பதை சந்தேகமின்றி நாம் அறிவோம். (ஆதி. 1:1).

2: எல்லா காரியங்களையும் படைத்தவர் தேவன் என்பதாலும், எனவே மனிதன் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்பதாலும், நிச்சயமாக மனிதனுக்கு அவருடைய விருப்பத்தை வெளிப்படுத்தியிருக்கவேண்டும். ஆம், அவர் வெளிப்படுத்தியிருக்கிறார். அதே வேதாகமத்தின் மூலம் அவர் வெளிப்படுத்தியிருக்கிறார். கிறிஸ்துவைப் பற்றி எழுதப்பட்ட யாவும் நாம் விசுவாசிப்பதற்காக எழுதப்பட்டுள்ளன என நமக்குக்

சொல்லப்பட்டுள்ளது. (யோவான். 20:30,31) மேலும், வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினாலே அருளப்பட்டிருக்கிறது. (2 தீமோ. 3:16,17).

3. தேவன் பேசியிருக்கிறபடியாலும், அவை எழுதப்பட்டு, வேதாகமம் என்ற புத்தக வடிவில் நமக்கு அளிக்கப்பட்டிருப்பதாலும், அதைப் பெற்றுக் கொண்டு, கற்றுத் தேர்ந்து, அதற்குக் கீழ்ப்படிவது மனிதன் செய்யக்கூடிய காரியமாகக் காணப்படுகிறது. நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்று அப்போஸ்தலர்களுக்கு கிறிஸ்து கட்டளையிட்டார். (மாற்கு. 16:15-16) அதுமட்டுமல்லாமல், நீதியின் மேல் பசி தாகமுள்ளவர்கள் திருப்தியடைவார்கள். (மத். 5:6). மீண்டுமாக, கர்த்தரை ஏற்றுக்கொள்ள மனதாயிருப்பவர்களுக்கு, தேவனுடைய பிள்ளைகளாகும்படியான அதிகாரத்தை அல்லது சந்தர்ப்பத்தைக் கொடுப்பார் என நமக்குச் சொல்லப்பட்டுள்ளது. (யோவான் 1:12).

4. ஒருவன் ஒரு முறை தேவ வசனத்தைப் படித்து, அதைக் கற்றுக் கொள்ளும்போது, அவனுடைய இருதயத்தில் விசுவாசம் உண்டாகிறது. (ரோமர் 10:17) ஞானத்தாலும், விசுவாசத்தாலும் பின்னர் இரட்சிப்பை அளிக்கும், கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படியும்படி அவன் நடத்தப்படுகிறான். (அப். 2:38; 17:30; எபி. 11:6).

5. கீழ்ப்படிவதின் மூலம் அவன் இரட்சிக்கப்பட்டு, கர்த்தருடைய சபையில் இணைக்கப்படுகிறான்; அங்கே இப்போது அவன் ஒரு கிறிஸ்தவனாக திகழுகிறான். (அப். 2:47; 11:26).

6. சபையில் ஒரு அங்கத்தினராகவும், கிறிஸதவனாகவும் இருப்பின், பின்னர் கர்த்தரின் கட்டளைக்கேற்ப அவரைத் தொழுதுகொள்ள அவன் தயாராகிறான். அவன் கிறிஸ்தவனாகும்

முன்பு வேத வசனத்தின்படியாக தொழுது கொள்ள முடியாதிருந்தான். “பாவிகளுக்குத் தேவன் செவி கொடுக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறோம். ஒருவன் தேவ பக்தியுள்ளவனாக இருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவி கொடுப்பார்” என்று நாம் படிக்கிறோம். (யோவான் 9:31) கர்த்தர் தனக்குச் செவி சாய்க்க வேண்டுமென்று நம்புகிறவனுக்கு விதிக்கப்பட்டிருந்த இரண்டு நிபந்தனைகளைக் கவனியுங்கள். ஒன்று, தேவனைத் தொழுது கொள்ளக் கூடியவனாக இருக்க வேண்டும். இது தேவனோடு சரியான உறவில் இருப்பதை அல்லது பிதா, குமாரன் உறவில் இருப்பதை அல்லது ஒரு கிறிஸ்தவனாக கர்த்தரின் சபையில் அங்கத்தினராக இருப்பதைக் காட்டுகிறது.

7. கர்த்தரின் சபையில் ஒரு அங்கத்தினராகவும், கிறிஸ்தவனாகவும் ஒருவன் இருக்கும்போது, அவனுடைய ஆராதனை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமானால், தேவனை உண்மையோடும், ஆவியோடும் தொழுதுகொள்ள வேண்டியது இன்னும் அவசியமாகிறது. அதாவது, ஆராதனையானது சரியான மனநிலையில் ஏறெடுக்கப்பட வேண்டும். சகல பயபக்தியோடும், முற்றிலும் நேர்மையாகவும், மரியாதையுடனும், பரிசுத்தமான உள்ளத்தோடும் எண்ணங்களை ஒருமனப்படுத்த வேண்டியது அவசியமாகும். என்ன செய்கிறேன் என்பதைப் பற்றிய சிந்தனை சிறிதுமின்றி, அலட்சியமாக ஆராதனை செய்யலாகாது. அது கேலிக்கூத்தாகிவிடும். இறுதியாக, ஆராதனை முழுச்சத்தியத்திற்குள்ளும் நடத்தப்பட வேண்டும். தேவனுடைய வசனம் உபதேசிப்பதோடு அது ஒத்துப் போவதாக இருக்க வேண்டும். கர்த்தர் எதைக் கற்பித்தார் என்பது இப்போது கேள்வி. நமது பாடங்களைத் தொடர்ந்து படிக்கும்போது, வேதாகமக் கல்வி ஜெபம், பாடல், கர்த்தருடைய பந்தி, கொடுத்தல் ஆகியவைகளின் அடக்கமே கர்த்தர் கற்பித்தவை என அறிந்து கொள்ளுவோம். மேலும், கர்த்தர் ஏற்படுத்திய நாளில்தான் அது நடைபெற வேண்டியது அவசியம். தனிப்பட்ட ஒருவர் எவ்வளவு

நேர்மையுள்ளவராக இருந்தபோதிலும், அவருடைய ஆராதனை யானது உண்மைக்கேற்ப இல்லாவிட்டால், அது முற்றிலும் வீணான ஆராதனையாகும். அதே போல, ஒரு மனிதன் கர்த்தருடைய உபதேசத்தை அட்சரம் பிசகாமல் கடைபிடித் தபோதிலும், ஆராதனை என்று வரும்போது, ஆவியோடும், புரிந்து கொள்ளுதலோடும் அவனுடைய ஆராதனை இல்லாவிட்டால். அது வீணான ஆராதனையாகும். ஒவ்வொருவரும் தம்மை எவ்வாறு தொழுது கொள்ள வேண்டும் என தேவன் குறிப்பிட்டிருக்கிறார். அதுபோலவே சரியாகத் தொழுது கொள்ள வேண்டும்.

8. ஒருவனுடைய ஆராதனை ஏற்றுக்கொள்ளப்பட, கர்த்தர் குறிப்பிட்டுள்ளபடி, சரியான இடத்திலும் (கர்த்தரின் சபை) சரியான மக்களோடும் அவன் ஆராதனை செய்ய வேண்டும்.

சபை ஐக்கியம் என்பது இங்கே மிகவும் முக்கியமானது. உண்மையான கிறிஸ்தவன் பலதரப்பட்ட பிரிவினைச் சபைகளோடு அல்லது மத அமைப்புகளோடு ஆராதிக்கக் கூடாது. ஏனென்றால், அவர்களுடைய ஆராதனை முறைகள் இங்கே சற்று முன்பு குறிக்கப்பட்டுள்ளவற்றிற்கு முற்றிலும் மாறு பாடானவை. உண்மையான கிறிஸ்தவன், அதாவது கர்த்தரின் சபை அங்கத்தினர் வசனத்தின் படி தேவனை சனிக்கிழமை ஆராதிக்க முடியாது. மனிதர்களுடைய சட்டங்களின் படியான ஆராதனையில் அல்லது வாத்தியக்கருவிகளோடு பாடுவதில் அல்லது எல்லா "சபைகளுக்காகவும்" ஜெபிப்பதில், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கர்த்தரின் பந்தி நடத்தாத கூட்டத்தில், தவறான போதனைகளை வளர்க்கக் காணிக்கைப் பணத்தை செலவிடுவதில் எல்லாம் உண்மையான கிறிஸ்தவன் கலந்து கொள்ளவே கூடாது. இப்படிப்பட்ட கூட்டத்தாரோடு சேர்ந்து ஆராதிக்கக்கூடாது. அப்போஸ்தலன் பவுல் கூறினார் : "கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்து கொள்ளுங்கள்" (எபே. 5:11) கள்ளப் போதகர்களைப் பற்றி

யோவான், "அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவனாகிறான்" எனக் கூறினார். (2 யோவான் 11).

9. ஆராதிப்பவன் : ஆராதிக்கும் ஒருவன் வசனங்களினடிப் படையில் பூரணப்படாதவனாயிருப்பது, அவன் எப்படி வேண்டுமானாலும் ஆராதிக்கலாம் என்பதற்கு அனுமதியாகி விடாது. அவன் கர்த்தரை ஆராதிக்க வேண்டுமானால், கெட்ட பழக்கங்களையும், நடைமுறைகளையும் தன்னைவிட்டு விலக்கி விட்டு (யாக் 5:17) பரிசுத்த உள்ளத்தோடும், சுத்த சரீரத்தோடும், தாழ்மையுள்ள ஆவியோடும் கர்த்தரை ஆராதிக்க வேண்டும்.

நீங்கள் எப்படிப்பட்ட ஆராதனை செய்பவர்? எப்போது ஆராதிக்கிறீர்கள்? உங்கள் ஆராதனையின் இடைவெளிக் காலம் எவ்வளவு? ஏன் ஆராதிக்கிறீர்கள்? யாரை ஆராதிக்கிறீர்கள்? பலர் ஆராதிக்கிறார்கள்; ஆனால் ஒரு சிலரே உண்மையாக ஆராதிப்பவர்கள். பலர் ஒன்றில் தவறானதை ஆராதிக்கிறார்கள். அல்லது தவறான வழியில் ஆராதிக்கிறார்கள். சரியானவரை, சரியான வழியில் நீங்கள் ஆராதிப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். அப்பொழுது உங்களைப் போன்றவர்களின் ஆராதனையையே கர்த்தர் விரும்புவார்.

# கேள்விகள்

1. தேவனுடைய படைப்புகளிலெல்லாம் சிருஷ்டிகரை ஆராதிக்க யாரால் முடியும்?
2. தேவன் எப்படி மனிதனை உருவாக்கினார்?
3. மனிதன் எதை தீர்மானிக்க இயலும்?
4. எப்பொழுது தேவன் மெய்யாகவே கனப்படுத்தப்படுகிறார்?
5. அடிப்படையில் மனிதன் என்னவாக இருக்கிறான்?
6. கடந்த காலத்தில் மனிதன் ஆராதித்த சிலவற்றை பட்டியலிடுக?
7. தேவன் தம்மை ஆராதிக்க யாரைத் தேடுகிறார்?
8. யோவான் 4:23, 24 வாசித்து விளக்குக?
9. தேவன் உண்டென்று சொல்பவை எவை?
10. ஆதி 1:1 வசனத்தை குறிப்பிடுக
11. மனிதனுக்கு தேவன் தம்முடைய சித்தத்தை எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்?
12. தேவன் இதை எப்படிச் செய்தார்?
13. யோவான் 20 : 30, 31 மற்றும் 2 தீமோ 3 : 16, 17 இவைகளை வாசிக்கவும்
14. மனிதன் தேவனுடைய சித்தத்தை அறியவேண்டுமென்று ஏன் விரும்புகிறார்?
15. மனிதனால் தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்ள இயலுமா?
16. தேவனுடைய பிள்ளைகளாகும் அதிகாரத்தை யாருக்கு தேவன் கொடுக்கிறார்?
17. ஒருவனுடைய இருதயத்தில் விசுவாசம் எப்படி ஏற்படுகிறது?
18. எதினால் ஒருவன் இரட்சிக்கப்படுகிறான்?
19. யார் தேவனை ஆராதிக்க ஆயத்தம் செய்யப் பட்டிருக்கிறான்?
20. பாவிகளுக்கு தேவன் செவிகொடுப்பாரா? ஏன் மாட்டார்?
21. ஒருவனுக்கு தேவனுடனான சரியான உறவு என்றால் என்ன?

22. சத்தியத்தினாலும் ஆவியினாலும் ஆராதித்தல் என்றால் என்ன?

23. ஒரு தனிப்பட்ட மனிதன் எங்கு ஆண்டவரை ஆராதிக்க வேண்டும்.

24. ஏன் ஐக்கியம் மிக முக்கியமானது?

25. உண்மைக் கிறிஸ்தவன் செய்யக்கூடாத சில செயல்களை பட்டியலிடுக?

26. ஆராதிப்பவர் கர்த்தரை எப்படிச்சேரவேண்டும்?

27. உண்மையாக ஆராதிப்பவர் அநேகர் உண்டா?

## பாடம் - மூன்று

# நாம் யாரை ஆராதிக்க வேண்டும்?

சகலமும் படைக்கப்பட்ட நாளிலிருந்து சூரியனுக்குக் கீழே உள்ள அனைத்தையும் மனிதன் தொழுது வந்திருக்கிறான். ஏன், அந்த சூரியனையும் கூட அவன் விட்டுவிடவில்லை. உலகைச் சுற்றிலும் இலட்சக்கணக்கான தேவர்களும், தேவதைகளும் இருக்கின்றனர். எண்ணிலடங்காத கோயில்களை அவைகளின் பக்தர்கள் கட்டி வைத்துள்ளனர் என்ற போதிலும், தங்களுடைய மதத்தை பற்றி பல மக்கள் திருப்தியாக இருப்பதாகத் தெரியவில்லை, ஏன்? என்ன தவறு நடந்துள்ளது?

ஜீவனுள்ள ஒரே உண்மையான தேவனை மக்களில் பலர் இன்னும் விசுவாசிக்கத் தொடங்காததுதான் தவறு. கிறிஸ்து தேவனைப் பற்றிக் கூறும் போது, "தேவன் ஆவியாயிருக்கிறார். அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ளவேண்டும் என்றார்" (யோவான் 4:24) எனவே, மனிதன் தொழுது கொள்ள வேண்டியவர் தேவன் மட்டுமே. இதை அவன் அறிந்து கொண்டு, தேவனைத் தொழுது கொள்ளத் தொடங்கும்போதுதான், இதுவரை அவன் தேடிக்கொண்டிருந்த சமாதானமும் ஆறுதலும் அவனுக்குக் கிடைக்கும்.

தேவன் யார் என்றும், அவரை நாம் ஏன் தொழுது கொள்ள வேண்டுமென்றும் இப்பாடத்தில் பார்ப்போம்.

### 1. தேவன் சகலவற்றையும் படைத்தவர் :

"ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார்" (ஆதி. 1:1) என்று வேதாகமம் கூறுகிறது. அதைத்

தவிர வேறு சான்று என்ன என விவாதிக்க கூடும். உங்களைச் சுற்றிலும் கொஞ்சம் பார்த்து, தேவன் என்ன வெல்லாம் படைத்திருக்கிறார் என்பதைக் கவனியுங்கள். உலகமும் அதில் உள்ள சகல பொருட்களும் தேவன் இருக்கிறார் என்பதற்கான தக்க சான்றாக இருக்கிறது. ஒன்றுமில்லாததில் இருந்து எதுவும் வர இயலாது. எனவே யாராவது அதைப் படைக்க வேண்டும், "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப் படுத்துகிறது ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது' என தாவீது கூறினார். (சங். 19 : 1) இதை மறுத்துக் கூற யாரால் இயலும்? யார் சர்ச்சை செய்வர்?

தமது சொந்த சாயலாக மனிதனையும், மனுஷியையும் தேவன் படைத்தார். 'பின்பு தேவன் நமது சாயலாகவும், நமது ரூபத்தின் படியேயும் மனிதனை உண்டாக்குவோமாக. அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின் மேல் ஊரும் சகல பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார். தேவன் தம்முடைய சாயலாக மனிதனை சிருஷ்டித்தார்; அவனை தேவ சாயலாகவே சிருஷ்டித்தார். ஆணும், பெண்ணுமாக சிருஷ்டித் தார்.' (ஆதி. 1:26, 27) 'தேவனாகிய கர்த்தர் மனிதனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனிதன் ஜீவாத்துமாவானான்'. (ஆதி. 2:7).

## 2. மனிதனுடைய பாவங்களிலிருந்து அவனை இரட்சிக்க தமது குமாரனாகிய இயேசுவை தேவன் அனுப்பினார்.

'தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே

அவரை அனுப்பினார்' (யோவான் 3:16,17) என கர்த்தர் வந்ததின் காரணத்தைப் பற்றி நாம் படிக்கிறோம். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்' என பவுல் எழுதினார். (ரோமர் 5:8) மீண்டுமாக பவுல் கூறுகிறார் : 'நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும், பிரியமுமாயிருக்கிறது. எல்லா மனிதரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்.' என்று (I தீமோ. 2:3,4). நமது இரட்சிப்பைப் பற்றி அவர் எழுதுகிறார் : 'கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு, ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல. (எபேசியர் 2:8, 9).

### 3. சரீர, ஆத்தும ஆசீர்வாதங்கள் அனைத்தையும் அளித்து தேவன் நம்மை ஆசீர்வதிக்கிறார்.

'நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது: அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை' என யாக்கோபு எழுதுகிறார். (யாக்கோபு 1:17). மேலும், பவுல் கூறுகிறார், 'நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்.' (எபே. 1:3).

### 4. ஒரே ஜீவனுள்ள உண்மையான தேவனாயிருக்கிறார்.

தேவன் ஒருவராயிருக்கிறார் என்பது பற்றி பவுல் அறிவித்தார்; 'எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார் மேலும், எல்லாரோடும் உங்கள் எல்லாருக்குள்ளும்

இருக்கிறவர்' (எபேசியர் 4:6). தொடர்ந்து அவர் கூறும்போது, 'தேவன் ஒருவரே, தேவனுக்கும், மனிதனுக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே' என்றார். (1 தீமோ. 2 : 5).

### 5. தேவன் ஆவியாயிருக்கிறார்.

நாம் ஏற்கனவே யோவான் 4:24-ல் தெளிவாகப் படித்தபடி தேவன் ஆவியாக இருக்கிறார். வேறுவிதமாகக் கூறினால், தேவன் மாமிசமும், இரத்தமும் உடையவரல்ல. அவர் சரீரமுள்ளவரல்ல. அவர் உலகப் பூர்வமானவரல்ல. எனவே, அவரை நாம் ஆவியென்று அறிந்து கொள்கிறபோது, இவ்வுலகத்திற்கடுத்தவர் அல்ல என்பதையும், வேறு இடத்தைச் சார்ந்தவர் என்றும் நாம் அவரை நன்கு புரிந்து கொள்ள இயலும்.

### 6. தேவன் அன்பாக இருக்கிறார்.

'அன்பில்லாதவன் தேவனை அறியான். தேவன் அன்பாகவே இருக்கிறார். தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் இவ்வுலகத்தில் அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது. பிரியமானவர்களே, தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்பு கூர்ந்திருக்க, நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூறக் கடனாளிகளாக இருக்கிறோம்' என யோவான் அறிவித்தார் (1 யோவான் 4:8-11) எனவே, நம்மில் அன்பில்லாவிட்டால் தேவனை நாம் அறிய முடியாது. ஏனென்றால் தேவன் அன்பின் வழியாகவே தம்மை வெளிப்படுத்தியுள்ளார் என்று அவர் கூறுகிறார்.

### 7. தேவன் இன்று ஜீவிக்கிறார்

கிறிஸ்துவை ஜீவனுள்ள தேவனின் குமாரன் என பேதுரு அறிக்கை செய்தார். (மத்தேயு 16:18) ஜீவனுள்ள தேவனின்

சபையைப் பற்றி பவுல் கூறுகிறார். (1 தீமோ. 3:15) மீண்டும் விக்கிரக ஆராதனையை விட்டு விலகி, ஜீவனுள்ள உண்மையான தேவனுக்குக் கீழ்ப்படிந்து அவருக்கே ஊழியஞ் செய்ய முன் வந்த மக்களைப் பற்றி அவர் கூறுகிறார் (1 தெச. 1:9) தேவன் மரித்துவிட்டார் என அறிவிக்கும் சிலர், தாங்களே ஆவியில் மரித்துப் போனவர்களாகக் காணப்படுகின்றனர். தேவன் ஜீவிக்கிறார். 'தேவன் மரித்தோருக்குத் தேவனாயிராமல், ஜீவனுள்ளோருக்குத் தேவனாய் இருக்கிறார் . . .' என கிறிஸ்து உபதேசித்தார். (மத். 22:32).

**8. தேவனால் எல்லாம் கூடும்.**

யார் இரட்சிக்கப்படக்கூடும் என்பது பற்றி மக்களிடம் இயேசு பேசிக் கொண்டிருக்கையில், அவர் கூறினார் " . . . மனிதரால் இது கூடாததுதான்; தேவனாலே எல்லாம் கூடும்" என்று (மத்தேயு 19:26).

# கேள்விகள்

1. ஆராதித்தலைப் பற்றி மனிதனுக்கு என்ன தெரிந்திருக்கிறது?
2. பெரும்பான்மையான மக்களின் மதத்தவறுகளை விவரி?
3. யோவான் 4 : 24 ஐ குறிப்பிடுக
4. மனித ஆராதனையின் மையமாக யார் இருக்கவேண்டும்?
5. ஆதியாகமம் 1:1-ஐ சொல்லு.
6. தேவன் இருக்கிறார் என்பதற்கு சில சான்றுகள் கொடு
7. தேவனுடைய மகிமையை எது அறிவிக்கிறது?
8. தேவன் மனிதனையும் மனுஷியையும் எப்படி சிருஷ்டித்தார்?
9. தேவன் ஏன் தன்குமாரனை பூமிக்கு அனுப்பினார்?
10. யோவான் 3 : 16, 17 வசனம் குறிப்பிடு.
11. யார் நமக்காக மரித்தது?
12. நாம் எப்படி இரட்சிக்கப்பட்டோம்?
13. எங்கேயிருந்து நம்முடைய ஆசீர்வாதங்கள் யாவும் வருகிறது?
14. எபேசியர் 1:3 வாசி
15. தேவனுடைய ஒருமைத் தன்மையைக் குறித்து பவுல் என்ன கூறுகிறார்
16. தேவனை எவ்வாறு விளக்குவாய்?
17. தேவன் அன்பாகவே இருக்கிறார்? விவரி?
18. தேவன் இன்றைக்கு ஜீவிக்கிறாரா? எந்த வழியில்?
19. தேவனால் எல்லாம் கூடுமா?
20. யார் நல்லவர்?
21. தேவனை எந்தமனிதனாவது எப்போதாகிலும் பார்த்ததுண்டா?
22. தேவன் பாரபட்சமுள்ளவரா?
23. யார் உலகத்தை இறுதியாக நியாயந்தீர்ப்பார்?
24. தேவனுடைய பண்புகள் சிலவற்றை கூறு?
25. எத்தன்மையான ஆராதனையை தேவன் கேட்கிறார்?

பாடம் - நான்கு

# ஆராதனை வகைகள்

புதிய ஏற்பாட்டுப் புத்தகத்தின் பக்கங்களை திருப்புகையில், அங்கே மூன்றுவித ஆராதனை முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளதை நாம் காணலாம். அவை ஒவ்வொன்றையும் பற்றி இங்கே நாம் பார்ப்போம். ஒன்றுக்கு மேற்பட்ட ஆராதனை முறைகள் வேதாகமத்தில் காணப்படுவதை நினைவில் வைத்துக் கொள்ளுவோம். இவற்றில், கர்த்தர் நம்மை எந்த வகையான ஆராதனையை ஏறெடுக்கச் சொல்லுகிறார் என்பதை நாம் கண்டுபிடிக்க வேண்டும். இறுதியாக, நம்மைச் சுற்றிலுமுள்ள மக்கள், தேவனை ஆராதிக்கிறோம். என்பதையே, அவைகளை தேவன் ஏற்றுக் கொள்கிறார் என்று நாம் நினைக்கத் தேவையில்லை.

**1. அறியாமையுள்ள ஆராதனை :**

"அத்தேனே பட்டணத்தில் பவுல் அவர்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கையில், அந்தப் பட்டணம் விக்கிரகங்களால் நிறைந்திருக்கிறதைக் கண்டு, தன் ஆவியில் மிகுந்த வைராக்கியமடைந்து, ஜெப ஆலயத்தில் யூதரோடும், பக்தியுள்ளவர்களோடும் சந்தைவெளியில் எதிர்ப்பட்டவர்களோடும் தினந்தோறும் சம்பாஷணை பண்ணினான். அப்பொழுது எப்பிக்கூரரும், ஸ்தோயிக்கருமான ஞானிகளில் சிலர் அவனுடனே வாக்குவாதம் பண்ணினார்கள். சிலர், இந்த வாயாடி என்ன பேசப்போகிறான் என்றார்கள். சிலர் : இவன் அந்நிய தேவதைகளை அறிவிக்கிறவனாகக்காண்கிறது என்றார்கள். அவன் இயேசுவையும் உயிர்த்தெழுதலையும் அவர்களுக்குப் பிரசங்கித்தபடியினாலே அப்படிச் சொன்னார்கள். அவர்கள் அவனை மார்ஸ் மேடைக்கு அழைத்துக் கொண்டுபோய்: நீ சொல்லுகிற புதிதான உபதேசம் இன்னதென்று நாங்கள் அறியலாமா? நூதனமான காரியங்களை

எங்கள் காதுகள் கேட்கப் பண்ணுகிறாய்; அவைகளின் கருத்து இன்னதென்று அறிய மனதாயிருக்கிறோம் என்றார்கள். அந்த அத்தேனே பட்டணத்தாரெல்லாரும், அங்கே தங்குகிற அந்நியரும், நவமான காரியங்களைச் சொல்லுகிறதிலும் கேட்கிறதிலுமே யொழிய வேறொன்றிலும் பொழுது போக்குகிறதில்லை. அப்பொழுது பவுல் மார்ஸ் மேடையின் நடுவிலே நின்று அத்தேனரே எந்த விஷயத்திலும் நீங்கள் மிகுந்த தேவபக்தியுள்ளவர்களென்று காண்கிறேன். எப்படியென்றால், நான் சுற்றித்திரிந்து, உங்கள் ஆராதனைக் குரியவைகளைக் கவனித்துப் பார்த்தபொழுது, அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக் கண்டேன்; நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன். உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிற படியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம் பண்ணுகிறதில்லை. எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர், தமக்கு யாதொன்று தேவையானது போல, மனிதர் கைகளால் பணிவிடை கொள்ளுகிறதுமில்லை மனித ஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்; கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மை தேடும்படிக்கு அப்படிச் செய்தார், அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவர் அல்லவே. ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்; அப்படியே உங்கள் புலவர்களிலும் சிலர். நாம் அவருடைய சந்ததியார் என்று சொல்லியிருக்கிறார்கள். நாம் தேவனுடைய சந்ததியாராயிருக்க, மனிதருடைய சித்திர வேலையினாலும் யுக்தியினாலும் உருவாக்கின பொன், வெள்ளி, கல் இவைகளுக்குத் தெய்வம் ஒப்பாயிருக்குமென்று நாம் நினைக்கலாகாது. அறியாமையுள்ள காலங்களைத் தேவன்

காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனிதரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். மேலும் ஒரு நாளை குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனிதனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனிதனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப் பண்ணினார் என்றான்." (அப். 17:16-31).

அத்தேனே பட்டணத்தில் விக்கிரக வழிபாட்டை பவுல் சந்தித்தான் என்பதை நீங்கள் கவனிக்கமுடியும். அறியாமையால் அவ்வாறு நடைபெறுவதைச் சுட்டிக்காட்டி அவன் குற்றஞ்சாட்டு கிறான். பின்னர், உண்மையும் ஜீவனுமுள்ள தேவனைப்பற்றி அவர்களுக்கு அவன் போதிக்கத் தொடங்குகிறான்.

அவர்கள் விக்கிரகங்களை ஏன் வணங்கிக் கொண்டிருந்தனர்? விக்கிரகங்களுக்கு ஒரு மனிதன் ஏன் தலை வணங்க வேண்டும்? கல், மரம், உலோகம், ஆகியவற்றால் செய்யப்பட்டதே விக்கிரகம் ஆகும். அதற்கு ஜீவனும் ஆவியும் கிடையாது. அது பார்க்கவோ கேட்கவோ, நுகரவோ, பேசவோ, அசையவோ, சிந்திக்கவோ, அல்லது ஆசீர்வதிக்கவோ சக்தியற்ற ஒரு ஜடப்பொருள். இப்படிப்பட்ட ஒரு பொருளால் உருவாக்கப்பட்ட விக்கிரகம் இறுதியிலே "கடவுள்" எனக் கருதப்படுகிறது. ஆனால் பரலோகத்தின் தேவனை அறியாதவர்கள் ஒரு விக்கிரகத்திற்கோ அல்லது இயற்கையின் ஒரு பொருளுக்கோ அல்லது உயிரோடிருக்கும் அல்லது மரித்துப்போன மனிதனுக்கோ தலை வணங்குவர்.

கடந்த காலத்தைப்போல இன்றும் உலகெங்கிலும் உள்ள மக்கள் தொடர்ந்து விக்கிரகத்தை வணங்குகின்றனர். காரணம் என்ன? இன்னும் அறியாமைதான் பிரச்சினையாக தொடருகிறது. ஒரு கிறிஸ்தவனோ அல்லது தன்னை கிறிஸ்தவன் என அழைத்துக் கொள்ளுகிறவன் அல்லது புத்திசாலியான,

விவரங்கள் அறிந்த மனிதன் எவனும் ஒரு விக்கிரகத்தையோ' உருவத்தையோ, படத்தையோ வழிபடமாட்டான்.

## 2. வீணான ஆராதனை

கிறிஸ்து கூறினார். "மனிதருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்றார்". (மத். 15:9). மீண்டுமாக அவர் சொன்னார். பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானே யல்லாமல், என்னை நோக்கி, கர்த்தாவே! கர்த்தாவே என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்." (மத் 7:21-23).

கர்த்தரின் மக்கள் வித்தியாசமான விதங்களில் ஆராதிக்கலாம் என்றும், அவர்கள் அதில் நேர்மையுடனும் உண்மையுடனும் இருக்கும்வரை அவர்களுடைய ஆராதனை தேவனால் ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் பகிரங்கமாக இன்றும் கற்பிக்கப்படுகிறது. இது உண்மையல்ல. மனிதருடைய சட்டங்கள், கற்பனைகளின் படியான ஆராதனை வீணான ஆராதனையாகும். "வீணான" என்னும் வார்த்தைக்கு காலியான, பயனற்ற, உபயோகமற்ற எனப்பொருள். வேறு விதமாகக் கூறினால், இப்படிப்பட்ட ஆராதனை கர்த்தரால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

"கிறிஸ்துவின் நாமத்தில்" ஒரு மக்கள் கூட்டம் கூடுவதால் மட்டும் அவர்களுடைய ஆராதனை ஏற்றுக் கொள்ளப்படும் என்று பொருளல்ல. முதலாவதாக, ஒரு பிரிவினை சபையின் அங்கத்தினர்களாக அவர்கள் கூடும்போது, அவர்களுடைய பிரிவினை சபையின் பெயரால் கூடுகிறார்களே அன்றி, கிறிஸ்துவின் நாமத்தில் அவர்கள் கூடுவதில்லை. அடுத்து, ஒரு பிரிவினைச் சபையின் ஆராதனை அந்த அமைப்பின் பிரகாரமாகவே நடத்தப்படும். நியாயத்தீர்ப்பு நாளிலே, சிலர் கர்த்தரின் முன்பாக நின்று கொண்டு, அவர்கள் செய்தவைகளை யெல்லாம் அவருக்கு நினைப்பூட்டுவார்கள் என்றும், ஆனால் அவருடைய கற்பனைகளுக்கு அவர்கள் கீழ்ப்படியாத காரணத்தாலும், அவருடைய குடும்பத்தின் அங்கத்தினர்களாக அவர்கள் இல்லாததாலும், அவர்களை அவர் தள்ளிப் புறம்பாக்குவார் என கர்த்தர் கூறுகிறார்.

உங்களுடைய ஆராதனை மனிதர்களுடைய உபதேசங்களுக்கு ஏற்ப இருந்தால், அதாவது, தேவனுடைய வசனங்களில் காணப்படாத காரியங்களை நீங்கள் ஆராதனையில் செய்தால், உங்கள் ஆராதனை வீணானது. ஆகவே, அது கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. எனவே, இப்பொழுது நீங்கள் உங்கள் நிலையை சோதித்துப் பார்க்க வேண்டியது அவசியம்.

### 3. உண்மையான ஆராதனை :

"தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும்" என ஆராதனை யைப் பற்றி கிறிஸ்து கூறினார், (யோவான். 4:24).

இங்கே சில காரியங்களை நாம் கவனிப்போம். முதலில், ஏற்கனவே நாம் முந்தைய பாடத்தில் கற்றுக்கொண்டது போல,

நமது ஆராதனைக்கு உரியவர் தேவன் ஆவார். அடுத்து, அவரை ஆராதிக்கிறவர்கள் கர்த்தருடைய நிபந்தனைகளின்படி அவரை ஆராதிக்க வேண்டும். தேவனை ஆராதிக்க யாரும் உங்களை வற்புறுத்தப் போவதில்லை. ஆனால் அவரை ஆராதிக்கத் தேர்ந்தெடுப்பவர்கள், தங்களுடைய அல்லது பிறருடைய நிபந்தனைகளின்படியின்றி, கர்த்தருடைய நிபந்தனை களின்படி அவரை ஆராதிக்கவேண்டும். மூன்றாவதாக, ஆராதனை உண்மையோடும் ஆவியோடும் செய்யப்பட வேண்டும். அதற்கு அர்த்தம் என்ன? நமது ஆராதனை ஆவிக்குரிய விதத்தில், அதாவது நேர்மையாகவும் புரிந்து கொண்டும், தாழ்மையுடனும் அமைய வேண்டும், உண்மையோடு என்று கூறும்போது, நமது ஆராதனை வசனத்தில் எழுதப்பட்ட காரியங்களின்படியே செய்யப்பட வேண்டும். இது மிகவும் எளிமையாக இருக்கும்! அவர்கள் சகலவிதமான சடங்குகள், நடைமுறைகள், மரபுகள், பாரம்பரியங்கள் அனைத்தையும் கடைபிடிக்க விரும்புகின்றனர். ஆனால் கர்த்தர் அவைகளை விரும்புவதில்லையே. அவருடைய கட்டளைப்படி அவரை ஆராதிப்பதையே அவர் விரும்புகிறார். இதற்கு அதிகமாகவோ குறைவாகவோ அவர் கேட்கவில்லை.

புதிய ஏற்பாடு கற்பிக்கும் ஆராதனை முறை இதுவே. நாம் தொடர்ந்து படிக்கும்போது இவ்வாறாகத்தான் ஆதிக்கிறிஸ்தவர்கள் ஆராதித்தார்கள் என்பதையும், அவ்வாறே நாமும் ஆராதிக்க வேண்டும் என்பதையும் நாம் காணப்போகிறோம். நாம் அனைவரும் அவ்வாறு செய்யும்போது, ஒரேவிதமாக ஆராதனை செய்வோம்; கர்த்தர் நமது ஆராதனையை ஏற்றுக் கொள்வார்.

# கேள்விகள்

1. புதிய ஏற்பாட்டில் எத்தனை வகையான ஆராதனைகளை வாசிக்கிறோம்?
2. இந்தப் பாடத்தைக் கற்றுகொள்ளுவதற்குரிய நோக்கங்கள் சிலவற்றை குறிப்பிடு?
3. அத்தேனே பட்டணம் எப்படிப்பட்ட ஒரு பட்டணமாக இருந்ததை பவுல் கண்டார்?
4. அத்தேனர்கள் எப்படிப்பட்ட வழிபாட்டு முறையில் ஈடுபட்டிருந்தார்கள் என்பதை விவரி?
5. இதைக் குறித்து பவுல் என்ன சொன்னார்?
6. பவுலின் பிரசங்கத்தின் வித்தியாசப்பட்ட கருத்துக்களை பட்டியலிடு?
7. அவர் யாரை அவர்களுக்குச் சுட்டிக் காண்பித்தார்?
8. ஏன்? அவர்கள் விக்கிரகங்களை வழிபட்டார்கள்?
9. விக்கிரகமானது எதிலிருந்து செய்யப்படுகிறது?
10. விக்கிரகங்களால் செய்ய முடியாத சில காரியங்களை குறிப்பிடுக.?
11. உண்மையும் ஜீவனுமுள்ள தேவனைபற்றி தெரிந்த பிறகும் ஒருவன் விக்கிரகத்தை வணங்கலாமா?
12. இன்றைக்கு விக்கிரக வழிபாட்டுக்காரர்கள் இருக்கிறார்களா?
13. மத்தேயு 15 : 9 வசனம் குறிப்பிடு.
14. மத்தேயு 7 : 21-23ஐ வாசி.
15. வீணான ஆராதனை என்றால் என்ன?
16. ஒருவேளை "இயேசுவின் நாமத்தினால்" என்பதினாலேயே ஒருவனுடைய ஆராதனை ஏற்றுக்கொள்ளப்படுமா?
17. எந்த வகையான ஆராதனையை கர்த்தர் விரும்புகிறார்?
18. நம்முடைய ஆராதனை யாரை நோக்கியதாக இருக்கவேண்டும்?
19. கர்த்தர் யாரையும் தம்மை வணங்கும்படி கட்டாயப்படுத்துகிறாரா?
20. யாருடைய நிபந்தனைப்படி ஆராதனையானது செயலாக்கப்படுதல் வேண்டும்?
21. தேவனை ஆவியோடும் உண்மையோடும் ஆராதித்தல் என்றால் என்ன?

பாடம் - ஐந்து

# ஆதிக் கிறிஸ்தவர்களின் ஆராதனை

மக்கள் எவ்வாறு ஆராதிக்கிறார்கள், எங்கே ஆராதிக்கிறார்கள், எப்போது ஆராதிக்கிறார்கள், ஆராதனையில் அவர்கள் செய்வதென்ன என்பவற்றை எல்லாம் கவனிக்க மிகவும் ஆர்வமாக இருக்கிறது. இன்று அநேக சபைகள் இருப்பதும், அவைகள் ஒவ்வொன்றும் வித்தியாசமான வழிகளில் ஆராதிப்பதையும் நாம் அறிவோம். ஏன் இந்த வித்தியாசம்? ஏதாவது வித்தியாசம் இருக்க வேண்டுமா? நாம் எவ்வாறு ஆராதிக்க வேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறாரோ அவ்வாறுதான் நாம் அவரை ஆராதித்துக் கொண்டிருக்கிறோம் என நாம் அறிவது எப்படி? அதைக் கண்டு பிடிக்க மிகவும் சிறந்த வழிகளில் ஒன்று: வசனத்திற்குச் சென்று, ஆதி கிறிஸ்தவர்கள் எவ்வாறு ஆராதித்தார்கள் என்று கண்டுபிடிப்பதுதான்.

பெந்தெகொஸ்தே நாளிலே, சபை ஆரம்பிக்கப்பட்ட பின்பு, "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" என வேதாகமம் கூறுகிறது. (அப் 2 : 42) இந்த சீடர்கள் அல்லது கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலர்களுடைய கோட்பாடுகளில் அல்லது உபதேசத்தில் உறுதியாய்த்தரித்திருந்தார்கள். அவர்கள் என்ன செய்தனர்? ஆராதனையின் எல்லா முறைகளும் கொடுக்கப்படா விட்டாலும், மூன்று முறைகளைக் காணமுடிகிறது. அவை: அந்நியோந்நியம் அல்லது கொடுத்தல், அப்பம் பிட்குதல் அல்லது கர்த்தரின் பந்தி, ஜெபங்கள் ஆகும்.

பின்னர், பவுல் பிரயாணமாகப் போகையில், துரோவா வழியாகச் செல்லும்போது அங்கே பலநாள் தங்கி, அங்குள்ள

பிராந்திய சபையாரோடு ஆராதிப்பதாக நாம் படிக்கிறோம்; "வாரத்தின் முதல் நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டு மென்றிருந்து, அவர் களுடனே சம்பாஷித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான்" (அப். 20 : 7). ஆராதனை செய்யும் நாள் வாரத்தின் முதல் நாள் என நாம் இங்கே கவனிக்கவேண்டும். பவுல், துரோவா பட்டணத்துக்கு திங்கட்கிழமை வந்து சேர்ந்திருக்கிறான். என்றாலும், அவர்களோடு சேர்ந்து ஆராதிக்கும் சந்தர்ப்பத்திற்காக அந்த வாரம் முழுவதும் அங்கு தங்கி, சனிக்கிழமையைக் கடந்து, வாரத்தின் முதல் நாள் வருமளவும் காத்திருந்து கர்த்தர் நியமித்த நாளில் கர்த்தருடைய மக்களோடு ஆராதனை செய்தான். இந்த நாளில் தான் சீடர்கள் அல்லது கிறிஸ்தவர்கள் அப்பம் பிட்க, அல்லது கர்த்தரின் பந்தியில் கலந்துகொள்ள கூடி வந்தார்கள் என்று மேலும் கூறுகிறது. இறுதியாக, பவுல் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவர்களுக்குப் போதித்தான். பின்னர் அவனுடைய வழியே போனான்.

கர்த்தரின் பந்தியின் முக்கியத்துவத்தைப் பற்றி, தனது கொரிந்திய சகோதரர்களுக்கு பவுல் எழுதுவதை I கொரிந்தியர் 10, 11 ஆகிய அதிகாரங்களில் நாம் காணலாம். அதைக் கவனிப்போம். "நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன். என்னவெனில் கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதைப் பிட்டு நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவு கூறும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணின பின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து, இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம் பண்ணும்போதெல்லாம் என்னை நினைவு கூறும்படி இதைச் செய்யுங்கள் என்றார். ஆகையால் நீங்கள் இந்த

அப்பத்தைப் புசித்து, இந்த பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள். இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனிதனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்த பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன். என்னத்தினாலெனில் அபாத்திரமாய்ப் போஜனபானம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத் தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான். இதினிமித்தம், உங்களில் அநேகர் பலவீனரும் வியாதியுள்ளவர்களு மாயிருக்கிறார்கள்; அநேகர் நித்திரையும் அடைந்திருக் கிறார்கள்" (1 கொரி 11:23-30) இப்போது இங்கு காணப்படுகிறவைகளில் சில முக்கிய குறிப்புகளை நாம் பட்டியலிடுவோம் :-

1. இதை பவுல் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக் கொண்டான்
2. அப்பமானது கிறிஸ்துவின் சரீரத்தையும், இரசம் அவருடைய இரத்தத்தையும் பிரதிநிதித்துவப் படுத்துவதாக அவர் கூறுகிறார்.
3. கிறிஸ்துவின் சரீரத்தையும் அவருடைய இரத்தத்தையும் நினைவு கூறும் படியாக, அவற்றில் பங்கு கொள்ள வேண்டும்.
4. அவ்வாறு செய்யும்போது, கர்த்தரின் மரணத்தை அவர் வருமளவும் அவர்கள் அறிவிப்பதாக இருக்கும்.
5. கர்த்தருக்கு உண்மையாக இராமல், எவன் அபாத்திரமாய் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ, அவன் தனக்கு ஆக்கினைத் தீர்ப்புவரும்படி போஜன பானம் பண்ணுகிறான்.

# புதிய ஏற்பாட்டு ஆராதனை

# NEW TESTAMENT WORSHIP

J.C. சோட்

J.C. CHOATE

வெளியீடு

உலக இலக்கிய பதிப்பகம்

195, தாராபுரம் ரோடு,

காங்கயம் - 638 701

இந்தியா

**New Testament Worship**

*Author :* **J.C. CHOATE**

© Copy Right Reserved

First Printing : 15, August ' 97
Copies : 2000
Language : Tamil

*Printed at*
KONAR PRINTERS
35/4-F, APK Road,
Madurai - 625 012.
Phone : 670255

*Published by*
**World Literature Publications**
C/o Church of Christ
Dharapuram Road
KANGAYAM 638 701
INDIA
Phone 04257 - 20030

6. இந்த அப்பத்திலும், இரசத்திலும், பங்கு கொள்ளுமுன், தன்னைத்தானே சோதித்தறிந்து ஒருவன் பங்குகொள்ள வேண்டும். வாழ்வில் பாவத்தோடு இருக்கும் காரணத்தால், கர்த்தரின் பந்தியில் பங்கு கொள்ளத் தகுதியற்றிருப்பவர்கள், தேவனோடு ஒப்புரவாகி அதன் பின்னர் கர்த்தரின் பந்தியில் கலந்துகொள்ள வேண்டுமென்பதே இதன் கருத்து. எப்படி வாழவேண்டுமோ அப்படி வாழாதவனும், அல்லது அவ்வாறு வாழ முடியாதவனும், கர்த்தரின் பந்தியில் கலந்துகொள்ளக் கூடாது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. எனவே ஒருவன் வாழ்வில் இருக்கக்கூடாதது ஒன்று அவனிடம் இருந்தால் அதை விட்டுவிடவேண்டும். அப்போதுதான் அந்த நபர் ஒரு உண்மையான கிறிஸ்தவனாக கர்த்தரின் பந்தியில் கலந்துகொள்ள முடியும்.

7. கர்த்தருடைய மக்கள் பிறரிடம் பாவங்களை அறிக்கையிட வேண்டியதில்லை. ஆனால் பவுல் கூறுவதைப்போல ஒவ்வொருவரும் தன்னைத் தானே சோதித்தறிந்து பின்னர் பந்தியில் கலந்து கொள்ள வேண்டும். தேவன் இருதயத்தை அறியக்கூடியவராக இருக்கிறார். ஆனால் சபை அங்கத்தினர்களாகிய நாம் அறியோம். எனவே, ஒரு மனிதனை தீர்ப்புச் சொல்ல நமக்கு உரிமை இல்லை. ஆனால் வேதாகம உபதேசத்தின் வெளிச்சத்தில் தனிப்பட்ட ஒவ்வொருவனும் தன்னைத்தானே சோதித்தறிய வேண்டியது அவனுடைய கடமை.

அத்தோடு (1 கொரிந்தியர் 11-ம் அதிகாரத்தில், கர்த்தரின் பந்தியை ஒரு விருந்து போலாக்கி அதை கேலிப்பொருளாக்கிய கொரிந்தியர்களை பவுல் கண்டிக்கிறார். உண்டு குடிக்க அவர்களுக்கு வீடுகள் உண்டென்றும், ஆராதனையில் கலந்து கொள்ள வருவது தங்கள் சரீரப்பசியைப் போக்க உண்ணவும் குடிக்கவும் அல்ல என்றும், அவர்களுக்கு அவர் சுட்டிக்காட்டுகிறார். இன்றும் இது பொருந்துகிறது. பக்தி வைராக்கியத்துடன்

கிறிஸ்தவர்கள் ஆராதனையில் பங்கு கொள்ள வேண்டும். அப்பத்திலும், இரசத்திலும் அவர்கள் பங்குகொள்ளும்போது கிறிஸ்துவின் சரீரத்தையும் இரத்தத்தையும் நினைவு கூறுவதைத் தவிர, வேறு சிந்தனை கூடாது.

பின்னர், 1 கொரிந்தியர் 16:1,2 வசனங்களை நாம் காணும்போது, கொடுத்தல் என்ற பொருள் பற்றி அதே எழுத்தர் கூறுவதைக் காணலாம். அவர் எழுதுகிறார்: “பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்மப் பணத்தைக் குறித்து நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும்போது பணஞ் சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள் தோறும், தன் தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக் கடவன். “மீண்டும், அவர் எழுதுகிறார் : “பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக் கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.” (2 கொரி. 9:6, 7). எனவே, இந்தப் பிரகாரமாக, கர்த்தருடைய பிள்ளைகள் நிச்சயமாகக் கொடுக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. நாம் கீழ்க்கண்டவற்றைக் கற்றுக் கொள்ளுகிறோம்.

1. வாரத்தின் முதல் நாளிலே அவர்கள் அதைச் செய்ய வேண்டியிருந்தது.
2. எல்லா கிறிஸ்தவர்களும் கொடுக்க வேண்டும்.
3. என்ன கொடுக்க வேண்டுமென நியமித்திருக்கின்றாரோ அப்படிக் கொடுக்க வேண்டும்.
4. அவர்களுக்கு எப்படிக் கொடுக்கப்பட்டுள்ளதோ அதற்குத்தக்கதாக அவர்கள் காணிக்கை கொடுக்க

வேண்டும். புதிய ஏற்பாட்டில் பத்தில் ஒரு பங்கு என்றோ, அல்லது இவ்வளவு கொடுக்க வேண்டுமென நியமனம் செய்யவோ இல்லை.

5. தங்கள் மனதிலே முன்பே தீர்மானம் செய்தபடியே அவர்கள் கொடுக்கக்கடவர்.

6. விசனமாகவோ, கட்டாயமாகக் கொடுக்க வேண்டி யிருக்கிறதே என்ற எண்ணத்தோடோ அவர்கள் கொடுக்க வேண்டியதில்லை.

7. மாறாக, உற்சாகமாகக் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாக இருக்கிறபடியால், அவர்கள் உற்சாகமாகக் கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப் பட்டனர்.

பாடுவதைக் குறித்து புதிய ஏற்பாட்டில் பல குறிப்புகள் உள்ளன. பவுலும் சீலாவும் சிறையிலே தேவனைத் துதித்துப் பாடினார்கள் என்பது அவற்றில் ஒன்று. (அப். 16:25). ஆனால், கர்த்தரின் பிள்ளைகளைக் கொண்ட ஒரு பிராந்திய சபை வாரத்தின் முதல் நாளிலே பாடுவதற்காகக் கூடினார்கள் என ஒரு உதாரணத்தையும் பார்க்க முடியவில்லை. இருந்தும், ஏவப்பட்டு எழுதியவர்கள் கிறிஸ்தவர்களை பாட வேண்டுமென கட்டளையிட்டனர். (எபே. 5:19; கொலோ. 3:16). எனவே, முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் கடைபிடித்த ஆராதனை முறையில் அதுவும் ஒன்றாக இருந்தது.

இப்போது, இவை அனைத்தையும் சேர்த்துப் பார்க்கும் போது : கர்த்தரின் பிள்ளைகள் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் (ஞாயிற்றுக்கிழமை) கூடி ஜெபித்தனர்; கற்றுக் கொண்டனர்; பாடினர்; கர்த்தரின் பந்தியில் கலந்து கொண்டனர்; கொடுத்தனர்; என்று நாம் காண்கிறோம். வேறு எதைப் பற்றியும் நாம் படிக்கவில்லை, இதுகாறும் பாதுகாக்கப்பட்டு வந்துள்ள உலகப்பூர்வமான பல எழுத்துக்களும் இதே மாதிரியைத்தான் கூறுகின்றன. எனவே, அந்தக் காலத்தில் கிறிஸ்தவர்கள் கர்த்தரை ஆராதிக்க என்ன செய்தார்கள் என நமக்குத் தெரிகிறது. நாம் அது போலவே செய்ய வேண்டாமா?

# கேள்விகள்

1. எல்லா சபைகளும் ஒரே மாதிரியாகவா ஆராதிக்கிறது?
2. தேவன் விரும்புகிறபடியாகத்தான் நாம் ஆராதிக்கின்றோம் என்பதனை எவ்வாறு அறிய முடியும்?
3. பெந்தெகொஸ்தே நாளில் சபை ஆரம்பமானதற்குப் பிறகு என்ன நடந்தது.?
4. அப் 2 : 42 வசனம் குறிப்பிடுக.
5. சீஷர்கள் எதில் உறுதியாக தரித்திருந்தார்கள்?
6. ஆராதனையின் செயல்பாடுகள் யாவும் இங்கே பட்டியலிடப்பட்டுள்ளதா?
7. துரோவா பட்டணத்தில் பவுல் ஏன் சில நாட்கள் தங்கினார்?
8. அப் 20 : 7 என்ன கூறுகிறது?
9. வாரத்தின் எந்த நாளில் கிறிஸ்தவர்கள் கூடிவந்தார்கள்.?
10. அவர்கள் செய்த சில காரியங்களை குறிப்பிடுக.
11. கொரிந்தியர்கள் யாராக இருந்தார்கள்?
12. கர்த்தரிடத்திலிருந்து பவுல் எதைப் பெற்றுக் கொண்டார்?
13. ஏன் அவர்கள் அப்பத்திலும் ரசத்திலும் பங்கு பெற வேண்டும்?
14. இது எதைக் காட்டுகிறது.?
15. எப்படி ஒருவன் அபாத்திரமாக பங்கு பெற முடியும்?
16. தன்னைத் தானே சோதித்தறிந்து இதில் புசிக்கக்கடவன் - விவரி
17. தனக்கு ஆக்கினை தீர்ப்பு வருவதற்கு ஏதுவாக ஒருவன் இதில் புசித்து பானம் பண்ண இயலுமா?
18. ஒரு விசுவாசமுள்ள கிறிஸ்தவனாக இருந்து கொண்டு கர்த்தருடைய திருவிருந்தில் பங்கு கொள்ளாமல் இருக்க முடியுமா?
19. ஆண்டவருடைய பிள்ளைகள் பிறரிடம் பாவங்களை அறிக்கையிட வேண்டுமா? இல்லையெனில் ஏன்?
20. கொரிந்தியர்கள், கர்த்தருடைய திருவிருந்தை அனுசரிக்கும் முறை பற்றி பவுல் ஏன் கண்டனம் பண்ணுகிறார்?
21. I கொரி 16 : 1, 2 ஐ வாசி

22. எந்த நாளில் கிறிஸ்தவர்கள் சேர்த்து வைத்ததை கொண்டு வந்து கொடுக்க வேண்டும்?

23. எவ்வளவு ஒருவன் கொடுத்தல் வேண்டும்?

24. எதை அவர்கள் கொடுக்க வேண்டும்?

25. எவ்வளவு தொகை கொடுக்க வேண்டியவர்களாயிருந்தார்கள்?

26. 2 கொரி 9 : 6, 7 வசனம் குறிப்பிடு.

27. எப்படிக் கொடுப்பவனை தேவன் நேசிக்கிறார்?

28. ஆராதனையின் 5 அம்சங்களைக் குறிப்பிடு.

பாடம் - ஆறு

# ஆராதனையின் நாள்

புதிய ஏற்பாட்டில் ஆராதனையின் அவசியத்தைப் பற்றி நமக்குக் கூறப்பட்டிருப்பது மட்டுமல்லாமல் எந்த நாளில் கர்த்தருடைய பிள்ளைகள் கூடி அவரைத் தொழுது கொள்ள வேண்டும் என அவர் எதிர்பார்க்கிறார் என்றும் நமக்குச் சொல்லப்பட்டுள்ளது. அந்த நாள் எது?

ஆராதனை செய்ய மனிதனைக் கட்டுப்படுத்தும் நாள் இன்னும் சனிக்கிழமைதான் என போதிக்கிறவர்கள் இருக்கின்றனர். இது உண்மையாக இருக்கக்கூடுமா? நியாயப் பிரமாணம் அகற்றப்பட்டிருந்தால் இது உண்மையல்ல. (II கொரி 3 அதி, கொலோ 2:14, எபிரே 9:16-17, எபி 10:9) ஆகிய வசனங்களின்படி அது தவறு என்றபோதிலும் பவுல் யூதர்களை சனிக்கிழமை சந்தித்ததாக வாக்குவாதம் செய்யப்படுகிறது. அது உண்மையாக இருக்கலாம். ஆனால் அவர் ஆராதனைக்காக அன்று அவர்களைச் சந்தித்ததாக எங்குமே கூறப்படவில்லை. மாறாக, தேவனுடைய கற்பனைகளை உபதேசிக்கும் ஒரு வாய்ப்பாக அவர்களை அவன் சந்தித்தான்.

சனிக்கிழமை ஆராதனை நாளாக இல்லையெனில் வேறு எந்த நாள்? புதிய ஏற்பாட்டின் பக்கங்களைத் திருப்பினால் இக்கேள்விக்கு விடையளிக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட பல வசனக் குறிப்புகளைக் காணலாம். முதலில் ஆராதிக்கக்கூடி வந்திருந்த புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களின் ஒரு குழுவை உதாரணமாக எடுத்துக்கொண்டால் அவர்கள் எந்த நாளில் கூடினார்கள் என்பதைப் பார்க்கலாம். துரோவா பட்டணத்தின் வழியாக பவுல் பயணம் செய்தபோது அங்குள்ள பிராந்திய கிறிஸ்தவர்களுடன் ஆராதிக்கும் வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளவேண்டி அங்கு சில தினங்கள் தங்கியிருந்ததாக வசனம் கூறுகிறது' அந்த

வசனத்தையே இங்கு படித்துப் பார்ப்போம். "வாரத்தின் முதல் நாளிலே அப்பம் பிட்கும்படி சீடர்கள் கூடி வந்திருக்கையில் பவுல் மறுநாளிலே புறப்பட வேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான்" (அப். 20:7) அவன் துரோவாவில் ஏழு நாட்கள் தங்கியிருந்ததாக (அப் 20:6) வசனம் கூறுவதைக் கவனியுங்கள். அதற்கு பொருள் சனிக்கிழமையும் பவுல் அங்குதான் இருந்தான் என்பது தான். ஆனால், அந்த நாளில் கிறிஸ்தவர்களை அவர் சந்தித்ததை வசனம் கூறவில்லை. மாறாக வாரத்தின் முதல் நாளிலே அல்லது சனிக்கிழமைக்குப் பின் வந்த முதல் நாளிலே சந்தித்ததாகக் கூறுகிறது. இப்போது இதில் முக்கியத்துவம் என்னவாக இருந்திருக்கும்? இதில் என்ன முக்கியத்துவம் என்றால் சனிக்கிழமை ஆராதிக்க வேண்டி அவன் அங்கு தங்கவில்லை. மாறாக, ஆராதனைக்குக் கர்த்தர் நியமித்த நாளாகிய வாரத்தின் முதல் நாளிலே ஆராதிப்பதற்காக அங்கு தங்கினான்.

வாரத்தின் முதல் நாள்தான் எது? சரி, நியாயப் பிரமாணத்தின் கீழ் வாரத்தின் ஏழாவது நாளாக சனிக்கிழமை இருந்தது. அதாவது சனிக்கிழமை வாரத்தின் ஏழாவது நாளாக இருந்தால். ஒவ்வொரு வாரத்திலும் ஏழு நாட்கள் மட்டுமே இருப்பதால் சனிக்கிழமையைத் தொடர்ந்து வரும் நாள் வாரத்தின் முதல் நாளாகும். அதற்கு அடுத்த நாள் வாரத்தின் இரண்டாவது நாளும். அதேபோல மூன்று நான்கு என்று தொடரும், இந்த நவீன காலத்தில் அதை ஞாயிற்றுக்கிழமை என்கிறோம், ஞாயிற்றுக்கிழமை வாரத்தின் முதல் நாளாகக் குறிப்பிடப்படுகிறது.

ஏன் வாரத்தின் முதல் நாள்? மோசேயின் நியாயப் பிரமாணத்தின் கீழ் ஆராதனையின் நாள், சனிக்கிழமை அல்லது வாரத்தின் கடைசி நாளாக இருந்தது. கிறிஸ்துவின் சட்டப்படி ஆராதனை நாள் ஞாயிறு அல்லது வாரத்தின் முதல் நாள், அதாவது, இனி கர்த்தருக்கு கடைசி இடம் இல்லை. மாறாக, அவருக்கு முதலிடம் அளிக்கப்பட்டு முதலாவதாக வந்துவிடுகிறார். (மத் 6:33).

ஆனால், தொடர்ந்து அடுத்த காரியமாக, அவரவர் தகுதிக்கு ஏற்றாற்போலக் கொடுக்க வேண்டுமென்பதைப் பற்றி கொரிந்து சகோதரர்களுக்கு அப்போஸ்தலர் பவுல் கற்பிப்பதை நாம் கவனிக்கவேண்டும்: "பரிசுத்தவான்களுக்காக சேர்க்கப்படும் தர்மப்பணத்தைக் குறித்து நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும் போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள்தோறும் தன் தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக்கடவன்" (1 கொரி 16:1-2).

ஆனால், அவரவர் வரவுக்குத் தக்கதாக எதையாவது கொடுக்கும் நாளாக இந்த நாள் ஏன் தேர்ந்தெடுக்கப்பட்டது? ஏனெனில் இதுதான் ஆராதனை நாள்; அன்று அவர்கள் அனைவரும் கூடி வருவார்கள் என்பதால்; அதுவே தங்கள் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் கொடுத்திட மிகவும் பொருத்தமான நாளாக இருக்கும் என்பதால் அந்தநாள் தேர்வு செய்யப்பட்டது. இப்போது சனிக்கிழமை ஆராதனை நாளாக இருந்திருப்பின் நிச்சயமாக அவர்களுடைய காணிக்கைகளைக் கொடுக்க மீண்டும் அடுத்த நாளே அவர்கள் கூடி வர பவுல் அழைத்திருக்கமாட்டான். மாறாக, சனிக்கிழமைதான் ஆராதனை நாள் என இன்று போதிக்கக்கூடியவர்கள், கொடுத்தல் என்னும் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிய அடுத்த நாளாகிய ஞாயிற்றுக் கிழமை மீண்டும் கூடுகிறார்களா? அவ்வாறு இல்லை என்றால் ஏன் இல்லை?

பின்னர் வாரத்தின் முதல் நாளே கர்த்தருடைய நாள் என்பதாக யோவான் கூறினார். கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன். (வெளி 1:10) ஒரு வகையில் சொல்லப்போனால், எல்லா நாட்களுமே கர்த்தருடைய நாட்கள் தான் என்பது உண்மையே; ஆனாலும் யோவான் இந்த நாளைப்பற்றி ஒரு தனிப்பட்ட முறையில் சொல்லியிருக்க

வேண்டும் : கர்த்தரின் நாள் என்பது ஆராதனை நாள் அல்லது வாரத்தின் முதல் நாளைத்தான் குறிக்கும். இல்லாவிடில் அதைக் கர்த்தரின் நாள் என அவர் ஏன் அழைக்க வேண்டும்?

ஆனால், வாரத்தின் முதல் நாள் ஏன் அவ்வளவு முக்கியத்துவம் பெற்றது? ஏற்கனவே குறிப்பிட்டதுபோல சட்டங்கள் மாறி, இப்போது கர்த்தர் முதலிடம் வகிப்பதைக் காட்டவும், இன்னும் அந்நாளின் முக்கியத்திற்கு வேறு பல காரணங்கள் இருக்கின்றன.

**1. கிறிஸ்து வாரத்தின் முதல் நாள் உயிர்த்தெழுந்தார்.**

கர்த்தர் உயிர்த்தெழுந்த நாள் காலையில் "ஓய்வு நாள் முடிந்து, வாரத்தின் முதலாம் நாள் விடிந்து வருகையில் மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறையைப் பார்க்க வந்தார்கள்" என வசனம் கூறுகிறது. (மத் 28:1) அதே நாளில் சிறிது நேரம் சென்ற பின் "வாரத்தின் முதல் நாளாகிய அன்றையதினம் சாயங்கால வேளையிலே,•சீடர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று : உங்களுக்குச் சமாதானம் என்றார் (யோவான் 20:19) என்பதாக நாம் படிக்கிறோம்.

**2. இயேசு மீண்டும் தமது சீடர்களுக்கு வாரத்தின் முதல் நாளிலே தரிசனமானார் :**

இயேசு, வாரத்தின் முதல் நாளிலே கல்லறையிலிருந்து உயிர்த்து எழுந்து வந்ததோடல்லாமல், அதே நாளில் தமது சீடர்களுக்கு தரிசனமானார். ஆனால் இதில் குறிப்பிடத்தக்க சுவையான செய்தி என்னவென்றால், இப்போது மீண்டுமாக ஒருமுறை வாரத்தின் முதல் நாளில் அவர்களுக்குத் தரிசனமானார் என்பதே. மறுபடியும் எட்டு நாளைக்குப் பின்பு அவருடைய சீடர்கள் வீட்டுக்குள்ளே இருந்தார்கள், தோமாவும் அவர்களுடனே கூட இருந்தான், கதவுகள் பூட்டப்பட்டிருந்தது.

அப்பொழுது இயேசு வந்து நடுவே நின்று உங்களுக்குச் சமாதானம் என்றார்" (யோவான் 20:26) என வசனம் கூறுகிறது. வாரத்தின் முதல் நாளிலே இயேசு தமது சீடர்களுக்குத் தரிசனமாகி பின்னர் எட்டு தினங்கள் சென்று மீண்டும் தரிசனமானார். இரண்டாவது சந்திப்பு எந்த நாளில் நடந்திருக்க வேண்டும்? சந்தேகமின்றி வாரத்தின் முதல் நாளில்தான். வசனங்கள் இதை நமது கவனத்திற்கு மீண்டும் மீண்டுமாக கொண்டு வர வேண்டிய காரணம் என்ன? ஏனென்றால், கிறிஸ்துவின் சட்டத்தின் கீழ் அது மிகவும் முக்கியமான ஒரு நாளாக இருப்பதால் தான். அது ஆராதனையின் நாள் ஆகிறது.

### 3. வாரத்தின் முதல் நாளே சபையின் ஆரம்ப நாள் (அப். 2)

பெந்தெகொஸ்தே நாள் என்பது, பஸ்கா பண்டிகைக்கும் இயேசு கல்லறையிலிருந்து உயிரோடே எழுந்ததற்கும் ஐம்பது நாளுக்குப் பின் வந்தது. எனவே கர்த்தர் வாரத்தின் முதல் நாளில் உயிர்த்தால், பின்னர் பெந்தெகொஸ்தே நாள் 50 நாட்களுக்குப் பின் வரும் போது, பெந்தெகொஸ்தே நாள் எந்த நாளில் வந்திருக்கும்? வாரத்தின் முதல் நாளில் தான். இங்கே பெந்தெகொஸ்தே நாள் ஏன் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது? அது வாரத்தின் முதல் நாள் வந்ததாலும் இந்த நாளில்தானே கர்த்தரின் சபை நிறுவப்பட்டது என்பதாலும், இந்த நாள் முக்கியமானது. அது மட்டுமல்ல பல முக்கியமான காரியங்கள் முதல் முதலாக இந்த நாளில் நடந்தன. இவை அனைத்தும் இந்த குறிப்பிட்ட நாளுக்கு முக்கியத்துவத்தை அளிப்பதாக இருக்கிறது. உதாரணமாக, பரிசுத்த ஆவியானவர் இந்த நாளில் தான் வந்தார். இந்த நாளில் தான் உண்மையில் முதல் நற்செய்தி பிரசங்கம் செய்யப்பட்டது. இந்த நாளில் தான் கீழ்ப்படிந்த ஆத்துமாக்கள் முதன் முதலாக இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். எனவே இந்த நாளில் நடந்த இக்காரியங்களை அலட்சியப்படுத்தி விடமுடியாது.

நிச்சயமாக தமது மக்கள் கூடவும், ஆராதிக்கவும் வேண்டி கர்த்தர் வாரத்தின் முதல்நாளைத் தேர்ந்தெடுத்துள்ளார் என்பதை சந்தேகத்திற்கிடமின்றி இப்போது நாம் ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களாக இருக்கிறோம். ஆதிக் கிறிஸ்தவர்கள் கூடி வந்த இந்த நாளின் உதாரணத்தோடு, பின் இதே நாளில் காணிக்கை கொடுக்க வேண்டி கூடிவரக் கட்டளை பெற்றுக் கொண்டபோது முன்பு இருந்திருக்கக்கூடிய எந்த சந்தேகத்தையும் இவை நிவர்த்தி செய்திருக்கும் என்பது நினைவிருக்கட்டும். ஆராதனையிலும், பிற எல்லா காரியங்களிலும் கர்த்தர் தாமே முதலிடம் பெறுகிறார். எனவே தான் கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் கூடி ஆராதிக்கவும் அவர்களுக்காக மரித்து, வாரத்தின் முதல் நாளிலே உயிர்த்த அவரை நினைக்கவும் வேண்டும்.

# கேள்விகள்

1. ஆராதிக்கும் நாள் முக்கியமானதா?
2. தேவன், தம்முடைய ஜனம், தன்னை ஆராதிக்க ஒரு நாளை விசேஷித்து வைத்துள்ளாரா?
3. ஓய்வு நாள் இன்றும் ஒருவனை கட்டுப்படுத்துமா?
4. 2 கொரி 3 : கொலோ 2 : 14 : எபி 9 : 16, 17 எபி 10 : 9 மற்றும் லூக்கா 24 : 44 என்ன போதிக்கிறது?
5. ஓய்வு நாளில் ஏன் பவுல் யூதர்களோடு கூடிவந்தார்?
6. அப் 20 : 7 -ல் கிறிஸ்தவர்கள் எந்த நாளில் கூடி வந்தார்கள்?
7. ஓய்வு நாள் ஆராதிக்கும் நாளாக இருந்திருந்தால் ஏன் சீஷர்கள் வாரத்தின் முதல் நாளில் ஆராதிக்க கூடி வந்தனர்.?
8. வாரத்தின் முதல் நாள் என்றால் என்ன?
9. ஏன் வாரத்தின் முதல் நாள் ஆராதனைக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளது?
10. கொரிந்தியர்கள் தங்கள் வரவுக்குத் தக்கதாகக் கொடுப்பதற்கு எந்த நாளில் கூடி வரவேண்டிய தாயிருந்தது?
11. "கர்த்தருடைய நாள்" விளக்கமான பொருள் கூறு?
12. "வாரத்தின் முதல் நாள்" ஏன் மிகவும் முக்கியமானது?
13. எந்த நாளில் இயேசு கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தார்?
14. எந்த நாளில் "பெந்தெகொஸ்தே" வந்தது?
15. பெந்தெகொஸ்தே நாளில் சம்பவித்த சிலவற்றைக் குறிப்பிடு.

## பாடம் - ஏழு

# ஆராதனையின் மாதிரி

இன்றைய மத உலகில் பல வகையான ஆராதனை முறைகள் இருப்பதை நாம் பார்க்கிறோம். கத்தோலிக்கர்கள் தங்களுக்கே உரித்தான தனி வழியில் ஆராதிக்கின்றனர். புராட்டஸ்டண்ட் சபைகள் வெவ்வேறு வகையான ஆராதனை முறைகளைப் பின்பற்றுகின்றன. அதாவது, வித்தியாசப்பட்ட ஆராதனை முறைகள் அனைத்தையும் நீங்கள் காண விரும்பினால், வாரக்கணக்கில் பல இடங்களுக்கும் சுற்றி வரலாம். ஏன் இந்த நிலை? இப்படி இருக்கவேண்டுமென்று கர்த்தர் விரும்பினாரா?

ஒரே ஒரு சபை தான் இருக்கிறது; அது கர்த்தருக்கே சொந்தமானது என்று வேதாகமம் கற்பிக்கிறது. (எபே. 4:4: மத். 16:18). சபையின் மாதிரி புதிய ஏற்பாட்டில் காணப்படுகிறது. இது உண்மையாக இருக்கும் வேளையில், நாம் ஆராதனை செய்ய கட்டளையிடப்பட்ட கர்த்தருடைய சபையாக, அதுவே இருக்கும்போது, ஆராதனையும் ஒரே மாதிரியாகத்தானே இருக்க வேண்டும்.

தம்மை மக்கள் இன்று எவ்வாறு ஆராதிக்க வேண்டுமென கர்த்தர் விரும்புகிறார் என்பதை அறிய நாம் புதிய ஏற்பாட்டுக்குத்தான் செல்லவேண்டும். இதை அறிய வேறு வழி எதுவும் இல்லை. ஆராதனையில் நாம் என்ன செய்யவேண்டும் என்பதை அங்கேதான் நாம் தெளிவாகக் கண்டுகொள்ள முடிகிறது. கீழ்க்கண்டவற்றை அது வெளிப்படுத்துகிறது.

### 1. தேவன் ஒருவரே ஆராதிக்கத்தக்கவர்

"....உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக . . ." என பிசாசால் சோதிக்கப்படுகையில் கிறிஸ்து கூறினார். (மத்தேயு 4:10).

**2. வாரத்தின் முதல்நாள்தான் ஆராதனை நாளாக இருக்கவேண்டும்.**

வாரத்தின் முதல் நாள்தோறும் சீடர்கள் தங்கள் வரவுக்குத்தக்கதாக சேர்த்து வைத்து, கூடிவரக் கேட்டுக் கொள்ளப் பட்டனர் : "நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள்தோறும் தன்தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக்கடவன்". (1 கொரி. 16:2).

**3. கிறிஸ்தவர்கள் கர்த்தரை ஆராதிக்க வேண்டும்.**

இதற்கு நமக்கு மூன்று காரணங்கள் உள்ளன : "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்". (அப். 2:42). "வாரத்தின் முதல் நாளிலே, அப்பம் பிட்கும்படி சீடர்கள் கூடி வந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்பட வேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான்." (அப். 20:7).

**4. நாம் எவ்வாறு ஆராதிக்க வேண்டுமென்று நமக்கு கூறப்பட்டுள்ளது :**

கிறிஸ்து கூறும்போது, "உண்மையாய்த் தொழுது கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளுங்காலம் வரும். அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார். அவரைத் தொழுது கொள்ளு கிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும் என்றார்." (யோவான் 4:23,24).

**5. ஆராதனையின் ஐந்து செயல்களும் தெளிவாக கொடுக்கப்பட்டுள்ளது :**

அவைகள் : வேதாகமப் போதனை (2 தீமோத்தேயு 2:15); ஜெபம் (அப். 2:42); பாடல் (எபே 5:19) கர்த்தரின் பந்தி (மத்தேயு 26 : 26-28); கொடுத்தல் (2கொரி. 9:6, 7). புதிய ஏற்பாட்டில் நாம் காணும் ஆராதனை முறைகள் இவை மட்டுமே. எனவே, நாம் இவைகளை மட்டுமே ஆராதனையில் கடைப்பிடிப்பதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும்.

**6. ஆராதனையில் கூடி வருவதில் தவறாதிருக்க நாம் அறிவுறுத்தப்படுகிறோம் :**

“சபை கூடிவருதலைச் சிலர் விட்டு விடுகிறது போல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம்; நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய் புத்தி சொல்ல வேண்டும்,” என எபிரேய எழுத்தர் கூறினார். (எபி 10:25)

**7. ஆராதனை முறை எளிமையனதும், தேவையானதை மாத்திரம் கொண்டதாக உள்ளது**

ஆராதனையில் பங்கு பெறுவது யாருக்கும் கடினமானதல்ல. அவசியமற்ற சடங்குகள் எதுவும் இல்லை. மாறாக, சகலரும் கலந்து கொள்ள எளிய முறைகளே உள்ளன. சகலரும் அழைக்கப்படுகின்றனர்.

**8. ஆராதனை நிகழ்ச்சி முழுவதும் கர்த்தருடைய வார்த்தையை அடிப்படையாகக் கொண்டது :**

தேவனுடைய வாக்கியங்களின்படி மட்டுமே நாம் பேசுகிறோம். (1 பேதுரு 4:11). “கர்த்தர் இவ்வாறாக கூறுகிறார்” என்பதற்கு மாறாக எதுவும் செய்யப் படுவதில்லை.

புதிய ஏற்பாட்டு ஆராதனை மாதிரியைப் பின்பற்றுவதில், கிறிஸ்துவின் சபை சிறப்புத்தன்மை பெற்றது. எனவே மற்ற குழுக்களில் உள்ள சில காரியங்கள் எங்கள் ஆராதனையில் இடம் பெறுவதில்லை. உதாரணமாக, கீழ்க்கண்டவைகள் எங்கள் ஆராதனையில் கிடையாது. :

1. நாங்கள் இசைக்கருவிகளை ஆராதனையில் பயன்படுத்துவதில்லை. தேவனைப் புகழ்ந்து பாடவேண்டுமென புதிய ஏற்பாடு தெளிவாகக் கற்பிக்கிறது. "சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி" என பவுல் கூறுகிறார். (எபே. 5:19) பாடல் பற்றிய பாடத்தில் இது பற்றி மேலும் கூறுவோம்.

2. கர்த்தரின் பந்தியை நாங்கள் இரகசியமாக அனுசரிப்பதில்லை. மாறாக, "எந்த மனிதனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன்" என பவுல் கொரிந்தியருக்கு (1 கொரி. 11:28) எழுதியிருப்பதால், கர்த்தரின் பந்தியில் கலந்து கொள்ள தடை விதிப்பதில்லை.

3. தசமபாகம் என்பதை நாங்கள் பின்பற்றுவதில்லை. அவரவர், தங்கள் வருமானத்திற்கு ஏற்றவாறு கொடுக்க வேண்டும் என பவுல் கிறிஸ்தவர்களுக்கு எழுதினார் (1 கொரி. 16:2).

4. கர்த்தரின் நாளைத்தவிர மற்ற நாட்களில் காணிக்கை வாங்குவதில்லை. வாரத்தின் முதல் நாளாக இருப்பினும் இல்லாவிட்டாலும், தாங்கள் கூடும் நேரங்களில் எல்லாம் பல குழுக்கள் காணிக்கை வசூலிக்கின்றனர். ஆனால் கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாளில் கொடுக்கக் கட்டளையிடப்பட்டுள்ளனர். (1 கொரி. 16:2).

5. ஆராதனையில் பாடல்களை பாட தனிப்பட்ட ஒரு பாடகர் குழு எங்களிடம் இல்லை. ஒவ்வொரு தனிப்பட்ட கிறிஸ்தவனும் பாடவேண்டுமென வேதவாக்கியம் கற்பிக்கிறது. எனவே, சபை உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து பாடுகிறோம். பவுல் கூறியது போல, "என்னத்தினாலெனில், நான் அந்நிய பாஷையில் விண்ணப்பம் பண்ணினால், என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதாக இருக்கும். இப்படியிருக்க, செய்ய வேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன். (1 கொரி. 14:14, 15).

6. ஈஸ்டர், கிறிஸ்மஸ் போன்ற சிறப்பு ஆராதனை நாட்கள் எங்களுக்குக் கிடையாது. "நாட்களையும் மாதங்களையும், காலங்களையும் வருடங்களையும் பார்க்கிறீர்களே. நான் உங்களுக்காகப் பிரயாசப்பட்டது வீணாய்ப் போயிற் றோ என்று உங்களைக் குறித்துப் பயந்திருக்கிறேன்" என பவுல் தமது கலாத்திய சகோதரர்களை எச்சரித்தார். (கலா 4:10, 11).

7. நாங்கள் கர்த்தரின் பந்தியில் தினந்தோறும், அல்லது மாதத்திற்கு ஒரு முறை, அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அல்லது வருடத்திற்கு ஒரு முறை கலந்து கொள்ளுவதில்லை. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை அல்லது வாரத்தின் முதல்நாளில் நாங்கள் கர்த்தரின் பந்தியில் கலந்து கொள்ளுகிறோம். ஆதி கிறிஸ்தவர்கள் இவ்வாறு செய்தார்கள் என நாம் படிக்கிறோம். (அப். 20:7) வாரத்தின் எந்த முதல் நாளில்? எது என்று கூற யாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது? ஒவ்வொரு வாரத்திலும் ஒரு முதல் நாள் உண்டு. அந்த நாளில் தான் கர்த்தரின்பந்தியில் கலந்து கொள்ளக் கூடுகிறோம். நாம் கொடுக்கவும், கற்றுக் கொள்ளவும் கூடிவரும்போது, கர்த்தரின் பந்தியில் கலந்து கொள்ளவும் கூடி வருகிறோம்.

8. கர்த்தரை ஆராதிக்க நாங்கள் எவ்விதமான நடைமுறைகளையோ, பாரம்பரியங்களையோ, சடங்குகளையோ, செய்வதில்லை. "உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அனுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல்" என பேதுரு கூறினார். (1 பேதுரு 1:18). அத்தோடு பவுல், "லௌகீக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளை கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அது மனிதர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலக வழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல", என எச்சரித்தார். (கொலோ. 2:8).

9. மனிதச் சட்டங்களையும் கொள்கைகளையும் நாங்கள் பின்பற்றுவதில்லை. அப்போஸ்தலர் பவுல் எழுதினார்: "நீங்கள் கிறிஸ்துவுடனே கூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்ததுண்டானால், இன்னும் உலக வழக்கத்தின்படி பிழைக்கிறவர்கள் போல, மனிதனுடைய கற்பனைகளின் படியும் போதனைகளின் படியும் நடந்து: தொடாதே, ருசி பாராதே, தீண்டாதே என்கிற கட்டளைகளுக்கு உட்படுகிறதென்ன? இவையெல்லாம் அநுபவிக்கிறதினால் அழிந்துபோகுமே". (கொலோ. 2:20-22).

10. பழைய ஏற்பாட்டின் நியாயப் பிரமாணத்தை நாங்கள் ஆராதனையில் பின்பற்றுவதில்லை. பலர் சனிக்கிழமை ஆராதனை, தசமபாகம் கொடுத்தல், பாடல்களில் இசைக் கருவிகளை பயன்படுத்துதல் இன்னும் இதுபோன்ற நியாயப் பிரமாணச் சட்டங்களைப் பின்பற்றுகின்றனர். ஆனால் இது வேத வசனங்களின் அப்பகுதியை தவறாகப் பயன்படுத்தும் வேலையாகும். நியாயப் பிரமாணம் இன்று நம்மைக் கட்டுப் படுத்துவதில்லை. (II கொரி. 3 : எபி. 10:9, யோவான் 1:17).

எனவே, நாம் புதிய ஏற்பாட்டில் எதையும் சேர்க்காமல், அல்லது எடுத்துப் போடாமல், அல்லது மாற்றாமல் அதை அப்படியே கடைபிடிக்க வேண்டும். (வெளி. 22:18,19; கலா. 1: 7-9). எந்த நற்கிரியையும் செய்ய மனிதனை அது முற்றிலும் தகுதியுள்ளவனாக்குகிறது. (2 தீமோ. 3:16,17). ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவும் அதன் பக்கங்களில் அடங்கியுள்ளன. (2 பேதுரு 1:3).

இந்த வகை ஆராதனைக்கு மக்கள் அனைவரும் திரும்புவதுடன், மதத்தின் பெயரால் அவர்கள் செயல், சொல் ஆகிய சகல காரியங்களிலும் புதிய ஏற்பாட்டிற்குத் திரும்பினால், நாம் மத ஒற்றுமையுடன் இருக்க முடியும். நிச்சயமாக, என்னை ஒருவிதமாக ஆராதனை செய்யவும், உங்களை வேறு ஒருமாதிரியாக ஆராதனை செய்யவும் கர்த்தர் கட்டளையிட வில்லை. மாறாக, நாம் அனைவரும் ஒரே மாதிரியாக, தம்மை ஆராதிப்பதையே அவர் விரும்புகிறார். அவர் நமக்கு அளித்திருக்கிற ஒரே உண்மை மாதிரியை நாம் பின்பற்றும்போது, நாம் அனைவரும் ஒரே மாதிரியாக ஆராதிக்க முடியும்.

# கேள்விகள்

1. ஏன் ஆராதனை முறைகளில் வித்தியாசப்பட்ட நடைமுறைகள் காணப்படுகிறது?
2. பரிசுத்த வேதாகமத்தில் எத்தனை சபைகளை நாம் வாசிக்கிறோம்?
3. சபை யாருக்கு சொந்தமானது?
4. சபையின் மாதிரியை நாம் எங்கு காண முடியும்?
5. ஆராதனையின் மாதிரியாக எது இருக்க முடியும்?
6. யார் ஆராதனைக்குரிய ஒரே ஒருவர்?
7. ஆராதனையின் தினத்தை குறிப்பிடுக?
8. யார் ஆண்டவரை ஆராதிக்க வேண்டும்?
9. எப்படி நாம் ஆராதிக்க வேண்டும்?
10. ஆராதனையின் 5 அம்சங்களை பட்டியலிடுக
11. நாம் ஏன் ஆராதனையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்துவதில்லை?
12. இரகசிய திருவிருந்து என்றால் என்ன?
13. எந்த நேரத்திலும் காணிக்கைளைச் சேர்க்கலாமா?
14. ஆராதனையில் குழுப்பாடகர்களும், விசேஷித்த பாடல் குழுக்களும் வைப்பதால் என்ன தவறு?
15. ஏன் நமக்கு கிறிஸ்துமஸ் என்றோ, ஈஸ்டர் என்றோ விசேஷித்த நாட்கள் கிடையாது.?
16. எந்த சமயத்திலும் கிறிஸ்தவன் கர்த்தருடைய திருவிருந்தில் பங்கு கொள்ளமுடியுமா?
17. மனித கோட்பாடுகளும், மனிதகொள்கைகளும் எவைகள்?
18. கர்த்தருடைய பிள்ளைகள் பழைய ஏற்பாட்டை சட்டமாக பின்பற்றுகிறார்களா?
19. புதிய ஏற்பாட்டை எப்படிப் பின்பற்ற வேண்டும்?
20. மத ரீதியான ஒற்றுமைக்கு சாத்தியமுண்டா? எப்படி?

## பாடம் - எட்டு

# வேதாகமக் கல்வி

புதிய ஏற்பாட்டில் குறிப்பிட்டுள்ள ஆராதனையின் ஐந்து செயல்களில் வேதாகமக் கல்வியும் ஒன்று. அது நமக்குக் கட்டளையாக இருப்பது மட்டுமல்லாமல், ஆதிக் கிறிஸ்தவர்கள் கர்த்தரை ஆராதிக்கும்படி கூடும்பொழுது, வேதாகமக் கல்வியும் நடைபெற்றதாக முன்னுதாரணம் உண்டு.

வேதாகமக் கல்வியை தனித்தோ கூட்டமாகவோ எந்த நேரத்திலும் நடத்தலாம். ஆனால் ஆராதனையின் ஒரு பகுதியாக ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளும் குறிப்பாக அது இடம் பெற வேண்டுமென்பதைப் பற்றி இங்கு நாம் கவனிக்கிறோம்.

வேத வசனங்களைத் தாங்களாகவே படித்துக் கற்றுக் கொள்வதின் மூலமோ, அல்லது தேவனுடைய வார்த்தையை ஒருவர் போதிப்பதைக் கேட்பதின் மூலமோ, ஆராதனையின் இந்தப் பகுதி நிறைவேற்றப்படலாம். துரோவா பட்டணத்துச் சகோதரர்கள் ஆராதனையில் கூடி வந்த சமயத்தில் பவுல் அவர்களுக்குப் போதிப்பதை அப் 20 : 7ம் வசனத்தில் நாம் பார்க்கிறோம். அப். 17 : 10 - 12 வசனங்களில் நாம் படிக்கிறோம் : “உடனே சகோதரர் இராத்திரி காலத்தில் பவுலையும் சீலாவையும் பெரோயா பட்டணத்துக்கு அனுப்பிவிட்டார்கள்; அவர்கள் அங்கே சேர்ந்து, யூதருடைய ஜெப ஆலயத்திற்குப் போனார்கள். அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக் கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தனர். அதனால், அவர்களில் அநேகம் பேரும் கனம் பொருந்திய கிரேக்கரில் அநேக

ஸ்திரீகளும் புருஷர்களும் விசுவாசித்தார்கள்." "வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணு கிறீர்களே. என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே" என கிறிஸ்து கற்பித்தார். (யோவான் 5:39).

வாலிபப் போதகன் தீமோத்தேயுவை பவுல் உற்சாகப்படுத்தி, "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு" எனக் கூறினார். (2 தீமோ. 2:15). "நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்" என கிறிஸ்து கூறினார். (மத். 5:6). மீண்டும் "அவர் பிரதியுத்தரமாக : மனிதன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்". (மத். 4:4.)

நாம் கற்றுக் கொள்ளுவது மட்டுமல்ல, ஆனால் சரியானதைக் கற்றுக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். நாம் கேட்கும் போதனை அல்லது கல்விக்கு இது பொருந்தும். அப்போஸ்தலன் பவுல் கூறுகிறார் : "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" (ரோமர். 10:17). அதாவது, நாம் தவறைக் கேட்க நேரிட்டு, முக்கியமாக, நாம் அதைச் சோதித்துப்பார்க்காவிடில், தவறைத்தான் நாம் விசுவாசிப்போம், என்று அதற்கு அர்த்தம். ஆனால் நாம் சத்தியத்தைக் கேட்டால் சத்தியத்தையே விசுவாசிப்போம்.

தேவன் இன்று நம்மோடு பேசியிருக்கிறார்; அவருடைய குமாரன் இயேசு கிறிஸ்து மூலமாக நம்முடன் அவர் பேசியிருக்கிறார். (எபி. 1:1,2). மறுரூபமான மலையின் மீது,

இயேசுவைப் பற்றி தேவன் தாமே கூறினார் : " . . . இதோ என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன். இவருக்குச் செவி கொடுங்கள் . . ." (மத். 17:5). என்ற போதிலும் கிறிஸ்து தேவனுடைய வசனத்தைப் பேசினார். "இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக : ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளக் கடவன், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம். என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக் கொள்ள மாட்டான். நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது." (யோ 14:23, 24). அதன்பின்னர் இப்படியாக வசனம் குறிப்பிட்டுள்ளது: "இந்தப் புத்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீடருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டிருக்கிறது." (யோவான் 20:30,31). மேலுமாக வேத வாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப் பட்டிருக்கிறது; தேவனுடைய மனிதன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும் படியாக அது பூரணப் பிரமாணமாக இருக்கிறது. (II தீமோ, 3:16, 17; யாக். 1:25).

மேலே கண்ட உண்மைக்கேற்ப, நாம் கர்த்தருடைய நாளிலே கூடிவந்து, தேவனுடைய வசனத்தை ஏன் கற்றுக் கொள்ள வேண்டுமென்பதற்கு பல காரணங்கள் உள்ளன.

1. அது தேவனுடைய வார்த்தையாக இருப்பதால் நாம் அதை கற்க வேண்டும். (எபி. 13:7; 1 பேதுரு 1:23; எபே. 6:17). கர்த்தர் நம்மை இருளில் வைக்காமல், தமது விருப்பத்தை நமக்கு வெளிப்படுத்தியிருப்பது எவ்வளவு அருமையான காரியம்.

2. தேவனுடைய விருப்பத்தை நாம் முற்றிலும் பூரணமாக அறிந்து கொள்ள விரும்ப வேண்டும். (அப். 13:7) எனவே, நாமேதான் படித்துக் கற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறு, கர்த்தரின் விருப்பத்தை நாமே படித்துக் கற்றுக் கொள்ளக் கூடிய அறிவை தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார்.

3. நாம் கற்றுக்கொள்ள விரும்பாவிட்டால் ஏமாற்றப்பட்டு விடுவோம் (எபே. 4:14; எபே 3 : 6; யாக். 1:22). கிறிஸ்தவம் என்ற பெயரில் பல காரியங்கள் கற்றுக் கொடுக்கப்படு கின்றன. அது உண்மையா இல்லையா என்று நாம் எப்படி அறிவோம்? நாம் கேட்பவற்றை தேவனுடைய வசனத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து தெரிந்து கொள்ள வேண்டும். அந்த ஆவிகள் அல்லது போதகர்கள் தேவனால் உண்டானவர்களா, இல்லையா என நாம் சோதித்தறியும்படி யோவான் கூறினார். (யோவான். 4:1). கர்த்தரின் வசனத்தைத் தொடர்ந்து சோதித்தறியும் ஒருவன் ஏமாந்து போக முடியாது.

4. தேவனுடைய விருப்பத்தை பிறருக்குக் கற்பிக்கக் கூடிய அளவிற்கு நாம் அதைக் கற்றுக் கொள்ள விரும்ப வேண்டும். பவுல் கூறினார்: "உன்னைக் குறித்தும் உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு. இவைகளில் நிலை கொண்டிரு. இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக் கொள்ளுவாய்" 1 தீமோ. 4:16) ஆதிக் கிறிஸ்தவர்களைப் பற்றி வசனம் கூறுகிறது : "சிதறிப்போனவர்கள் எங்கும் திரிந்து, சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள்." (அப். 8:4).

நாம் கற்றுக் கொள்ளுவதைத் தொடரும் இச்சந்தர்ப்பத்தில் II தீமோத்தேயு 2 : 15ம் வசனத்திற்கு நாம் திரும்பிச் செல்வோம். சத்திய வசனத்தை சரியாகப் பகுத்துணர்ந்து கற்றுக் கொள்ளும் அவசியத்தைப் பற்றி அங்கே பவுல் கூறுகிறார். நமது பாடத்திலும் அவ்வாறே செய்வோம். அதாவது, வேதாகமம், பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என இரு பெரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது என நாம் காண்கிறோம். பழைய ஏற்பாட்டில் பிதாக்களின் சட்டம்,

மோசேயின் சட்டம் ஆகியவை நம்மைக் கட்டுப்படுத்தும் சட்டங்கள் அல்ல என்பதையும் நாம் அறிந்து கொள்வோம். புதிய ஏற்பாடு, கிறிஸ்துவின் சட்டத்தை உடையதாக இருக்கிறது. வேறுவிதமாகக் கூறின், பழைய ஏற்பாட்டு பகுதி கிறிஸ்துவின் மரணத்திற்கு முந்திய கால மக்களுக்கான சட்ட நூல். அதனால் தான் ஒன்று பழையதும் மற்றொன்று புதியது என்றும் ஆயிற்று. ஆனால், நாம் எங்கே இருக்கிறோம்? சந்தேகமில்லாமல், சிலுவைக்குப் பிந்திய பக்கத்தில் நாம் வாழ்வதால், புதிய ஏற்பாட்டில் குறிப்பிட்டபடி கிறிஸ்துவின் சட்டத்தின் கீழ் வாழ்கிறோம். (எபி. 9:16, 17; எபி. 10:9).

அப்படியானால், பழைய ஏற்பாட்டை தேவனுடைய வார்த்தை என்று நாம் ஏற்றுக் கொள்ளுகிறோமா என்ற கேள்வி எழுகிறது. ஆம், என்பதுதான் இதற்கு நிச்சயமான பதில்; என்றபோதிலும், சட்டம் என்ற வகையில் அது நம்மையோ அல்லது வேறு எவரையுமோ இப்போது கட்டுப்படுத்துவதில்லை. அப்படியானால் நாம் ஏன் பழைய ஏற்பாட்டைக் கற்றுக் கொள்ள வேண்டும்? கீழே காணும் பல காரணங்களுக்காக நாம் பழைய ஏற்பாட்டைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

1. சகலமும் படைக்கப்பட்டது பற்றியும், எல்லாவற்றின் தொடக்கத்தைப் பற்றியும் அறிந்து கொள்ள;
2. மனிதனுடைய சரித்திரத்தையும், தேவன் அவனை நடத்திய விதத்தைப் பற்றியும் அறிந்து கொள்ள;
3. நமக்கு முன்னுதாரணமாக அது எழுதப்பட்டிருப்பதாக பவுல் கூறுவதால், (I கொரி. 10 : 6). உண்மையில், பல பாடங்களை அது நமக்காக கொண்டுள்ளது.
4. அதில் காணப்படும் கொள்கைகள், அது அளிக்கப்பட்ட நாளில் இருந்தது போலவே இன்றும் உண்மையாக இருப்பினும், அது நமக்குச் சட்டம் அல்ல.
5. நாம் இப்போது ஒரு மேலான சட்டத்தின் கீழ் வாழ்ந்து வருவதையும், இதில் மகத்தான நம்பிக்கை நமக்கு உள்ளது என்பதை நாம் அறிந்து கொள்ளவும் (யோவான் 1:17).

தேவனுடைய வசனத்தை மிகவும் சிறப்புடன் நாம் கற்றுக் கொள்ள உதவியாகவும், அவற்றைச் சரியாக பகுத்து உணரவும், நமது வேதாகமக் கல்விக்கு பயன்படும் சில விதிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன.

1. பாடத்தைப் பல முறை படித்தல்.
2. சந்தர்ப்பத்தை கவனித்துப் படித்தல்
3. பேசுகிறவர் யார்?
4. யாரிடம் அவர் பேசுகிறார்?
5. எப்போது அது பேசப்பட்டது?
6. அது மறைபொருளாகவா அல்லது நேரிடை யாகவா?
7. அது ஒரு கட்டளையா?
8. நமது இரட்சிப்புக்கு அது சம்பந்தப்பட்டதா?

மேலும், கீழ்க்கண்ட உபகரணங்களும் உங்கள் வேதாகமக் கல்விக்குப் பயன்படும் : வித்தியாசப்பட்ட மொழியாக்கங்கள், ஒரு வேதாகம அகராதி, ஒரு வேதாகம ஒத்த வாக்கிய புத்தகம், விளக்கவுரை நூல்கள் போன்றவை. என்றாலும், இவை அனைத்திற்கும் மேலாக, ஜெபத்துடன் உங்கள் வேதாகமத்தையே படியுங்கள். கற்றுக் கொள்ளுங்கள். வேதாகமத்தைப் பற்றி பலருக்கு நிறைய விஷயங்கள் தெரியும். ஆனால் வசனங்களின் அர்த்தம் தெரியாது.

கர்த்தர் நம்மிடம் கேட்டுக் கொள்ளுவது போல, நீங்களும் நானும் செய்யும் போதும், ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளும் பரிசுத்தவான்களோடு கற்றுக் கொள்ள கூடி வரும் போதும், நாம் கிறிஸ்தவர்களாக வளரவும், விருத்தியடைவும் உதவும் வேதாகம அறிவு நமக்குக் கிடைக்கும். எல்லாரும் இவ்விதமாகச் செய்தால், பின்னர் சபையானது வலிமையுடையதாக இருக்கும். தேவனுடைய வார்த்தையே நம்மை இரட்சிக்கிறது என்று அறிந்துகொள்வதோடல்லாமல், நம்மை ஒற்றுமையாக்குகிறது என்றும், ஒருவேளை நமது மத நண்பர்களையும் அவைகளை ஏற்றுக் கொள்ளச் செய்ய முடியும்.

# கேள்விகள்

1. வேதாகமக் கல்வியில் யாரெல்லாம் பங்கு கொள்ளலாம்?
2. எவ்வாறு தேவனுடைய வார்த்தையை நாம் கேட்கலாம்?
3. ஏன் தெசலோனிக்கேயரை விட பெரோயா பட்டணத்தார் மிகுந்த நற்குணசாலிகளாக இருந்தனர்?
4. யோவான் 5 : 39- ல் கிறிஸ்து என்ன சொன்னார்.?
5. II தீமோ 2 : 15 வசனம் குறிப்பிடு.
6. யாரெல்லாம் ஆசீர்வதிக்கப்பட்டு திருப்தியடைவார்களென்று கிறிஸது கூறினார்?.
7. மனுஷன் அப்பத்தினால் மாத்திரம் பிழைப்பானா?
8. எப்படி விசுவாசம் வருகிறது?
9. தவறை நாம் கேட்கும் போது என்ன சம்பவிக்கும்?
10. தேவன் இன்றைக்கு மனுஷனோடு எவ்வாறு பேசுகிறார்?
11. ஏன் கிறிஸ்துவின் போதனைகள் யாவும் எழுதப்பட்டுள்ளது?
12. II தீமோ 3 : 16, 17யும் யாக் 1 : 25- ம் வாசியுங்கள்.
13. ஏன் நாம் கற்றுக் கொள்ள கூடி வர வேண்டும்? காரணங்களை கூறு.
14. தேவ வசனத்தை முறையாக பகுத்து பார்த்தல் என்றால் என்ன?
15. வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள 3 சட்டங்களைக் கூறு?.
16. எந்த பிரமாணத்தின் கீழ் நாம் இருக்கிறோம்?
17. பழைய ஏற்பாட்டில் தேவனுடைய வார்த்தைகள் இருக்கிறதா?
18. ஏன் நாம் பழைய ஏற்பாட்டையும் கற்க வேண்டும்?
19. வேத வகுப்புக்கான சில விதிமுறைகளைக் கூறு?
20. வேதத்தை கற்க பயன்படும் வேறு உபகரணங்கள் எவை?
21. வேத அறிவு நமக்கு எவ்வாறு உதவி செய்யும்.

பாடம் - ஒன்பது

# ஜெபம்

புதிய ஏற்பாட்டு ஆராதனையின் மற்றொரு அம்சம் ஜெபமாகும். ஆதிக் கிறிஸ்தவர்கள் ஆராதிக்கக் கூடிவரும்போது, அவர்களின் ஆராதனையில் ஜெபம் முக்கிய பங்கு பெற்றிருந்தது. சபை ஆரம்பிக்கப்பட்ட வேளையில், "அவர்கள் அப்போஸ் தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந் தார்கள்" (அப். 2:42) என வசனம் கூறுகிறது. "ஜெபத்திலும்" என குறிப்பிடுவதின் மூலம் ஆராதனையின் இப்பகுதிக்குத் தரப்பட்ட முக்கியத்துவத்தைக் கவனியுங்கள்.

ஜெபம் என்ற வார்த்தைக்கு பரிந்து பேசுதல், தியானம் செய்தல், விண்ணப்பித்தல், அல்லது கர்த்தரோடு பேசுதல் என்று பொருள். ஜெபம் நமது ஆராதனையின் ஒரு பாகமாக இருப்பது மட்டுமல்லாமல், நமது அன்றாட வாழ்வின் ஒரு பகுதியுமாகும். பவுல் எழுதுகிறார் : "எந்த சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்". (எபேசியர் 6:18). மீண்டுமாக, "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்" என்று அவர் கூறுகிறார். (1 தெச. 5:17). ஜெப வாஞ்சையுடன் ஒருவர் எப்போதும் ஆவியில் நிறைந்திருக்க வேண்டும் என்பதுதான் இதற்கு அர்த்தம்.

இந்த அதிகமுக்கியத்துவம் வாய்ந்த காரியத்தைப்பற்றி நாம் கவனிக்கும்போது, சில முக்கிய குறிப்புகளை இங்கு காண்போம்:

**1. ஜெபம் முக்கியமாக கிறிஸ்தவர்கள் அல்லது தேவனுடைய பிள்ளைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது :**

கிறிஸ்தவன் அல்லாத ஒருவன் ஜெபம் செய்ய இயலாது என்றோ, அல்லது ஜெபம் செய்யக்கூடாது என்றோ அதற்கு

அர்த்தம் அல்ல. ஆனால் ஜெபம் கிறிஸ்தவனுக்குச் சொந்தமான ஒரு சிலாக்கியமும் ஆசீர்வாதமும் ஆகும் என வேதவாக்கியம் தெளிவாகக் கூறுகிறது. "பாவிகளுக்குத் தேவன் செவி கொடுக்கிறதில்லை என்று அறிந்திருக்கிறோம்; ஒருவன் தேவ பக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவி கொடுப்பார்" (யோவான் 9:31) என நாம் படிக்கிறோம். ஒருவன் தேவனைத் தொழுது கொள்ளு பவனாகவும், கர்த்தரின் விருப்பத்தின்படி நடப்பவனாகவும் இருந்தால் மட்டுமே கர்த்தர் ஒருவனுடைய ஜெபத்தைக் கேட்கிறார் என்னும் நிபந்தனைகளைப் பாருங்கள். யாரைப்பற்றிக் கூறுகிறார்? சந்தேகமின்றி ஒரு கிறிஸ்தவனைப் பற்றித்தான். மேலுமாக, ஒருபாவி எதற்காக ஜெபம் செய்யக்கூடும்? தனது பாவங்களைக் கர்த்தர் மன்னிக்க வேண்டும் என்று ஒரு பாவி ஜெபிக்க இயலாது. ஏனென்றால், ஒருவன் விசுவாசித்து, இரட்சிக்கப்பட திருமுழுக்குப் பெற வேண்டுமென்று கிறிஸ்து கூறினார். (மாற்கு 16:16). விசுவாசத்தை அடைய அவன் ஜெபம் செய்ய முடியாது. ஏனெனில் விசுவாசத்தை உண்டாக்க தேவனுடைய வசனம் தரப்பட்டுள்ளது. (யோவான் 20:30, 31; ரோமர் 10:17). அல்லது பாவியாக இருந்துகொண்டே வேறு எந்தக் காரியத்திற்காகவும் அவன் ஜெபிக்க இயலாது.

புதிய ஏற்பாட்டுப் பக்கங்களில் காணப்படும் ஜெபங்களைப் பற்றிய பல வசனப் பகுதிகளையும் நாம் படிக்கும்போது, அவை அனைத்துமே கிறிஸ்தவனுக்காகச் சொல்லப்பட்டிருக்கிறதை நாம் காணமுடியும். கீழ்படிதலின் விளைவாக ஒரு கிறிஸ்தவன் தேவனுடைய பிள்ளையாகிறான். (கலா. 3:26, 27). எனவே, உரிமையுடன் தேவனை அப்பா, பிதாவே என அவன் அழைக்கக்கூடும். (ரோமர் 8:15). பாவியும் பரிசுத்தவானும் ஜெபத்தின் வழியாக பிதாவை அடையக்கூடு மென்றால், பாவியை விட கிறிஸ்தவனுக்கு என்ன சிலாக்கியம் இருக்கக்கூடும்? எனவே, கிறிஸ்தவனுக்கு ஜெபம் என்னும் சிறப்பான சிலாக்கியம் இருப்பதை நிச்சயமாக நீ காணமுடியும்.

இதுவே, ஒருவன் கிறிஸ்தவனாக இருப்பதால் கிடைக்கும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களில் ஒன்றாகும். (எபே. 1:3).

தனது பாவங்களுக்கு மன்னிப்பு பெறுவதற்காக ஒரு பாவி ஜெபம் செய்து அதன் மூலம் கிறிஸ்தவனாகிறான் என்ற பரவலான கருத்து இன்று உள்ளது. என்ற போதிலும், இது முற்றிலுமாக மனிதனுடைய உபதேசமே தவிர, தேவனுடைய வசன ஆதாரம் எதுவும் இதற்குக் கிடையாது.

### 2. நமது ஜெபங்கள் இயேசு கிறிஸ்துவின் வழியாக தேவனுக்கு ஏறெடுக்கப்பட வேண்டும்.

தேவன் பிதாவாக இருக்கிறார்: சகல ஆசீர்வாதங்களையும் அளிப்பவராக அவர் இருக்கிறார். நமக்கு உதவி தேவைப்படும் சமயங்களில் அவரை அணுகவும், நமக்கு அவர் ஏற்கனவே அளித்துள்ள ஆசீர்வாதங்களுக்காக அவருக்கு நன்றி சொல்லவும் வேண்டியது சரியான செயலே. என்றாலும், நமக்கும் தேவனுக்கும் இடையே பாவம் குறுக்கிடுவதால் நாம் தேவனிடத்தில் நேரே செல்ல இயலாது. ஆகவே நமக்காகப் பரிந்து பேச ஒரு மனிதனை (வாழ்வில் அவன் நிலை ஏதுவாக இருப்பினும்) நாம் எதிர்பார்க்கத் தேவையில்லை. மாறாக, இயேசுவே நமது மத்தியஸ்தரும், நமக்காகப் பரிந்து பேசுபவரும், ஒருமைப்படுத்துபவருமாக இருக்கிறபடியால், கிருபையின் சிங்காசனத்தை இயேசு வழியாகவே நாம் அணுக வேண்டும். தேவனுடைய வார்த்தைக்கு நாம் செவி கொடுப்போம். "என் பிள்ளைகளே நீங்கள் பாவஞ் செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்: ஒருவன் பாவஞ் செய்வானாகில் நீதிபரராயிருக்கிற இயேசுக் கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுபவராயிருக்கிறார். நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்." (1 யோவான் 2:1, 2). மீண்டுமாக,

"தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனிதருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக் கொடுத்த மனிதனாகிய கிறிஸ்து இயேசு அவரே . . ." (1 தீமோ. 2:5,6). எனவே, நாம் எப்போதுமே இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தினால் அல்லது அவருடைய அதிகாரத்தைக் கொண்டு ஜெபம் செய்ய வேண்டும். (மத். 28:18).

### 3. ஆவியோடும் உண்மையோடும் நாம் ஜெபிக்க வேண்டும் :

தேவனை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்க வேண்டும் என கர்த்தர் கூறியிருப்பதை, நாம் முந்தைய பாடங்களில் கவனித்தோம். (யோவான் 4:24). ஆராதனையிலும், அன்றாட கிறிஸ்தவ வாழ்விலும் ஜெபம் ஒரு பகுதியாக இருப்பதால், நமது ஜெபங்கள் ஆவியோடும் உண்மையோடும் இருக்க வேண்டும். பவுல் கொரிந்தியருக்கு எழுதும்போது, "என்னத்தினாலெனில், நான் அந்நிய பாஷையிலே விண்ணப்பம் பண்ணினால், என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதாக இருக்கும். இப்படியிருக்க, செய்ய வேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன்; கருத்தோடும் பாடுவேன்" என்றார். (1 கொரி. 14:14, 15). அதாவது, நமது ஜெபங்கள் கருத்தோடு செய்யப்பட வேண்டும். நாம் சொல்லிக் கொண்டிருப் பவற்றில் நமது மனங்கள் ஒன்றித்திருக்க வேண்டும்; அவை தாழ்மையோடும் உண்மையோடும் இருத்தல் அவசியம். மேலுமாக, நமது ஜெபங்கள் வேத வசனத்திற்கு இணக்கமாக இருக்கவேண்டும். அதாவது, கர்த்தருடைய விருப்பத்திற்கு மாறான காரியங்களைச் செய்ய அவரிடம் கேட்கக் கூடாது. ஒரு சமயத்தில் கிறிஸ்துவின் சீடர்களில் சிலர் மூடத்தனமான ஒரு வேண்டுகோளை விடுத்தபோது, "இயேசு பிரதியுத்தரமாக: நீங்கள் கேட்டுக் கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும்,

நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா என்றார் ..." (மத். 20:22). மீண்டுமாக, இயேசு கூறினார் : " . . . உன் தேவனாகிய கர்த்தரை பரீட்சை பாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கிறதே என்றார்." (மத். 4:7).

"கர்த்தரின் ஜெபம்" என்றழைக்கப்படுவதை நாம் உபயோகிக்கக் கூடாது என்பதற்கு இது ஒரு காரணமாகும். (மத். 6:9-13). இராஜ்ஜியம் வருவ்தாக என்று ஜெபிப்பது கர்த்தருடைய விருப்பத்திற்கு இசைந்ததல்ல; ஏனெனில் அவருடைய இராஜ்ஜியம் ஏற்கனவே வந்துவிட்டது (எபிரேயர். 12:26.).

**4. ஜெபம் செய்யும் முறைகள் வேதாகமத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது :**

நன்றி தெரிவிக்கும் ஜெபங்களை நாம் ஏறெடுத்தல் வேண்டும். "நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல், எல்லா வற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத் தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்" (பிலிப். 4:6) உதவி தேவைப்படும் வேளைகளில் நாம் ஜெபிக்க வேண்டும். "அப்படியே பேதுரு சிறைச்சாலையிலே காக்கப்பட்டிருக் கையில் சபையார் அவனுக்காகத் தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார்கள்." (அப். 12:5).

நாட்டுத் தலைவர்களுக்காக நாம் ஜெபிக்க வேண்டும். (ரோமர். 13). ஒவ்வொருவரும் பிறர் நலன்களுக்காக ஜெபிக்க வேண்டும். "நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங் களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதா யிருக்கிறது." (யாக்கோபு 5 : 16).

வியாதிக்காரருக்காக நாம் ஜெபிக்க வேண்டும். "உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்ப் பூசி, அவனுக்காக ஜெபம் பண்ணக் கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவம் செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்." (யாக் 5:14,15).

நாம் ஜெபிக்க கடமைப்பட்ட பல காரியங்களைப் பற்றியும், தனிப்பட்ட்வர்களைப் பற்றியும் கூறும் வேதத்தின் அநேக வசனங்களை நாம் அடுக்கிக் கொண்டே போகலாம். இதில் சபை பற்றிய காரியங்களும், நமது குடும்பங்களைப் பற்றிய விஷயங்களும், வீழ்ந்து போனவர்களைப் பற்றியும் இன்னும் பல காரியங்களும் அடங்கும்.

**5. ஜெபத்தைக் குறித்த சில எச்சரிக்கைகளையும் வேத வசனம் தருகிறது :**

"அன்றியும் நீ ஜெபம் பண்ணும்போது மாயக்காரரைப் போலிருக்க வேண்டாம்; மனிதர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும் வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம் பண்ண விரும்புகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு; அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார். அன்றியும் நீங்கள் ஜெபம் பண்ணும்போது, அஞ்ஞானிகளைப் போல் வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்; அவர்கள், அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள். அவர்களைப் போல நீங்கள் செய்யாதிருங்கள்; உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர்

அறிந்திருக்கிறார்," (மத்தேயு 6:5-8) என்று கிறிஸ்து கூறுகிறார். மீண்டுமாக, "மனிதருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரம பிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனிதருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்," என அவர் எச்சரிக்கிறார். (மத்தேயு 6:14,15).

எனவே, இறுதியாக, நமது ஆராதனையின் ஒரு பகுதியாகவோ அல்லது நமது அன்றாட வாழ்வின் ஒரு பகுதியாகவோ ஜெபத்தை நாம் கருதிய போதிலும், அது முக்கியத்துவம் பெற்ற பெரிய காரியம் என நாம் அறிய வேண்டும். ஆனாலும், கிறிஸ்தவர்களாகிய நாம் மேற்கண்ட இரு வகையிலும் தேவனோடு உறவாட தனிச்சலுகை பெற்றிருக்கிறோம். அது மட்டுமல்லாமல், கர்த்தரும் அதை எதிர்பார்க்கிறார். ஆராதனையைப் பொறுத்தவரையில் கிறிஸ்தவர்கள் கூடி வராமல், வீட்டில் உட்கார்ந்து கொண்டே எவ்வாறு காணிக்கை செலுத்தவோ அல்லது கர்த்தரின் பந்தியில் பங்கு பெறவோ முடியாதோ, அவ்வாறே வீட்டிலிருந்து கொண்டே ஜெபங்களைச் செய்வது ஆராதனையில் பங்கு பெறுவதாகாது. ஆராதனைக்காக கூடிவரும் கிறிஸ்தவர்கள் வீட்டில் ஜெபம் செய்வார்கள். ஆனால், ஆராதனைக்காகக் கூடி வராத மக்கள் வீட்டிலும் ஜெபம் செய்யமாட்டார்கள். ஒருவேளை செய்தாலும் கர்த்தருக்கு விசுவாசமுள்ளவர்களாக இருக்கக் கற்றுக் கொள்ளும் வரை அதனால் பயன் எதுவுமில்லை.

விசுவாசத்தோடு ஜெபியுங்கள் - கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும். ஜெபம் வல்லமைமிக்கது.

# கேள்விகள்

1. ஜெபம் என்ற வார்த்தையை விளக்குக?
2. ஜெபம் என்ன பங்கை நம்முடைய வாழ்க்கையில் செய்கிறது?
3. எப்பொழுதெல்லாம் நாம் ஜெபிக்கலாம்?
4. யாருக்கு மட்டும் ஜெபம் உரியது?
5. யோவான் 9 : 31 வாசித்து விளக்குக?
6. எதற்காக ஒரு பாவி ஜெபிக்க வேண்டும்?
7. யார் கிறிஸ்தவன்?
8. ஜெபத்தின் மூலம் யார் தேவனைச் சேரமுடியும்?
9. ஜெபத்தினால் ஒரு பாவி இரட்சிப்படைய முடியுமா?
10. யார் மூலமாக நாம் தேவனிடத்தில் ஜெபிக்க வேண்டும்?
11. இயேசு நமக்கு யாராக இருக்கிறார்?
12. ஆவியோடும் உண்மையோடும் ஜெபிக்க வேண்டும் என்பதை விளக்குக?
13. நம்முடைய ஜெபத்தினால் தேவனை நாம் பரீட்சிக்க முடியுமா?
14. "கர்த்தரின்" ஜெபம் என்றால் என்ன?
15. ஏன் நாம் இந்த ஜெபத்தை பயன்படுத்த முடியாது?
16. நாம் ஜெபிக்க வேண்டிய சிலவற்றைக் குறிப்பிடுக?
17. யார் யாருக்கெல்லாம் நாம் ஜெபித்தல் வேண்டும்? குறிப்பிடுக.
18. ஜெபித்தலில் ஆண்டவரின் எச்சரிப்புகள் சிலவற்றைக் குறிப்பிடுக.
19. கூட்டங்களில் பங்குபெறாமல் வீடுகளில் தங்கி ஜெபிப்பது கிறிஸ்தவர்களுக்கு ஏற்றதா?
20. எப்படி நாம் ஜெபித்தல் வேண்டும்?

## பாடம் - பத்து

# பாட்டு

கிறிஸ்தவ மார்க்கம், பாடித் துதிக்கும் ஒரு மார்க்கமாகும். புதிய ஏற்பாட்டு ஆராதனையில் பாடல் ஒரு பகுதியாகும். ஆராதனையின் அதிமுக்கிய பங்கை வகிக்கும் இதைப் பற்றி இந்த சுருக்கமான பாடத்தில் கவனமாகப் பார்ப்போம்.

முதலாவதாக, பாடல்கள் சம்பந்தப்பட்ட வேத வசனங்கள் பலவற்றை நாம் கவனிக்க விரும்புகிறோம்.

1. "அவர்கள் ஸ்தோத்திரப் பாட்டைப் பாடின பின்பு மலைக்குப் புறப்பட்டுப் போனார்கள்" (மத்தேயு 26:30).

2. "நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம் பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள். காவலில் வைக்கப் பட்டவர்கள் அதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்".

3. "புறஜாதியாரும் இரக்கம் பெற்றதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்துகிறார்களென்றும் சொல்லு கிறேன். அந்தப்படி இதினிமித்தம் நான் புறஜாதிகளுக் குள்ளே உம்மை அறிக்கை பண்ணி, உம்முடைய நாமத்தைச் சொல்லி, சங்கீதம் பாடுவேன் என்று எழுதியிருக்கிறது". ரோமர் (15:9)

4. "நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன்" (1 கொரி 14:15).

5. "சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப் பாட்டுக்களினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி . . "(எபே 5:19).

6. "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங் களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டு களினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரை பக்தியுடன் பாடி; "(கொலோசெயர் 3:16).

7. "உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதித்துப் பாடுவேன் ..." (எபி. 2 : 12).

8. "உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம் பண்ணக் கடவன்; ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால், சங்கீதம் பாடக்கடவன்". (யாக்கோபு 5 : 13).

9. " ...புதிய பாட்டைப் பாடினார்கள்." (வெளி. 5:10).

10. "அவர்கள் சிங்காசனத்திற்கு முன்பாகவும், நான்கு ஜீவன்களுக்கு முன்பாகவும், மூப்பர்களுக்கு முன்பாகவும் புதுப்பாட்டைப் பாடினார்கள் . . ." (வெளி. 14 : 3).

11. "அவர்கள் தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும் ஆட்டுக் குட்டியானவருடைய பாட்டையும் பாடி . . . " (வெளி. 15:3).

புதிய ஏற்பாட்டின் பக்கங்கள் அனைத்திலும் மேலே குறிப்பிட்டவைகள் மட்டுமே பாடல் சம்பந்தப்பட்ட வசனங்கள் ஆகும். இது சம்பந்தமாக இவ்வசனங்களின் மூலம் கர்த்தர் என்ன விரும்புகிறார் என்பது தெள்ளத் தெளிவாகக் காணப்படுகிறது. இதில் கூறப்பட்டவைகளுக்கு அதிகமாக அல்லது குறைவாகப் போனால், அவருடைய வசனத்திற்கு ஏற்புடையதாக இருக்காது.

இன்றைய மத உலகில், பல மக்கள் பாடல் என்றால் இசை என்றும், இசை என்றால் வாத்தியக் கருவியின் இசை என்றும் கருதுகின்றனர். ஆகவே தான், பல மதக்குழுக்கள் தங்கள் பாட்டுக்களோடு வாத்திய இசைக் கருவிகளையும் இணைத்

துள்ளனர். ஆனால், நமது ஆராதனையில், பாட்டுகள் பாடவேண்டுமென புதிய ஏற்பாடு கற்பிக்கிறதை எல்லாரும் ஏற்றுக்கொள்ளும் அதே வேளையில், இசைக் கருவிகளுடன் இசைந்து பாடுவதை ஆராதனைகளில் அனுமதிப்பதை நாம் ஏற்றுக் கொள்ள இயலாது. இதைப் பற்றி வேதாகமம் என்ன சொல்லுகிறது? பாட்டு மட்டும் எனக் கூறுகிறதா அல்லது ஆராதனையில் இசைக் கருவிகளையும் உபயோகிக்க வேண்டும் என சொல்லுகிறதா? இசைக் கருவிகளின் உதவியின்றி ஆராதிக்க இயலுமா? அல்லது அவற்றின் உதவியோடு ஆராதிக் வேண்டுமா? அல்லது இரண்டில் ஏதாவது ஒன்றைக் கடைபிடிக்கலாமா? நாம் இவற்றிற்கான விடையைக் காண்போம்.

வாய்ப்பாட்டு, வாத்தியக் கருவி இசை என இருவகை இசைகளை மனிதன் அறிவான். வாய்ப்பாட்டு ஒரு மனிதனின் குரல் நாளங்களிலிருந்து உண்டாகிறது. எனவே தனிப்பட்ட மனிதனுக்குள்ளிருந்து புறப்படும் அது ஜீவனுள்ளதாக இருக்கிறது. தேவனுடைய சொந்தப் படைப்பிலிருந்து அது வருகிறது. எனவே, மனிதனுடைய குரலில் இருந்து வரும் சத்தங்களால் உருவாகும் இசையே உலகத்திலுள்ள சகல இசைகளிலும் மிகவும் அழகானதாகக் கருதப்படுகிறது. கருவிகளைக் கொண்டு உண்டாகும் இசையானது இதற்கு முற்றிலும் மாறுபட்டதாக இருக்கிறது. அது கருவிகளால் உண்டானது. இசைக் கருவி மனிதனால் உண்டாக்கப்பட்டுள்ளது. அது உணர்ச்சியற்றது, உயிரற்றது, உற்சாகமற்றது, இதயமற்றது. யாரோ ஒரு மனிதன் அதை இசைப்பதால் மட்டுமே அது சத்தம் உண்டாக்குகிறது. தேவன் அதை அப்படியாக உண்டாக்கவில்லை. ஆனால் அது மனிதனின் ஒரு கண்டுபிடிப்பு. அது ஒரு மாற்று. இப்போது தேவன் எதில் பிரியப்படுவார்? "ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரப்பலியை அவர் மூலமாக எப்போதும் தேவனுக்குச் செலுத்தக் கடவோம்" என எபிரேய எழுத்தர் கூறுகிறார். (எபி. 13 : 15).

கடந்த காலத்தில் உள்ள புகழ் பெற்ற மதத்தலைவர்கள் வேதாகமம் கற்பிக்கிறதைப் போல வாய்ப்பாட்டை மட்டுமே ஆதரித்தார்களே தவிர, ஆராதனைகளில் வாத்திய இசைக் கருவிகளைப் பயன்படுத்துவதை ஆதரிக்கவில்லை. அவர்களில் சிலருடைய அறிக்கைகளைக் காண்போம் :

1. **ஜான் வெஸ்லி :** "நமது ஆராதனைக் கூடங்களில் வாத்திய இசைக் கருவிகள் ஒலிப்பதும் காணப்படுவதும் தவிர்க்கப்பட்டால், நல்லது. ஆனாலும் நான் அவைகளுக்கு ஒன்றும் எதிரியல்ல." (Clark's Commentary, Vol. IV., P. 686).

2. **ஜான் கால்வின் :** "தேவனை ஆராதிக்கும் சடங்குகளில் வாசனைப் பத்திகள், மெழுகுவர்த்திகள் ஆகியவற்றை கொளுத்தி வைப்பது, இன்னும் நியாயப் பிரமாணத்தின் சில சடங்குகளை மீண்டும் செய்வது எவ்வாறு சரியாக இருக்காதோ, அதே போல வாத்திய இசைக் கருவிகளை இசைப்பதும் சரியல்ல. இவைகளையும், இவை போன்ற இன்னும் பல காரியங்களையும் யூதர்களிடமிருந்து, பாப்டிஸ்ட்டுகள் முட்டாள்த்தனமாக கடனாகப் பெற்றுள்ளனர்." (John Calvin's Commentary, Thirty-third Psalm).

3. **மார்ட்டின் லூதர்:** "ஆர்மோனியம் பாகாலின் ஒரு சின்னம்" என அவர் அழைத்தார். (Mc Clintock and Strong's Encyclopedia, Music, Vol. VI., P.762).

4. **ஆதம் கிளார்க் :** "ஒரு கலை என்ற ரீதியில் இசையை நான் மிகவும் மதிக்கிறேன், வியக்கிறேன்; ஆனால் தேவனுடைய வீட்டிலே இசைக் கருவிகளை உபயோகிப்பதை நான் வெறுக்கிறேன், அருவருப் படைகிறேன். இது இசையை தவறாக பயன்படுத்துவதாகும்; கிறிஸ்தவத்தின் காரணகர்த்தரை ஆராதிப்பதில் காணப்படும் எல்லா ஊழல்களுக்கும் எதிராக என் எதிர்ப்பை பதிவு செய்கிறேன்". (Clark's Commentary, Vol. IV.P.686).

ஆராதனையில் வாத்தியக்கருவிகளை உபயோகிப்பதற்கு எதிராக இன்னும் பல வேதாகம அறிஞர்கள் இதுபோன்று பேசியிருக்கின்றனர். ஆனால் இதெல்லாம் எங்கே ஆரம்பமாயிற்று? கத்தோலிக்கச் சபையிலும் பின்னர் அதிலிருந்து பிரிந்தவர்களும் தங்களோடு இசைக் கருவிகளையும் கொண்டு வந்தனர்.

பல பிரிவினைச் சபை மக்கள் வாத்திய கருவிகளுடன் இசைந்து பாடுவதை நியாயப்படுத்த கீழ்க்கண்டவற்றைக் கூறுகின்றனர்.

தாவீது இதை உபயோகித்தான் என அவர்கள் சொல்லுகிறார்கள். அது உண்மையாக இருக்கலாம் ஆனால் தாவீது நியாயப்பிரமாணத்தின் கீழ் வாழ்ந்தான்; நாமோ வேறு சட்டத்தின் கீழ் வாழ்கிறோம். தாவீது செய்தான் என்பதற்காக மட்டும் நாமும் அவ்வாறே செய்ய வேண்டியதில்லை. அப்படித்தான் செய்ய வேண்டும் என்றால், எருசலேமுக்கு மிருகபலி செலுத்த வருடத்திற்கு ஒரு முறை நாம் செல்ல வேண்டியதிருக்கும். வாத்தியக் கருவிகளை இசைப்பதில் தாவீதை முன்னுதாரணமாகக் காட்டுவோர், எருசலேமுக்கு வருடந்தோறும் செல்லவும், ஒருவேளை இது போன்ற இன்னும் வேறு காரியங்களைச் செய்யவும், தயாராக இருக்க வேண்டும். ஆனால் தாவீது செய்த சகலவற்றையும் செய்ய அவர்கள் தயாராக இல்லை. யோவான் 1:17; II கொரி 3; எபிரேயர் 10:9 ஆகிய வசனங்களைப் படியுங்கள்.

2. வாத்தியக் கருவிகளை உபயோகிக்கக் கூடாது என வேதாகமம் கூறவில்லை என்று அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் ஆராதனையில் நிறைய காரியங்களைச் செய்யக்கூடாது என்றும் அது சொல்லவில்லை. என்றபோதிலும் எதைச் செய்ய வேண்டுமென்று அது சொல்லுகிறது; அதாவது பாட வேண்டுமென அது சொல்லுகிறது. (எபே. 5:19). அப்படியானால் பிறவற்றை அது நீக்கிப் போடுகிறது.

3. அது ஒன்றும் தவறல்ல என அவர்கள் கூறுகின்றனர். வீடுகளில், திருமணங்களில் இன்னும் பொழுது போக்காக இசைக் கருவிகளை உபயோகிப்பதில் தவறு எதுவும் இல்லாதிருக்கலாம். ஆனால் ஆராதனை என்பது வேறு. கர்த்தர் கட்டளையிடாத போது ஆராதனையில் அதைச் சேர்ப்பது தவறாகும். (வெளி. 22:18, 19).

4. நமது ஆராதனைக்கு அது உதவியாக இருக்கிறது என்று அவர்கள் கூறுகின்றனர். அப்படியானால் நமது கர்த்தர் ஏன் அதைக் கட்டளையிடவில்லை? ஏனெனில் அதை உபயோகிப்பது உதவியாக இல்லாமல், உண்மையில் அது ஆராதனையில் ஒரு அங்கமாகி விடுவதால் கட்டளையிடப்படவில்லை. இது வசனத்திற்கு ஏற்புடையதல்ல.

5. பரலோகத்தில் இசை இருக்கும் என்று அவர்கள் கூறுகின்றனர். வாத்தியக் கருவிகளுடன் பரலோகத்தில் இசை இருப்பதாக வசனம் உபதேசிக்கவில்லை. அப்படியே அது சொன்னாலும்கூட ஆராதனையில் அதை உபயோகிப்பதை நியாயப்படுத்தாது. பரலோகத்தில் அநேக காரியங்கள் இருக்கும் அவற்றையெல்லாம் நாம் ஆராதனையில் இங்கு செய்ய முடியாது.

6. அவர்கள் அதை விரும்புவதாகக் கூறுகின்றனர். நல்லது, நான் கேக், குளிர்பானங்கள் ஆகியவற்றை விரும்புகிறேன். எனவே அவற்றை ஆராதனையில் வைத்துக் கொள்ள முடியுமா? நாம் விரும்புகிறோமா இல்லையா என்பதல்ல; கர்த்தர் அதை விரும்புகிறாரா என்பதே கேள்வி.

எனவே, கர்த்தரின் நாளில் நாம் ஆராதனைக்குக் கூடி வரும் போது நமது வாய்ப்பாட்டினால் நாம் கர்த்தரை மகிமைபடுத்துவோம். ஆவியோடும் உண்மையோடும் இதைச் செய்ய வேண்டும். ஆகவே, நாம் கருத்தோடும் சகல நேர்மையுடனும் பாட வேண்டும். சுவிசேஷத்தில் கூறப்பட்டபடியும் நாம் பாட வேண்டும்; அதாவது கர்த்தரை வாயால்

புகழ்ந்து பாடவேண்டும். அது மட்டுமல்ல, பாடல்கள் வசனத்தின் படியானதாகவும், ஆவிக்குரிய ரீதியாகவும் அமைந்திருக்க வேண்டும்.

பிராந்தியச் சபை கூடி பாட வேண்டுமென வேதாகமம் கற்பிக்கிறது. அதாவது சங்கீதங்களையும், பாடல்களையும், கீர்த்தனைகளையும் நமது குரல்களால் இசைக்க வேண்டுமென்று கூறுகிறது. இந்தப்பாடல்கள் மூலமாக நாம் தேவனை புகழுகிறோம், ஒருவருக்கொருவர் உபதேசிக்கிறோம், கர்த்தரிடம் விசுவாசமாக இருக்க ஒருவருக்கொருவர் உற்சாகப்படுத்துகிறோம்,

கருவிகளின் சத்தங்களும் இடையூறுகளும் இன்றி, அதே சமயம் பக்தியோடும் சமாதானத்தோடும் சாந்தமான இதயத்தோடும் பரலோகத்தின் தேவனை நோக்கி நாம் சேர்ந்து நமது குரலை எழுப்பி, வாயினால் இப்படிப்பட்ட பாடல்களை இனிமையாகப் பாடுவது எவ்வளவு அருமையாக இருக்கிறது! இதைவிட அதிகப் பொருத்தமானது என்ன இருக்க முடியும்? இதைவிட உணர்ச்சிப் பூர்வமானது என்ன இருக்க முடியும்? இதையே தேவன் விரும்புகிறார்.

# கேள்விகள்

1. கிறிஸ்தவ மார்க்கம் எப்படிப்பட்டது?
2. பாடல்களைப் பற்றி போதிக்கும் புதிய ஏற்பாட்டு வசனங்கள் சிலவற்றை படியுங்கள்.
3. இந்த வசனங்கள் ஏதாவது இசைக் கருவியின் இன்னிசையைப் பற்றி கூறுகிறதா?
4. இரண்டு விதமான இசைகளைப் பற்றி கூறு?
5. வாய்ப்பாட்டு இசை என்றால் என்ன?
6. இசைக் கருவிகளின் இசையை விளக்குக.
7. தேவன் நாம் எப்படி அவரைத் துதிக்க வேண்டுமென்று விரும்புகிறார்?
8. ஆராதனையில் இசைக்கருவியை பயன்படுத்துவதை கண்டிக்கும் பிரபலமான மதத்தலைவர்களின் சில பெயரைக் குறிப்பிடுக.
9. எங்கு ஆராதனையில் இசைக் கருவிகள் புகுத்தப் பட்டது?
10. ஆராதனையில் இசைக் கருவிகள் பயன்படுத்துவதை நியாயப்படுத்தி சிலர் தர்க்கம் செய்கின்றனர். அவைகள் என்ன?
11. ஆராதனையில் இசைக் கருவிகளைப் பயன்படுத்த நாம் ஏன் தாவீதை பார்க்கக் கூடாது?
12. ஆராதனையில் இசைக் கருவிகள் எவை வெளியேற்றுகிறது?
13. வீடுகளில் இசைக்கருவிகளை பயன்படுத்தலாமா?
14. இது ஆராதனைக்கும் பொருந்துமா?
15. வெளி 22 : 18, 19- ஐ வாசியுங்கள்.
16. பரலோகத்தில் இசைக்கருவிகள் இருக்குமா?
17. நாம் விரும்புகிறோம் என்பதற்காக ஆண்டவர் ஆராதனையில் சிலவற்றை அனுமதிப்பாரா?
18. எந்த வகையான பாடல்களை ஆண்டவர் விரும்புகிறார்?
19. சபையாகச் சேர்ந்து பாடுவதை பற்றி விவரி?
20. பாடுவதற்கான காரணங்கள் சிலவற்றை கொடு.

## பாடம் - பதினொன்று

# கர்த்தரின் பந்தி

ஆராதனையின் மற்றுமோர் பகுதி கர்த்தரின் பந்தியாகும். மனிதன் மிகவும் மறதி படைத்தவன் என்பதை கிறிஸ்து அறிந்தார். எனவே, அவன் நினைவு கூரும்படியாக, அவனுக்கு உதவியாக இருக்கும் ஒன்றை விட்டுச் செல்ல அவர் விரும்பினார். இந்த நினைவு கூருதல் கர்த்தரின் பந்தி என அறியப்படுகிறது.

மேற்கொண்டு படிப்பதற்கு முன்பு, இது எவ்வாறு ஏற்படுத்தப்பட்டது என்பதை நாம் முதலில் பார்ப்போம். மத்தேயு **26 : 26 - 28** வசனங்களைப் பாருங்கள் : "அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப்பிட்டு, சீடர்களுக்குக் கொடுத்து : நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து : நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள்; இது பாவமன்னிப் புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது". அது எவ்வளவு எளிமையானதாக இருந்தது என்பதைக் கவனியுங்கள். அப்பமானது தமது சரீரத்தின் மாதிரியாக இருப்பதால், அதை தமது சரீரத்தின் நினைவாக உட்கொள்ள வேண்டும் என கிறிஸ்து குறிப்பிட்டார். பின்னர், திராட்ச ரசத்தை தமது இரத்தத்தின் மாதிரியாகக் கருதி, அவருடைய இரத்தத்தின் நினைவாக பருக வேண்டும் என அவர் கூறினார். வேறுவிதமாகக் கூறினால், சிலுவையில் தாம் அவர்களுக்காகப் படப்போகும் பாடுகளை தமது சீடர்கள் மறப்பதை கிறிஸ்து விரும்பவில்லை. எனவே தான் ஒவ்வொரு கர்த்தரின் நாளிலும் அவருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் நினைவு கூரும்படியாக அவர்கள் அப்பத்திலும் இரசத்திலும் பங்கு பெறும் போது,

அவருடைய பாடுகள் அவர்களின் மனதிலே புதிதாக நிலைத்திருக்கும்.

பவுல் கொரிந்து சகோதரர்களுக்கு எழுதுகிறார் : "நீங்கள் ஓரிடத்தில் கூடி வரும் போது, அவனவன் தன் தன் சொந்த போஜனத்தை முந்திச் சாப்பிடுகிறான்; ஒருவன் பசியாயிருக்கிறான்; ஒருவன் வெறியாயிருக்கிறான். இப்படிச் செய்கிறது கர்த்தருடைய இராப்போஜனம் பண்ணுதலல்லவே. புசிக்கிறதற்கும் குடிக்கிறதற்கும் உங்களுக்கு வீடுகள் இல்லையா? தேவனுடைய சபையை அசட்டை பண்ணி, இல்லாதவர்களை வெட்கப்படுத்துகிறீர்களா? உங்களுக்கு நான் என்ன சொல்லுவேன்? இதைக் குறித்து உங்களைப் புகழ்வேனோ? புகழேன். நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக் கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதைப்பிட்டு நீங்கள் வாங்கிப்புசியுங்கள். இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணின பின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து : இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது, நீங்கள் இதைப் பானம் பண்ணும் போதெல்லாம் என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள். இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனா யிருப்பான். எந்த மனிதனும் தன்னைத்தானே சோதித்தறிந்து இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜன பானம்

பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத் தீர்ப்பு வரும்படி போஜன பானம் பண்ணுகிறான்." (1 கொரிந்தியர் 11:20-29).

இப்போது, கர்த்தரின் பந்தியை கொரிந்து சகோதரர்கள் நடத்தி வந்த விதத்தைக் குறித்து பவுல் ஆரம்பத்தில் அவர்களைக் கண்டிக்கிறார். கர்த்தர் கற்பித்தபடியாக அதில் பங்கு கொள்ளாமல், வயிறார சாப்பிட்டு, குடிக்கும் ஒரு விருந்தாக அவர்கள் அதை மாற்றிவிட்டிருந்தனர். கர்த்தரின் பந்தியின் நோக்கம் அதுவல்ல. மாறாக, அதனுடைய உண்மையான நோக்கம் என்ன என்பதையும், அதில் எப்படி பங்கு பெற வேண்டுமென்பதையும் அவர்களுக்கு அவர் காண்பித்தார். இந்தச் செய்தியை எல்லாம் கர்த்தரிடமிருந்து தாம் பெற்றுக் கொண்டதாகவும் பவுல் அவர்களுக்கு நினைப்பூட்டுகிறார். அவை :

1. கர்த்தர் காட்டிக் கொடுக்கப்பட்ட இரவில், இந்த பந்தியை அவர் ஏற்படுத்தினார்.

2. பிட்கப்படுகிற அப்பமானது தமது சரீரத்தை அவர்களுக்கு நினைப்பூட்டுவதாக இருக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

3. அதுபோலவே இரசத்தையும் எடுத்து, அதை எல்லாரும் தமது இரத்தத்தின் நினைவாக பருக வேண்டுமென அவர் காண்பித்தார்.

4. அதில் பங்கு பெறும் போதெல்லாம், கர்த்தர் வருமளவும் அவரது மரணத்தை நினைவு கூருவதாகக் காட்டுகிறது.

5. இந்த பந்தியில் அபாத்திரமாக யாராவது பங்கு பெற்றால், கிறிஸ்துவின் சரீரத்தையும், இரத்தத்தையும் குறித்து அவன் குற்றமுள்ளவனாக இருப்பான்.

6. ஒவ்வொருவரும் தன்னைத்தானே சோதித்தறிந்து இந்த பந்தியில் பங்கு பெற வேண்டும்.

7. அபாத்திரமாக இந்த பந்தியில் பங்கு பெறுபவர்கள் தங்கள் ஆத்துமாக்களுக்கு அழிவைத் தேடிக் கொள்ளுகிறார்கள்.

பவுல் கூறும் இந்த முக்கிய குறிப்புகளை நாம் மிகவும் கவனமாகக் கற்றுக் கொள்ள வேண்டும்.

நமது பாடத்தை தொடரும்போது, மேலும் பல காரியங்களை நாம் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் :

1. ஒரே ஒரு பாத்திரத்தில் மட்டுமே இரசத்தை பருகலாம் என கர்த்தர் போதிக்கவில்லை. சில வேளைகளில் மக்கள் அனைவரும் சேர்ந்து முடிவெடுத்து ஒரே பாத்திரத்தில் எல்லாரும் இரசத்தைப் பருகுகின்றனர். நல்லது, பாத்திரத்திலுள்ள பொருளுக்குத்தான் (திராட்ச ரசம்) கர்த்தர் முக்கியத்துவம் கொடுத்தாரே தவிர, பாத்திரத்திற்கு கர்த்தர் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. கிறிஸ்துவின் இரத்தத்தை நினைவு கூரும்படி பங்கு கொள்ளுவது மட்டும்தான் முக்கியமே தவிர, பாத்திரம் ஒன்றா அல்லது அதிகமா என்பது பிரச்சினை அல்ல. ஒரே பாத்திரத்தில் பலரும் பருகுவது வேதத்தின்படி தவறல்ல; என்றாலும் சுகாதார காரணத்திற்காகவும் பிற காரணங்களுக்காகவும் ஒவ்வொருவருக்கும் தனித்தனி சிறு பாத்திரத்தில் இரசத்தைக் கொடுப்பதும் வசனத்தின்படி தவறல்ல.

2. கர்த்தரின் பந்தியில் பங்கு பெறுவதால், கிறிஸ்துவின் சரீரத்தையும் இரத்தத்தையும் நினைவு கூருவதோடு கர்த்தரின் இரண்டாம் வருகையை விசுவாசிக்கும் ஒரு மக்கள் கூட்டம் இருக்கிறது என்பதை சகலருக்கும் நினைப்பூட்டும் ஒரு செயலாகவும் இருக்கிறது.

3. வாரந்தோறும் கர்த்தரின் பந்தியில் கலந்து கொள்ளும் போது, கடந்த வாரம் முழுவதும் ஒவ்வொருவரும் வாழ்வில் செய்த தவறுகளை நினைக்கவும், அல்லது கடந்த பல வாரங்களாக

கர்த்தரின் பந்தியில் பங்கு பெறாவிடில் தன்னுடைய தற்போதைய ஆவிக்குரிய நிலைபற்றி சோதித்து, மனந்திரும்ப ஒரு சந்தர்ப்பம் கிடைக்கிறது. தன்னால் முடிந்த வரையில் கர்த்தருக்கு விசுவாசமுள்ளவனாக வாழ்ந்திருப்பதாகக் கண்டால், பின் அவன் கர்த்தரின் பந்தியில் பங்கு பெறுவது இயற்கையே என்ற போதிலும், தனது வாழ்வில் பாவங்கள் இருப்பதாகக் கண்டால், முதலில் அவைகளுக்காக மனஸ்தாபப்பட்டு, திருந்திக் கொள்ளும்போது கர்த்தரின் பந்தியில் கலந்து கொள்ளும் தகுதியைப் பெறுகிறான்.

. அபாத்திரமாக (தகுதியில்லாமல்) ஒருவன் கர்த்தரின் பந்தியில் பங்கு பெற்றால், நித்திய இரட்சிப்புக்காக அப்பத்தில் புசித்து ரசத்தில் பானம் பண்ணுவதற்குப் பதிலாக, தனக்குத் தானே ஆக்கினையை வரவழைத்துக் கொள்ளுகிறான். சந்தேகமின்றி, நாம் அனைவரும் பாவம் செய்கிறவர்களாக இருப்பதால் ஒருவருமே தகுதி பெற்றவர் அல்ல; என்ற போதிலும், நாம் பூரணமானவர்கள் அல்ல என கர்த்தர் அறிவார். எனவே, நம்மால் இயன்ற அளவு நாம் சோதித்து மனஸ்தாபப்படும் போது, கர்த்தரின் பந்தியில் கலந்து கொள்ள ஊக்கப்படுத்தப்படுகிறோம். ஆனால் வேண்டுமென்றோ கவலையற்று அலட்சியமாகவோ பாவம் செய்தால் அவன் கர்த்தரின் பந்தியில் கலந்து கொள்ளத் தயாராக இல்லை. அப்படிப்பட்டவன் பங்கு பெறும் போது அவன் தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ளுவதோடு, பிறரும் அவனைச் சரியானவன் என நம்பும்படிச் செய்வதால், அவன் கர்த்தரின் பந்தியில் பங்கு பெறாமல் வீழ்ந்து போவதைக் காட்டிலும் அதிகமாக ஆக்கினைத் தீர்ப்படைகிறான். ஆனால் கர்த்தருக்குத் தெரியும். அவன் தனது வாழ்க்கையை திருத்திக் கொண்டால், ஆவிக்குரிய விதத்திலும் வசனத்தில் கண்டபடியும் அதில் பங்கு பெறலாம்.

i. கர்த்தரின் பந்தியில் பங்கு பெற யாருக்கும் நாம் தடை விதிக்கக்கூடாது. எனவே, ஒரு சிலரை பந்தியில்

அனுமதிப்பதும் சிலருக்கு அனுமதி மறுப்பதும் கூடாது. நம்மை நாமே சோதிக்க வேண்டும் என்ற அடிப்படையில், வசனம் பந்தியில் கலந்து கொள்ள வழி செய்கிறது. சபையிலே அங்கத்தினரல்லாத ஒரு மனிதன் கர்த்தரின் பந்தியில் பங்கு பெற்றாலும் ஆத்திரப்பட வேண்டாம். அவர் சத்தியத்தை அறியும் போது, தேவனுக்கு அவர் கீழ்ப்படிவார். கர்த்தரின் பந்தியில் பங்கு பெற அவருக்கு அனுமதி மறுத்தால், பின்னர் அவர் ஒருபோதும் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போய்விடலாம்.

முடிவாக, ஆதிக் கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாள் அப்பம் பிட்கும்படி கூடி வந்தார்கள், என அப்போஸ்தலர்கள் நடபடி 20:7ம் வசனத்தில் படிக்கிறோம். ஆகவே, நாமும் அவ்வாறே செய்ய வேண்டும். ஆனால் வாரத்தின் எந்த முதல் நாள்? வாரத்தின் ஒவ்வொரு முதல் நாளும் தான். ஒரு குறிப்பிட்ட வாரத்தின் முதல் நாளில் மட்டுமே கர்த்தரின் பந்தியில் பங்கு பெற வேண்டுமென உங்களுக்கு அல்லது எனக்கு அல்லது வேறு எவருக்காகிலும் அதிகாரம் கொடுத்தது யார்? ஒருவரும் அவ்விதமான அதிகாரத்தை அளிக்கவில்லை. எனவே, தேவன் எவ்வாறு செய்தாரோ அவ்வாறே நாமும் செய்வோம். அதாவது, அவரை ஆராதிக்க அவருடைய பிள்ளைகள் வாரத்தின் முதல் நாள் கூடி வந்தனர். கர்த்தரின் பந்தியும் இந்த ஆராதனையில் அடங்குகிறது.

# கேள்விகள்

1. கர்த்தருடைய பந்தியை ஏற்படுத்தியவர் யார்?
2. மத்தேயு 26 : 26 - 28 வாசியுங்கள்.
3. ஏன் அப்பத்தில் பங்கு கொள்ள வேண்டும்?
4. திராட்சை ரசமானது எதற்கு மாதிரியாயிருக்கிறது?
5. சீஷர்கள் எவ்வளவு நாளுக்கொருமுறை பங்கு பெற்றார்கள்.
6. I கொரி 11 : 20 - 29 ஐ வாசி.
7. கர்த்தருடைய பந்தியை கொரிந்தியர்கள் என்ன செய்தார்கள்?
8. இந்தப் பிரச்சினையை பவுல் எப்படி கையாளுகின்றார்?
9. எங்கேயிருந்து பவுல் திருவிருந்தைப் பற்றிய செய்திகளைப் பெற்றுக் கொண்டார்?
10. கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவதன் மூலமாக அவர் மரணத்தை, அவர் வரும் வரை நினைவுகூற முடியும் என்பதை விளக்கு?
11. அபாத்திரராகப் பங்குபெறுவதால் என்ன ஏற்படும்?
12. ஒரே பாத்திரம் உபயோகப்படுத்துவதை வசனம் போதிக்கிறதா?
13. முக்கியத்துவம் பாத்திரத்திற்கா அல்லது அதிலுள்ளதற்கா?
14. கர்த்தருடைய பந்தி இயேசுவின் இரண்டாம் வருகையோடு எப்படி தொடர்புள்ளதாயிருக்கிறது?
15. ஒவ்வொரு தனிப்பட்ட கிறிஸ்தவனுக்கும் ஆசீர்வாதமாக இந்த திருவிருந்தில் பங்கு கொள்வது அமைகிறது. விளக்கு?.
16. இதில் பங்குகொள்ள ஒருவன் பூரணமானவனாக இருக்க வேண்டும் என்று ஆண்டவர் எதிர்பார்க்கின்றாரா?
17. மனப்பூர்வமாகப் பாவஞ்செய்யும் ஒருவன் இதில் பங்குகொள்ளலாமா?
18. தனிப்பட்ட ஒருவரை கர்த்தருடைய திருவிருந்தில் பங்குகொள்ள வேண்டாம் என்று நாம் சொல்லலாமா?
19. வாரத்தின் எந்த நாளில் கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய பந்திக்காக கூடி வரவேண்டும்?
20. பிரத்யேகமாக வாரத்தின் முதல் நாளை ஏற்படுத்தி, கர்த்தருடைய பந்தியை கடைபிடிக்க ஆண்டவர் யாருக்காவது அதிகாரம் அளித்துள்ளாரா?

## பாடம் - பனிரெண்டு

# கொடுத்தல்

கடைசியாக, புதிய ஏற்பாட்டு ஆராதனை முறையின் இறுதிப்பகுதியான கொடுத்தல் என்பதற்கு நாம் வந்துள்ளோம். வேதாகமம் தெளிவாகச் சொல்லும் காரியங்களில் இதுவும் ஒன்று. இருப்பினும் மக்கள் பலர் இக்காரியத்தைப் பற்றி மிகவும் அறியாமையில் இருக்கின்றனர். எனவே, தேவனுடைய வார்த்தை இதைப் பற்றிக் கூறுவது என்ன என்று நாம் பார்க்கலாம். வேதத்தின் சில முக்கிய பகுதிகளைச் சுட்டிக் காட்டி நாம் தொடங்குவோம்.

என்னோடு I கொரிந்தியர் 16:1,2 வசனங்களைப் படியுங்கள் : "பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்மப் பணத்தைக் குறித்து நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும் போது பணம் சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள்தோறும், தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக் கடவன்". மேற்கொண்டு செல்லுவதற்கு முன்பு, இந்த வசனங்களை ஆராய்ந்து பார்த்து, அவர் கூறுவதின் முக்கிய கருத்துக்களை எடுத்துக் கொள்வோம்.

1. இந்தக் கொடுத்தல், வாரத்தின் முதல் நாள் தோறும் நடைபெற வேண்டியிருந்தது. ஏன்? கிறிஸ்தவர்கள் ஆராதனையில் கூடி வரும் நாளாக அது இருப்பதால், காணிக்கை பெறுவதற்குக் அந்த நாள் தேர்ந்தெடுக்கப் பட்டது. பிற நாட்களைப் பற்றி என்ன? பிற நாட்களைப் பற்றி எதுவும் கூறப்படவில்லை. இந்தக் கட்டளையைப் பொருத்தவரையில் வாரத்தின் முதல் நாள் செய்யப்பட வேண்டும் என தெளிவாக்கப்பட்டுள்ளது. தாங்கள்

கூடிவரும் நாட்களில் எல்லாம், ஏன், தினமும் கூடினாலும் கூட, காணிக்கை வசூலிப்பதை வழக்கமாக வைத்துக் கொள்ளும் பல மதக் குழுக்களும் உள்ளன. என்றாலும் வசனத்தின்படி நாம் நடப்பதாக இருந்தால் அதில் குறிப்பிட்ட நாளில் மட்டுமே ஆராதனையின் இந்தக் குறிப்பிட்ட பகுதி நிறைவேற்றப்பட வேண்டும். எனவே, கிறிஸ்துவின் சபையார் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளும் கூடி வருகின்றனர். அந்த நாளில் தானே அங்கத்தினர்கள் கொடுக்கவும் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

2. சகல கிறிஸ்தவர்களும் கொடுக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டனர். கடந்த வாரத்தின் வரவுக்குத் தகுந்தபடி அவர்கள் கொடுத்தனர். தமது மக்களுக்கு எந்த வரவும் இல்லாத நிலையில், கர்த்தர் அவருடைய பிள்ளைகள் கொடுக்க வேண்டுமென எதிர்பார்ப்பதில்லை. இருப்பினும் கொடுக்கத் தகுதியுள்ளவர்கள் கண்டிப்பாகக் கொடுக்க வேண்டுமென அவர் எதிர்பார்க்கிறார். அவர்கள் கொடுக்கத் தவறினால், அது பாவம்.

3. அவர்களுடைய வரவுக்குத் தக்கவாறு கொடுத்தலுக்காகச் சேர்த்து வைத்துக் கொள்ளப் பணிக்கப்பட்டனர். அந்நாட்களில் அவர்கள் காய்கனிகளையும், ஆடுமாடுகளையும், அல்லது பிற விளை பொருட்களையும் காணிக்கையாக செலுத்தினர். பணமும் கூட கொடுக்கப்பட்டது. இன்றைய நாட்களிலோ வழக்கமாக பணத்தை மட்டுமே காணிக்கையாகக்கொடுத்து வருகிறோம். ஏனெனில், பல மக்கள் தங்களிடமுள்ள விளை பொருட்களை விற்று பணமாக்கி வைத்துக் கொள்ளுகின்றனர். அல்லது சம்பளத்திற்கு வேலை செய்து கூலியைப் பணமாகப் பெறுகின்றனர். காணிக்கை பொருளாகவோ அல்லது பணமாகவோ கொடுக்கப்படுவது இடத்தையும், மக்களையும், நிலைமையையும் பொருத்த காரியம்.

4. அவர்கள் வரவுக்குத் தக்கதாகக் கொடுக்க கடமைப் பட்டிருந்தனர். அதாவது, அவர்களுடைய வருமானத்திற்கு

ஏற்றவாறு கொடுக்க வேண்டியிருந்தது. ஆனால் வருமானத்திலிருந்து கொடுக்க வேண்டிய பங்கு எவ்வளவு? அது அவரவர் முடிவைப் பொருத்த காரியமாக இருந்தது. இன்றைய நாட்களிலும் அதுவே உண்மை. தசம பாகம் அல்லது பத்தில் ஒரு பங்கு கொடுக்க வேண்டுமென புதிய ஏற்பாடு போதிப்பதில்லை. மாறாக, யூதர்கள் வாழ்ந்து வந்த நியாயப் பிரமாணத்தை விட மிகவும் சிறப்பான ஒரு சட்டத்தின் கீழ் நாம் இன்று வாழ்வதால், அவர்கள் கொடுத்த பத்தில் ஒரு பங்கை விட, சந்தேகமின்றி, நாம் அதிகமாகக் கொடுக்க வேண்டும். நமக்கு ஒரு சிறப்பான சட்டம், சிறப்பு வாக்குத்தத்தங்கள், மகத்தான நம்பிக்கைகள் யாவும் தரப்பட்டிருப்பதால், நாம் ஏன் அதிகமாகக் கொடுக்கக்கூடாது? இங்கே இந்தியாவில் நான் கவனித்த வரை ஒவ்வொருவரும் கொடுக்க விரும்புகின்றனர்; ஆனால் அது ஒரு சில பைசாக்களாகவே இருக்கின்றன. சிலருடைய தகுதியில் கொடுக்கக்கூடிய அதிக அளவு அவ்வளவாகவே இருக்கமுடியும். ஆனாலும் பலர் தற்போது கொடுப்பதைவிட மிகவும் அதிகமாக கொடுக்க முடியும். இந்தியாவிலுள்ள மக்கள் பலரிடம் வெற்றிலை, பாக்கு, புகையிலை, சினிமா இன்னும் இது போன்ற காரியங்களுக்குச் செலவிட பணமிருக்கிறது என்பதையும் நான் கவனித்திருக்கிறேன். இந்த மக்கள் உலகத்திற்கு அடுத்தவர்களாக் இருப்பதை நான் உணருகிறேன். இந்தக் காரியங்களுக்கெல்லாம் பணம் இருக்கும்போது, உங்கள் பணத்தை என்ன செய்கிறீர்கள்? நீங்கள் இது போன்ற காரியங்களுக்காக செலவிட்டுக் கொண்டிருப்பீர்கள். இந்த நாட்டிலும் தற்போது நாம் கொடுத்துக் கொண்டிருப்பதை விட அதிகமாகக் கொடுக்க முடியும். நமது வரவுக்குத்தக்கதாக நாம் கொடுக்க வேண்டுமென நமது கர்த்தர் கூறினார். உங்களுடைய வரவு என்னவென்று நீங்கள் அறிவீர்கள்; எனவே என்ன கொடுக்க வேண்டும் என்பதும் உங்களுக்குத் தெரியும். எப்படியிருந்த போதிலும், நீங்கள் கொடுப்பது அநேகமாக சில்லறைக் காசுகளாக இருக்காமல் காகிதப் பணமாக இருக்க வேண்டும். சில பேர் இன்று கொடுத்து வரும் காகிதப் பணத்தை விட மிக அதிகமாக கொடுக்க இயலும்.

என்றாலும், நீங்கள் எவ்வளவு கொடுக்க வேண்டும் என நான் உங்களுக்குச் சொல்ல முடியாது. அல்லது நீங்களும் எனக்குச் சொல்ல முடியாது. ஆனால் நாம் கொடுக்க வேண்டும் என்பதைக் கர்த்தர் அறிவார். எனவே, இனிமேல் நாம் அதிகமாகக் கொடுக்கத் தொடங்க வேண்டும். இதை நீங்கள் ஏற்றுக் கொள்ளுகிறீர்களா?

5. அவர் (பவுல்) வருகிற சமயத்தில் சேர்த்துக் கொண்டிராமல், ஏற்கனவே சேர்த்து வைத்து அவர் வரும்போது கொடுக்க வேண்டியவர்களாக இருந்தனர். வேறுவிதமாகக் கூறினால், அவருடைய அறிவுரைப்படி அவர்கள் நடப்பார்களே யானால், அவர் வருகிற சமயத்தில் சகல காரியங்களும் கவனிக்கப்பட்டிருக்கும். அவரும் பிறருடைய தேவைகளைச் சந்திக்க வசதியாக இருக்கும். இன்றும் இது பொருந்தும். நாம் எவ்வளவு கொடுக்க வேண்டுமென கர்த்தர் நியமித்துள்ளாரோ அதை நாம் கொடுத்தால் கர்த்தரின் பணிகளைச் செய்யப் போதுமான பண வரவு நம்மிடம் இருக்கும். இன்று, மத உலகிலே உள்ள பல சபைகள் இந்த உபதேசத்தைப் பின்பற்றுவதில்லை. எனவே, எப்போதுமே அவர்கள் பணத்திற்காகக் கையேந்தி வருகின்றனர். சபை உறுப்பினர்கள் தாமே கொடுப்பதை விடுத்து, உலகத்து பிறமக்களிடம் உதவிக்காக பிச்சை எடுக்கின்றனர். இவர்களில் சிலர் புத்தகங்களையும் பத்திரிக்கைகளையும் விற்றுப் பணமாக்குகின்றனர். இன்னும் சிலரோ நன்கொடை ரசீதுகள் அச்சிட்டு பணவேட்டையில் இறங்குகின்றனர்; அல்லது கட்டணங்கள் வைத்து பொழுது போக்கு நிகழ்ச்சிகளை நடத்தி பணம் சேர்க்கின்றனர். ஆனால், சபைத் தேவைகளைச் சந்திக்கும் பொருட்டு தங்களால் இயன்ற அளவு கொடுக்க வேண்டுமென தமது மக்களுக்குக் கர்த்தர் கட்டளையிட்டுள்ளார். இவ்விதமாக கர்த்தர் காரியங்களை நடத்துகிறார். அவருடைய திட்டத்தை விட சிறப்பாக நாம் எதையும் செய்து விடமுடியாது.

கொடுத்தல் பற்றிய மற்றொரு வசனப்பகுதியைப் பார்ப்போம். II கொரிந்தியர் 9 : 6, 7 வசனங்களில் அவை

காணப்படுகின்றன : "பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான. அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக் கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்." இப்போது கீழ்க்கண்ட குறிப்புகளைக் கவனியுங்கள் :

1. நாம் விதைத்திருப்பதற்கு ஏற்ப அறுவடை செய்வோம் என அவர் கூறுகிறார். நாம் சிறுக விதைத்தால் சிறுக அறுப்போம். நாம் அதிகமாக விதைத்தால் அதிகமாக அறுவடை செய்வோம். விவசாயத்திலும், தொழிலிலும், இன்னும் வாழ்வின் சகல துறைகளைப் பொருத்தவரையிலும் இது உண்மை. கர்த்தருடைய காரியத்திலும் இது உண்மையாக இருக்கிறது. நாம் அதிகமாகக் கொடுத்தால் அதிகமாகப் பெற்றுக் கொள்ளுவோம். பல மக்கள் ஒரு போதும் ஒன்றையும் பெற்றுக் கொள்ளாமலிருப்பதற்குக் காரணம், அவர்கள் ஒன்றையும் ஒருபோதும் கொடுப்பதில்லை. ஒன்றும் கொடுக்காமல், பெற்றுக் கொள்ள முடியாது. நம்மில் பலர், கர்த்தருடைய வார்த்தையை முற்றிலுமாக நம்புவதில்லை என நான் அஞ்சுகிறேன். நாம் அவரை சோதித்துப் பார்க்கவேண்டும். அவ்வாறு செய்தால், நாம் அதிகமாகக் கொடுக்கும்போது அவர் இன்னும் மிக அதிகமாகத் தருகிறார் என்பதை நாம் கண்டுகொள்ள முடியும் என்பதை நான் உறுதியாகச் சொல்லுகிறேன்.

2. தன் தன் வரவுக்குத் தக்கதாக மனதில் நியமித்தபடியே ஒவ்வொருவனும் கொடுக்கவேண்டும் என அவர் சொல்லுகிறார். நாம் எவ்வளவு கொடுக்கப் போகிறோம் என்பதை ஆராதனைக்கு வரும் முன்பே நாம் மனதில் நியமித்துக் கொள்ள வேண்டும். இதைத் தான் அவர் சொல்லுகிறார். காணிக்கை தட்டு உங்கள் முன்பு நீட்டப்படும் வேளைவரை அதைப்பற்றிய சிந்தனையின்றி இருந்துவிட்டு, பின்னர் அவசரமாக தட்டுத்தடுமாறி கையில்

அகப்பட்ட காசை தட்டில் போடுவது சரியல்ல. ஆகையால் நீங்கள் எவ்வளவு கொடுக்க முடியும் என்பதை மனதில் நிச்சயித்துக் கொண்டு அவ்வாறே கொடுங்கள்.

3. விசனமாகவோ கட்டாயமாகவோ ஒருவன் கொடுக்கக் கூடாது என அவர் சொல்லுகிறார். அதாவது, யாருடைய கட்டாயத்திற்காகவோ நீங்கள் கொடுப்பதாக உணர்ந்து கொண்டு கொடுக்கத் தேவையில்லை. உண்மையிலேயே நீங்கள் கொடுக்க விரும்பாமல் வேறு ஒரு காரியத்திற்காக அந்தப் பணத்தை உங்களிடம் வைத்துக் கொள்ள விரும்பிய நேரத்தில், கொடுக்க வேண்டிய சூழ்நிலை காரணமாக நீங்கள் கொடுக்கும் பட்சத்தில், உங்களைப் பொருத்த வரையிலும் சரி, கர்த்தரைப் பொருத்த வரையிலும் சரி, அவ்வாறு நீங்கள் கொடுத்தது விருதா.

4. கொடுக்காமலிருக்க முடியாதே என்ற உணர்வோடு, ஒருவன் கொடுக்கக் கூடாது என கர்த்தர் கூறுகிறார். ஏனெனில், கொடுக்க வேண்டியதாகிவிட்டதே என நீ கவலைப்படும் நிலைக்கு உன்னைக் கர்த்தர் தள்ளிவிட முயற்சிக்கவில்லை. நிச்சயமாக இல்லை.

5. மாறாக, மகிழ்ச்சியுடன் கொடுப்பவனை அவர் நேசிக்கிறார். நீ எவ்வாறு கொடுக்க வேண்டுமென அவர் விரும்புகிறார்? நீ மகிழ்ச்சியாகக் கொடுப்பதையே அவர் விரும்புகிறார். ஏனெனில் நீ கொடுப்பதில் மகிழ்ச்சியடைவதை அவர் பார்க்கிறார். இப்படிக் கொடுப்பவர்களாகவே நாம் எப்போதும் இருக்க வேண்டும்.

இறுதியாக, கர்த்தர் தாமே கூறியதை நாம் நினைவில் வைத்துக் கொள்ளுவோம். " . . . வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம். "(அப். 20:35). ஆனால், பலர் இந்த வசனத்தை மாற்றி அமைத்து, "கொடுப்பதைப் பார்க்கிலும் வாங்குகிறதே பாக்கியம்" என்பதாக நடந்து கொள்ளுகின்றனரோ

என நான் ஐயப்படுகிறேன். ஏன்? ஏனெனில் நம்மில் பலர் பேராசையும், கஞ்சத்தனமும், சுயநலமும் உள்ளவர்களாக இருப்பதால், தேவனுக்கு உரிமையுடன் சேர வேண்டியதை நாம் திருடிக் கொள்ளுகிறோம். நாம் விழித்தெழுந்து, உண்மையில் தேவனுக்குச் சொந்தமானதிலிருந்து நாம் எடுத்து வைத்துள்ள பங்கை அவரிடமே திருப்பி அளித்திட தேவன் தாமே நமக்கு உதவுவாராக! வசனத்தின்படியாக கொடுப்பது எப்படி என்பதை நாம் கற்றுக் கொள்ளாத வரையில், கிறிஸ்தவர்கள் எப்படி இருக்க வேண்டுமோ அப்படி ஒரு போதும் இருக்கமுடியாது.

# கேள்விகள்

1. கொடுத்தலை வேதாகமம் போதிக்கிறதா?
2. கொடுக்க வேண்டிய அளவுக்கு பெரும்பாலானவர்கள் கொடுக்கிறார்களா?
3. I கொரி 16 : 1-2 ஐ வாசி.
4. சேமித்து வைத்ததை கொடுக்க எந்த நாளில் கிறிஸ்தவர்கள் கூடி வர வேண்டும்?
5. மற்ற நாட்களைப் பற்றி என்ன?
6. எல்லா சமயங்களிலும் பிரிவினை சபையார்கள் காணிக்கை வசூலிக்கின்றனரா?
7. எல்லா கிறிஸ்தவர்களும் கொடுக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறதா?
8. சிலருக்கு கொடுக்கத் திராணியில்லையென்றால் என்ன?
9. கடந்த வார முழுவதும் போதுமான வருமானமில்லாதவர்கள் ஆண்டவருக்கு கொடுக்க வேண்டுமென்று ஆண்டவர் எதிர்பார்க்கிறாரா?
10. கடந்த வார முழுவதும் வருமானத்தைப் பெற்றவர்கள் ஆண்டவருக்கு கொடுக்க வேண்டுமென்று ஆண்டவர் எதிர்பார்க்கிறாரா?
11. எவைகளையெல்லாம் அவர்கள் கொடுக்க வேண்டும்?
12. எவ்வளவு அவர்கள் கொடுக்க வேண்டும்?
13. தசமபாகம் கொடுப்பதை புதிய ஏற்பாடு போதிக்கிறதா?
14. 10- ல் ஒரு பங்கைவிட மேலாக நாம் ஏன் கொடுக்க வேண்டும்?
15. அவர்கள் விரும்பும் பொருட்களை வாங்கத் தேவையான பண வசதிகள் மக்களுக்கு இருக்கிறதா?
16. ஏன் ஆண்டவருக்கு நாம் அதிகமாக பணத்தை வைப்பதில்லை?
17. ஏன் கிறிஸ்தவர்கள் கொடுக்க வேண்டும்? விவரி.
18. பிற மத பிரிவினர் தங்கள் தேவைகளுக்கென்று எப்படி பணத்தை வசூல் பண்ணுகின்றனர்?
19. ஆண்டவர் தம்முடைய மக்களும் இப்படியே செய்ய வேண்டுமென்று விரும்புகிறாரா?

20. II கொரி 9 : 6, 7 ஐவாசி.

21. விதைத்தலும் அறுத்தலும் பற்றிய கருத்தினை விவரி?

22. ஏன் நம்மில் அநேகர் அதிகமாக அறுப்பதில்லை?

23. மனதில் தீர்மானித்து கொடுத்தல் என்றால் என்ன அர்த்தம்?

24. முறுமுறுப்புடனும் மனசங்கடத்துடனும் கொடுப்பதை கர்த்தர் விரும்புகிறாரா? விவரி.

25. எப்படிக் கொடுப்பவரை கர்த்தர் விரும்புகிறார்?

26. வாங்குவதைப் பார்க்கிலும் கொடுப்பதே பாக்கியம் என்று யார் சொன்னது?

27. பெரும்பாலான கிறிஸ்தவர்கள் எப்பொழுது கொடுப்பதற்காக வருதல் வேண்டும்? - விளக்குக.

**பாடம் - பதிமூன்று**

# சபை கூடி வருதல்

சபை கூடி வருவதை விட்டு விடுதல், ஒரு கிறிஸ்தவன் செய்யக் கூடிய மிக வருந்தத்தக்க தவறுகளில் ஒன்று. பிற சகோதரர்களுடன் சேர்ந்து வந்து, ஆராதனையில் கலந்து கொண்டு கர்த்தரைக் கனப்படுத்தாத ஒருவன், நான் கர்த்தருக்கு உண்மையாக இருக்கிறேனென்று எப்படிச் சொல்ல முடியும்? அதாவது, இப்படியான நிலைமைகளில் ஒருவன் விசுவாசமாக இருக்க இயலாது.

பல பிரிவினைச் சபைகளைச் சார்ந்த மக்கள் வருடத்திற்கு இரு முறை மட்டுமே ஆராதனை வழிபாட்டில் கலந்து கொள்ளுகின்றனர். அவை தேவனுடைய வசனத்தில் கற்பிக்கப்படாத கிறிஸ்துமஸ், ஈஸ்டர், என்பவைகளாகும். ஆனால், கர்த்தரைப் பிரியப்படுத்த இது மட்டும் போதும் என நினைத்துக் கொண்டு, தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்ளும் நிறைய மக்கள் உள்ளனர். கர்த்தர் யார் என்று அவர்கள் நினைக்கின்றனர்? ஆனால், இன்னும் நெருங்கி வந்தால், சபை அங்கத்தினரில் பலர் கூட ஆராதனையில் கலந்து கொள்ளுவதில்லை. ஏதாவது ஒரு சாக்கு போக்கை மாற்றி மாற்றிச் சொல்லுகின்றனர். ஆராதனைக்கு வரத்தடையாக இருப்பது ஒன்று அவர்களுடைய வேலை அல்லது அதிக தூரம்! அது, இது அல்லது எதுவோ ஒன்று என சாக்குச் சொல்லுவர். ஆனால் கேள்வி என்னவென்றால் : கர்த்தர் இந்த சாக்குப் போக்குகளை ஏற்றுக் கொள்ளுவாரா? இங்கே இவர்களும் தாங்கள் கிறிஸ்தவர்கள் என உரிமை கொண்டாடுகின்றனர். ஆனால் அவர்கள் ஒருபோதும் ஆராதனையில் கலந்து கொள்ளுவதில்லை. அதற்கு மாறாக, அவர்கள் செய்ய விரும்பும் சொந்தக் காரியங்கள் எதற்கும் ஒரு போதும் தடை எதுவும் வருவதில்லை. பணி செய்யும் இடம் பத்து கிலோமீட்டர் தூரம் இருப்பினும் அதற்குத் தவறாமல் செல்ல முடிகிறது.

"நான் வீட்டிலேயே ஜெபம் செய்கிறேன்?" என்பது ஆராதனைக்கு வரத்தவறும் சிலரின் வழக்கமான வாதமாக இருக்கிறது. ஜெபிப்பது நல்ல காரியந்தான், கர்த்தர் அது மட்டும் போதும் என்று கூறியிருந்தால். இருப்பினும், அவருடைய மக்கள் வாரத்தின் முதல் நாள் கூடி வரவேண்டுமென்று அவர் குறிப்பிட்டுச் சொல்லியிருக் கிறாரே! அப்படி கூடி வரும் போது, அவர்கள் ஜெபம் செய்வதோடு மட்டுமல்ல, கற்றுக் கொள்ளவும், பாடவும், கர்த்தரின் பந்தியில் பங்கு பெறவும், தங்களால் இயன்ற அளவில் கொடுக்கவும் வேண்டியதாயிருக்கிறது. இப்போது, தாங்களே வீட்டில் ஆராதிக்க முயலும் சிலர், தங்களுடைய காணிக்கைப் பணத்தை யாரிடம் கொடுப்பார்கள்? கர்த்தரின் பந்தியை எப்படி நடத்துவர்? இப்படிச் சொல்கிறவர்களில் பலர், அதிகமாகப் போனால், தங்களுடைய ஆராதனையில் கர்த்தருக்கு ஜெபம் ஏறெடுப்பதற்கு மேல் சென்று விடுவதில்லை. தேவனிடம் ஜெபம் செய்வதற்கும் மேலாக இன்னும் அநேக காரியங்கள் ஆராதனையில் உண்டு என்பதை அவர்களுக்குக் கற்றுத்தர வேண்டியதாகிறது.

வியாதி அல்லது இன்னபிற எதிர்பாராத காரியங்களால் ஏற்படும் சூழ்நிலைகளில் கிறிஸ்தவர்கள் ஆராதனைகளில் கலந்து கொள்ள முடியாமல் தடைபட்டுப் போவது சில வேளைகளில் உண்மையே. இந்த காரியத்தில் சாக்கு போக்குச் சொல்லத் தேவையில்லை. ஏனெனில் வராமலிருக்க சரியான காரணம் இங்கு இருக்கிறது. மேலுமாக, வராமலிருப்பதற்கான ஒரு சரியான காரணத்தை கர்த்தர் ஏற்றுக் கொள்வார்; ஆனால் ஒரு சாக்கு போக்கை அவர் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

இப்போது, சபை கூடி வருவதைப் பற்றி தேவனுடைய வசனமே கூறுவதைக் கவனிப்போம். எபிரேய எழுத்தர் எழுதுகிறார் : "அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கை யிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக் கடவோம்; வாக்குத் தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே.

மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரை ஒருவர் கவனித்து; சபை கூடி வருதலைச் சிலர் விட்டு விடுகிறது போல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக் கடவோம்; நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப்புத்தி சொல்ல வேண்டும். சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு நாம் மனப்பூர்வமாய் பாவஞ்செய்கிறவர்களாக இருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத் தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்". (எபி. 10:23-27). இப்போது, இவற்றின் முக்கிய கருத்துகளைக் கவனிப்போம்.

1. நாம் தொடர்பு கொண்டுள்ள ஒருவர், நம்முடன் தொடர்பு கொள்ளும் போது, அவர் எவ்வளவு தூரம் உண்மையாயிருக்கிறாரோ அதைப்போல நாமும் அவரிடம் உண்மையாக நடந்து கொள்ள வேண்டும்.
2. ஒருவருக்கொருவர் உள்ள தொடர்பில் எப்போதுமே நற்கிரியைகளைத் தொடர்ந்து செய்ய வேண்டும்.
3. நாம் கூடி வருவத்தை விட்டு விடலாகாது. அன்றும் சிலர் விட்டு விட்டனர். இன்றும் கூடிவருதலை சிலர் விட்டுவிடுகின்றனர். ஆனால் இது கர்த்தரின் விருப்பம் அல்ல.
4. நாள் நெருங்கி வரும் போது, அதாவது கர்த்தரின் நாளாகிய ஆராதனை நாள் நெருங்கி வரும் போது, சபை கூடுவதில் கலந்து கொள்ள ஒருவரை ஒருவர் ஊக்கப்படுத்த வேண்டும். அதாவது, அந்நாளுக்காக நம்மை நாமே தயார்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு செய்ய ஒரு வாரம் முழுவதும் நமக்கு இருக்கிறது.
5. சத்தியத்தைக் கற்றுக் கொண்டபின், வேண்டுமென்றே நாம் பாவம் செய்தால், நமக்காக எந்த பலியும் இனி இல்லை என்பதையும், நியாயத் தீர்ப்பையும் சாபத்தையும் தவிர வேறு

எதையும் எதிர்பார்க்க வேண்டியதில்லை என்பதையும் நாம் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். அதாவது, நாம் வேண்டுமென்றே சபை கூடி வருதலைப் புறக்கணித்து, நாம் செய்ய வேண்டிய காரியங்களை செய்யத் தவறினால், அவரை நாம் புறக்கணித்த பின், கர்த்தர் நம்மை எப்படி இரட்சிக்க முடியும்? ஆகையால் நாம் தொடர்ந்து ஆராதனையைப் புறக்கணித்தால் வீழ்ந்து போனவர்களாவோம்.

சபை கூடி வருவதில் நாம் பங்கு பெற வேண்டுமென கர்த்தர் எதிர்பார்க்கிறார் என்பதால் தான் இவை அனைத்தையும் நாம் கூறக் காரணமாக இருக்கிறது. அது அலட்சியப்படுத்த முடியாத காரியம். நாம் தவறுவோ மானால் அது ஆபத்தான காரியமும் கூட. ஆனால், நாம் அவ்வாறு செய்ய வேண்டு மென்று அவர் ஏன் கேட்டிருக்கிறார்? ஏன் சபை கூடி வருவதில் கலந்து கொள்ள வேண்டும்? அதற்குப் பல காரணங்கள் உண்டு. சிலவற்றை நாம் கவனிப்போம் : ஏனென்றால் கட்டளையாலும், முன்னுதாரணத்தாலும் நாம் அவ்வாறு செய்ய வேண்டுமென உபதேசிக்கப்பட்டுள்ளோம். நாம் கூடிவருவதை புறக்கணிக்க லாகாது என ஏற்கனவே எபிரேயர் 10:25ம் வசனத்தில் நாம் எச்சரிக்கப்பட்டுள்ளோம். பின்னர் ஆதி கிறிஸ்தவர்கள் எவ்வாறு ஆராதனை செய்ய கூடினார்கள் என்பதை அப்போஸ்தலர் நடபடி 2:42ம் வசனத்திலும், பவுலும் கிறிஸ்தவர்களும் துரோவா பட்டணத்தில் வாரத்தின் முதல் நாளிலே ஆராதிக்கக் கூடி வந்ததைப் பற்றி அப்போஸ்தலர் நடபடி 20:7ம் வசனத்திலும் நாம் படிக்கிறோம். ஆகவே, நாமும் அவ்வாறு செய்ய வேண்டும்.

2. தேவனை ஆராதிக்க நாம் கூடி வரவேண்டும். உண்மையாகத் தொழுது கொள்ளுபவர்களை தேவன் தேடிக் கொண்டிருக்கிறார் என்றும், தேவன் ஆவியாய் இருப்பதால் நாம் அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழவேண்டுமென யோவான் 4 : 23, 24 வசனங்களில் கிறிஸ்து நமக்குக் கூறுகிறார்.

3. கர்த்தரின் பந்தியில் கலந்து கொண்டு அவரை நினைவு கூறத்தக்கதாக நாம் கூடி வருவதை கர்த்தர் ஏற்படுத்தினார். கர்த்தரின் பந்தி ஏற்படுத்தப்பட்டதைப் பற்றி பவுல் கூறும் போது, கிறிஸ்துவின் சரீரத்தின் நினைவாக அப்பத்திலும் கிறிஸ்துவின் இரத்தத்தின் நினைவாக இரசத்திலும் பங்குபெற வேண்டுமென்று எடுத்துக் காட்டுகிறார். (I கொரி. 11:24-25). கர்த்தரை இவ்வாறு நினைவு கூறவேண்டுமானால், ஒவ்வொரு வாரத்தின் முதல் நாள் தோறும் நாம் கூடி வராவிட்டால் எப்படி அது சாத்தியமாகும்?

4. நமது வரவுக்குத் தக்கதாக, கொடுக்கும்படி நாம் கூடி வரவேண்டும். மீண்டுமாக, நாம் 1 கொரிந்தியர் 16 : 2 ம் வசனத்திற்குத் திருப்பிக் கொண்டால், வாரத்தின் முதல் நாள் நாம் கூடி வந்து, நமது வரவுக்கேற்ப கொடுக்க வேண்டும் என பவுல் கூறுவதைக் காணலாம். நாம் கூடி வராத பட்சத்தில் நமது கொடுத்தலின் நிலை என்ன? நாம் சுகவீனமாக இருப்பின் அடுத்துவரும் கர்த்தரின் நாளிலே நாம் அதைக் கொண்டுவர முடியும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் கூடி வரத் தவறும் பலர், கொடுக்கும் சந்தர்ப்பத்தை இழந்து போவது மட்டுமல்லாமல் எவ்வித பொறுப்பு உணர்ச்சியும் இன்றி, மீண்டும் மீண்டுமாக தொடர்ந்து தவறுகின்றனர்.

5. சபை கூடி வரும்போது நமது மத்தியிலே கர்த்தர் இருப்பதாக வாக்களித்துள்ளார். அவருடைய வாக்குத்தத்தத்தைப் பாருங்கள் : "ஏனெனில் இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்". (மத்தேயு 18:20). சபையின் ஒவ்வொரு ஆராதனையிலும் நாம் பங்கு கொள்ள இது ஒன்றே போதுமான காரணமாக இருக்கிறது. ஏனெனில் கர்த்தர் அங்கிருப்பதாகக் கூறியிருக்கிறாரே. நம் நாட்டு பிரதமர் அல்லது வேறு முக்கியமான ஒரு தலைவர் வரும் இடத்தில் தாம் இருக்க விரும்பமாட்டோமா? ஆனால் இங்கே ஒரு முறை மட்டுமல்ல, ஒவ்வொரு முறையும் நம்மை சந்திப்பதாக கர்த்தரே கூறியிருக்கிறார், நான் அங்கே இருப்பேன் என அவர்

கூறியிருக்கும் போது, நிச்சயமாக எல்லாவற்றிலும் முக்கியமான இந்த சந்திப்பை நாம் தவறவிட விரும்பமாட்டோம்.

6. ஒவ்வொரு சந்திப்பிலும் நாம் தவறாது கலந்து கொண்டு நல்ல முன்னுதாரணத்தை ஏற்படுத்த வேண்டும். நமது குடும்பத்தினர்கள், நம்மை நேசிப்பவர்கள், நண்பர்கள், பொதுவாக உலகத்தின் மக்கள் அனைவரும் நம்மைக் கவனித்துக் கொண்டிருக்கின்றனர். பின்பற்ற வேண்டிய ஒரு எடுத்துக் காட்டாகவும் வழிகாட்டியாகவும் நம்மை அவர்கள் பார்க்கின்றனர். இதை நாம் உணர்ந்து கொண்டு, அவர்களை சரியான திசையில் வழிநடத்த முயலவேண்டும். நீங்கள் நினைப்பதைவிட, அவர்களுடை இரட்சிப்பு நமது செயல்களைப் பொருத்திருக்கக் கூடும். தெசலோனிக் கேயருக்கு பவுல் எழுதினார். "நீங்கள் மிகுந்த உபத்திரவத்திலே, பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே, திருவசனத்தைக் ஏற்றுக் கொண்டு எங்களையும் கர்த்தரையும் பின்பற்றுகிறவர்களாகி, இவ்விதமாய் மக்கெதோனியாவிலும் அகாயாவிலுமுள்ள விசுவாசிகள் யாவருக்கும் மாதிரிகளானீர்கள்". (1 தெச. : 6,7) மக்கள் நம்மைப் பின்பற்றும் போது, உண்மையில் கிறிஸ்துவையே அவர்கள் பின்பற்றுகிறார்கள் என்ற ஒரு முன்னுதாரணமாக நாம் செயல்படுகிறோமா? அவ்வாறு நாம் நடக்க வேண்டும். ஒவ்வொருமுறை சபை கூடி வரும் போதும் தவறாமல் நேரத்திற்கு வரவும், அமைதியாக இருக்கவும், பய பக்தியுடனும் கர்த்தரை உண்மையாகத் தொழுது கொள்ளவும் இப்போதே திட்டமிடுங்கள்.

7. ஐக்கியத்திற்காகவும் ஆவிக்குரிய வளர்ச்சிக்காகவும் நாம் கூடி வருவதில் தனிப்பட்ட முறையிலோ கூட்டாகவோ பங்கு பெற வேண்டும். சபை அங்கத்தினர்கள் ஒரு போதும் கூடிவராவிட்டால், அந்தக் குறிப்பிட்ட பகுதி அல்லது நகரிலே சபையின் நிலைபற்றி என்ன சொல்ல முடியும்? கூடி வராதபட்சத்தில் அங்கத்தினர்கள் ஒருவரையொருவர் அறிந்து கொள்ள முடியாது. அவர்களுடைய விசுவாசத்தின் பலத்தைப் புரிய முடியாது, வேலை திட்டமிட முடியாது. ஒருவருக்கொருவர்

உதவ இயலாது, ஒருவருக்கொருவர் உற்சாகப்படுத்த முடியாது. வேறுவிதமாகச் சொன்னால், சபையின் பல வேலைகள், அதின் பலம், அதின் செயல்பாடுகள் போன்ற அனைத்துக் காரியங்களும் சபை கூடி வருவதையே முழுமையாகச் சார்ந்துள்ளது. உண்மையிலே இவை இல்லாது போனால் சபை விரைவில் மடிந்து போகும். எனவே தான், புதிய ஏற்பாட்டில் சபை கூடி வருதலைப் பற்றி இப்போதும் நீங்கள் படிக்கிறீர்கள். எங்கெல்லாம் பவுலும் பிற சகோதரர்களும் சென்றனரோ அங்கெல்லாம் பிராந்திய சபைகளைச் சந்தித்தனர். சபையைத் துன்புறுத்திக் கொண்டிருந்த வேளைகளிலும் கூட சபை உறுப்பினர்கள் சந்திக்க வழிகளையும் சந்தர்ப்பங்களையும் கண்டு கொண்டனர். அது போலவே நாமும் கர்த்தரை ஆராதிக்கவும் அவருடைய பணியைச் செய்யவும் இன்று தொடர்ந்து கூடிவருவது மிகவும் அவசியமாகும்.

மேற்சொன்ன யாவும் சபை கூடி வரும் போது, நாம் ஏன் அதில் பங்கு பெற வேண்டும் என்பதற்கான சில காரணங்கள் தான். ஒரு மாதத்திற்கு ஒரு முறை அல்லது எப்போதாவது போனால் போதும் என்ற அடிப்படையில் இல்லாமல், ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் அல்லது சபை கூடி வர முடிவு செய்யும் சகல நாட்களிலும் நாம் செல்ல வேண்டும். வேதாகமம் கூறுகிறது : “சபை கூடி வருதலை விட்டு விடலாகாது” என்று. சபை கூடி வரும் எல்லா சந்தர்ப்பங்களையும் இது குறிக்கும். நமது வாழ்வில் ஆராதனைக்கு முதல் இடம் தந்து, நாம் அவருக்கு உண்மையாக வாழ்ந்திட நமது கர்த்தர் உதவி செய்வாராக! இந்த வழியில் நாம் அவருக்கு விசுவாசமாக நடந்து கொள்ளும் போது, பிற அனைத்து வழிகளிலும் நாம் அவருக்கு விசுவாசமாக இருப்போம்.

# கேள்விகள்

1. கிறிஸ்தவர்கள் செய்யக்கூடிய மிகவும் வருந்தத்தக்க ஒரு தவறு எது?
2. ஒரு கிறிஸ்தவன் விசுவாசத்துடன் இருந்துகொண்டு ஆராதனையில் பங்கு கொள்ளாமலிருக்கமுடியுமா?
3. பிரிவினைச் சபையார் தவறாமல் வருடத்திற்கு இரண்டு கூட்டங்களில் பங்கு பெறுகின்றனர். அவை எவை?
4. ஆராதனையில் பங்கு கொள்ளாமைக்கு கிறிஸ்தவர்கள் சொல்லும் சில சாக்கு போக்குகளை பட்டியலிடு.
5. பிராந்திய சபையில் ஆராதிக்காமல் வீட்டிலேயே இருந்துகொண்டு ஒரு கிறிஸ்தவன் ஆராதிப்பது சாத்தியமா?
6. ஒரு உண்மை கிறிஸ்தவன் இப்படியெல்லாம் செய்வானா?
7. எப்பொழுது ஒரு கிறிஸ்தவன் ஆராதனைக்கு வராமலிருந்தால், மன்னிக்கப்படலாம்?
8. எதிர்பாராத தடைகள் என்றால் என்ன? விவரி.
9. எபி 10 : 22 - 27ஐ வாசி.
10. கர்த்தரிடம் நாம் ஏன் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும்?
11. சபை கூடுதலை விட்டுவிடுதல் என்றால் என்ன?
12. ஆராதனையைக் குறித்து எப்படி ஒருவருக்கொருவர் நினைவுபடுத்திக் கொள்ள முடியும்?
13. எபி 10 : 25 எந்த நாளைக்குறித்துப் பேசுகிறது?
14. மனப்பூர்வமாய் பாவஞ் செய்தால் என்ன சம்பவிக்கும்?
15. சபை கூடிவருதலின் நோக்கங்கள் சிலவற்றை கூறு?
16. ஆராதனைக்கென்று ஆதிக்கிறிஸ்தவர்கள் கூடிவந்தார்களென்பதற்கு இரண்டு உதாரணங்கள் கூறுக.
17. ஆராதனையில் பங்கு கொள்வதின் உண்மை நோக்கம் என்ன?

18. ஆராதனையில் பங்கு கொள்ளாமல், கிறிஸ்து கட்டளையிட்டபடி அவரை நினைவு கூற முடியுமா?

19. கர்த்தருடைய ஆராதனையில் பங்கு பெறத்தவறும் போது, அவருக்கு கொடுத்தலை நாம் என்ன செய்யவேண்டும்.?

20. ஆராதனைக் கூட்டங்களில் நான் உங்களோடிருப்பேன் என்று யார் சொன்னது?

21. எப்பொழுது கர்த்தர் நம்மோடிருப்பார்?

22. ஆராதனையில் ஒருவனுக்கு இருக்க வேண்டிய உறவின் மாதிரியான முக்கியத்துவத்தை விவரி?

23. நம்முடைய கூடி வருதலில் எது சார்ந்திருக்கிறது?